கழக வெளியீடு: உ௬௦

# உலகப் பெருமக்கள்

[முதற் புத்தகம்]

ஆசிரியர்:

தாகூர் சட்ட விரிவுரையாளர்,

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை,

எம். ஏ., எம். எல்.

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: October 1939.
Reprints: May, 1941; Sep., 1945; April, 1947; Nov., 1956.

# ULAGAP PERUMAKKAL-I
(Great Contemporaries)

[All Rights Reserved]

*Published by*
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.
*Head Office*:
98, EAST CAR STREET, TIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1100.

# பதிப்புரை

இங்கிலாந்து, அயர்லாந்து, ருஷ்யா, இத்தாலி, இந்தியா போன்ற நாகரிகம் மிகுந்த பல பெரு நாடுகளில், அறிவாலும், திருவாலும், ஆற்றலாலுஞ் சிறந்த பெருமக்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுள் ஒவ்வொரு வகையாற் சிறந்தவராக உலகத்தாரால் மதிக்கப்படும் ஏழு பெருந் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளைக்கொண்டது **"உலகப் பெருமக்கள்"** என்னும் இந்நூல். உலகத்துள்ள பன்னாட்டுப் பெருமக்களுள் தலைசிறந்த ஏழு பெருமக்கள் வரலாறு என்பதே இந்நூலின் முழுப் பெயராகும்.

ஆங்கில மொழியிலுள்ள அரியதொரு முதல் நூலைத் தழுவித் **தாகூர் சட்ட விரிவுரையாளர்** திருநெல்வேலி திரு. **கா. சுப்பிரமணிய பிள்ளை**, எம்.ஏ., எம்.எல்., அவர்களால் இந்நூல் மிகவும் எளிய முறையில் தமிழில் எழுதப்பட்டதாகும். திரு. பிள்ளை அவர்களின் அறிவாற்றல்களைப் பற்றித் தமிழ்நாடு நன்கு அறியும்.

பெருமக்கள்தம் வரலாறுகளைப் படித்தறிதல் நல்வாழ்க்கைக்குச் சிறந்ததொரு சாதனமாகும் என்பது கற்றறிந்தோர் கண்ட நன்முடிபாம். பண்டைக் காலத்திலிருந்த பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது ஒரு முறை; இக்காலத்திற் சிறந்து விளங்கும் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது மற்றொரு முறை. இவ்விரண்டனுள்ளும், பின்னதே இக்காலத் தேவைகளுக்கேற்பச் சீரிய முறையாகக் கருதப்பட்டு வருகின்றது. அக்கருத்தை யொட்டியே இந்நூல் பதிக்கப்பட்டு வெளிவருகின்றது.

இந்நூலைத் தமிழில் எழுதத் தொடங்கு முன்னரே ஆங்கில அரசாங்கத்தின் முதன் மந்திரியாயிருந்தவரும், இதன்கணுள்ள ஏழுபெருமக்களில் ஒருவருமாகிய **ராமசே மாகடனால்ட்** 1937 நவம்பரிறுதியில் காலஞ் சென்றுவிட்டனர். மற்றொருவராகிய **ஹாவெலாக் எல்லிஸ்** என்ற ஆங்கில உளநூலறிஞர் இந்நூல் எழுதத் தொடங்குங்கால் உயிருடனிருந்தார்; ஆனாலும் இந்நூல் அச்சேறி வெளி வருவதற்குள் அவர் இறந்துபட்டமை மிகவும் வருந்தத்தக்கதாகும்.

இந்நூலைத் திருந்திய முறையில் எழுதியளித்த திரு. **கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்களுக்கு எங்கள் கழிபெரு நன்றி உரியதாகும்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | உயர்திரு. ஆகாகான் | 1 |
| உ. | தலைவர் திவாலரா | 14 |
| ங. | ஹாவெலாக் எல்லிஸ் | 28 |
| ச. | ஸ்டாலின் | 46 |
| ரு. | டேவிட் லாயிட் ஜியார்ஜ் | 69 |
| சு. | ராம்சே மாக்டனல்ட் | 87 |
| எ. | முசோலினி | 103 |

# உலகப் பெருமக்கள்

## க. உயர்திரு. ஆகாகான்[1]


ஐரோப்பாவிலுள்ள நாடுகளை மேற்புலம் அல்லது மேலைநாடு என்றும், ஆசியாவிலுள்ள நாடுகளைக் கீழ்ப் புலம் அல்லது கீழைநாடு என்றும் கூறுவது மேலைநாட்டு அறிஞர் மரபு. மேலைநாட்டு நாகரிகத்திற்கும் கீழைநாட்டு நாகரிகத்திற்குமுள்ள வேறுபாடு மிக அதிகமாதலால், கீழைநாட்டில் உதித்த பெரியாரொருவர் மேலை நாட்டில் தக்க இடம் பெறுதல் அரிது; அதிலும், ஒரே காலத்தில் கீழ்த்திசையிலும, மேற்றிசையிலும் ஒதத மதிப்போடு விளங்குதல் மிக அருமையாகும். தற்காலத்தில், ஆகாகான் என்ற பெயர்பெற்ற மகம்மதுஷா[2] என்பவர் இவ் வுண்மைக்குப் புறநடையாகத் திகழ்கின்றார். அவருடைய நிலை தனிப்பட்ட சிறப்புடையதாய் இன்னதென்று எளிதில் விளங்காது விநோதமாய்த் தோன்றுந் தன்மை யது. மேலைநாட்டில் அவர் செல்வ ஆட்சியிற் சிறந்த ஒருவ ராயும், இலண்டன்மாநகரத்தில் தக்க சமுதாய மதிப் புடையவராயும், இலண்டன், ஜினிவா, பாரிஸ் என்னும் நகரங்களில் மதித்துப் பேசப்படும் அரசியல் வல்லவராயும், விளையாட்டு முறையில் எல்லாரும் நன்கறிந்த பந்தயக் குதிரை யுடையவராயும் இருப்பவர்.

கீழைநாட்டில் அவர் அளவிறந்த, வியக்கத்தக்க ஆற்றல்கள் உடைய சமய அதிகாரியாய் விளங்குகின்றார்,

---

1. H. H. The Aga Khan. 2. Mahammad Shah.

இந்தியா முழுவதிலும், பாரசீகநாடு, அராபியா, ஆப்கானிஸ்தான், ஸிரியா முதலிய இடங்களிலும், ஆப்பிரிக்காவில் சான்ஸிபார், திரிப்போலி முதலிய மத்திய மாகாணங்களிலும், மலாய் நாடுகளிலும் கோடிக்கணக்கான மகம்மதியர் அவரைச் சமயத் தலைவராகவும், அரசியற் றலைவராகவும் மதிக்கிறார்கள். அவர்கள் மகம்மது நபியின் வழிவந்தவராய்ப் பாதிக் கடவுட்டன்மையுடையவராய் இற்றைநாளிற் சிறந்து வாழும் தலைவர் என்று அவரை நம்பி அவர் சொல்லைச் சட்டமாகவும், கடவுட் டன்மை பொருந்தியதாகவும் எண்ணுகின்றனர். அவருக்குச் சேனையாவது போலீஸ் படையாவது கிடையாது. ஒரு சதுர மைல் அளவு நிலங்கூட அவரது ஆட்சிக்குட்பட்டதில்லை பம்பாய்க்கருகிலுள்ள மஸ்காவோன்[1] என்னுமிடத்தில் அவரது அரண்மனை சாதாரண ஒரு வீடுபோலுள்ளது. அங்கிருந்து அவர் பிறப்பிக்கும் கட்டளைகளுக்கு உலகக் குறுக்களவிற் பாதியிடத்திலுள்ள மக்கள் தட்டுத் தடையில்லாமல் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். இஸ்மேயிலர்[2] களுடைய பரம்பரைத் தலைவர் என்ற நிலைமையில், கீழ்ப்படியாதவர்களை மதத்தின் புறம்பே தள்ளும் உரிமையொன்றே அவரது அதிகாரத்திற்கு ஆதாரவாய் இருப்பது.



உயர்திரு. ஆகாகான்

1. Masgaon. 2. Ismailians.

மகம்மதுநபி இறந்தபின் இஸ்லாம் மதத்தினர் ஷீயர்[1] என்றும், சுன்னியர்[2] என்றும் இரண்டு பெரும் பிரிவினராகப் பிளவுபட்டனர். ஷீயர்களுக்குத் தலைவர் மகம்மதுவின் மகள் பட்டிமா என்பவளின் கணவனாகிய ஆலி என்பவன். ஷீயர்கள் பல உட்பிரிவுடையவர்கள். ஆலியின் வழிவந்த இஸ்மெயிலை[3]ப் பின்பற்றியவர்கள் ஒரு பிரிவினராயினர். அவர்களுக்கு இஸ்மெயிலர் என்பது பெயர். இஸ்மெயிலின் கொடிவழித்தலைவர் (பரம்பரை வாரிசு) ஆகாகானவர். இஸ்லாம் மதத்தின் எல்லாப் பிரிவினர்களுள்ளும் இஸ்மெயிலர் மதப்புறம்பான மிக்க அதிசயப் போக்குடையவர்கள். வட்டி வாங்குதலை இஸ்லாம் மதம் கண்டிக்கிறது. இது மகம்மதியர்களது வியாபாரத்துக்குத் தடையாகவிருக்கிறது. ஆனால் பம்பாயிலும் சான்ஸிபாரிலுமுள்ள இஸ்மெயிலர் சிலர் பெரிய வியாபாரிகளாய் இருப்பதோடு பணம கொடுக்கல் வாங்கலும் செய்துவருகிறார்கள். 'இத்தொழில்களில் நியாயமான ஊதியம் எடுத்துக்கொள்ளுதல், வட்டி வாங்குதல் ஆகாது; அது நியாயமான வர்த்தகமே' என்பது அவர்கள் கொள்கை. கொரானிற் காணப்படும் வாக்கியங்களுக்கு வழக்கத்திற்கு மாறான பொருள்கொள்ளுதல் அவர்கள் இயல்பு. இரம்சான் பண்டிகையில் விரதமிருப்பதும் வாழ்க்கையில் ஒருமுறையாவது மெக்காவுக்குப் போய்வர வேண்டுமென்பதும் பொதுவாக மகம்மதியர்களுடைய கட்டாயக் கோட்பாடு. ஆனால் இஸ்மெயிலர்கள் இரம்சானைக் கையாளுதல் கட்டாயம் என்று கொரான் கூறவில்லை என்கிறார்கள். இவ்வாறே சென்ற ஆயிரம் ஆண்டுகளாய் இஸ்மெயிலர் தமக்கென வெவ்வேறு கொள்கைகளும் நம்பிக்கைகளும் தத்துவங்களும் சூட்டங்களும் ஏற்படுத்திக்கொண்டார்கள். பல நூற்றாண்டுகளாகப் பாரசீக நாடே அவர்களுடைய தாயகமாய் இருந்தது. ஆகாகானுடைய முன்னோர்கள் அங்கே தான் குடியிருந்தனர்.

1. Shiahs. 2. Sunnis. 3. Ismail.

அவர் குடும்பத்தில் பலவகைக் குழப்பங்கள் தோன்ற அவற்றில் வெற்றி நாட்டிய தனிப்பெரியோர்களும் அவ்வப்போது தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய ஆஸன் ஆலி **சக்காரியா சலாம்**[1] என்பவர் ஓர் இரகசியக் குழுவுக்கு மாபெருந் தலைவர். அக் குழுவினை மத்தியகாலத்தில் ஐரோப்பியர் 'கொலைஞர் குழு' என்றழைத்தனர். அக் குழுவினர் பாரசீகநாட்டு மலைகளில் ஒருவருஞ்சென்றடையக் கூடாத பள்ளத்தாக்கிற் கூடித் தங்கள் சூழ்ச்சிகளை உருப்படுத்தினர். அவர்கள் தங்கள் மாபெருந் தலைவரின் கட்டளைக்கு மறுபேச்சு இல்லாமலே முற்றிலும் கீழ்ப்படிகின்ற விரதமுடையவராய் இருந்தனர். அரசர்களையும், அதிகாரிகளையும், படைத்தலைவர்களையும் நாடெங்குஞ் சென்று கொன்று அவர்கள் செய்துவந்த அட்டூழியங்களால் எல்லாருக்கும் பெருந்திகில ஏற்பட்டிருந்தது. ஹுலாகு[2] என்னும் மன்னன் அவர்களை வேரோடு அழிக்க முயன்று அவர்கள் சூழ்ச்சி நிலயத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது அவர்களிற் சிலர் இந்தியாவுக்கு ஓடிச் சிந்து நாட்டில் தங்கினர். அவர்கள் மாபெருந் தலைவர் எகிப்துக்குத் தப்பியோடினர். ஆனாலும் அவர்களுடைய ஆதிக்கம் எகிப்திலுங்கூடத் தலையெடுத்து விளங்கிற்று. கொலைஞர்கள் ஒழிந்துபோயினும் இஸ்மெய்லர் நாளடைவில் விருத்தியடைந்து சக்காரியா சலாமின் சந்ததியாரைத் தங்கள் தலைவர்களாகக் கருதிவந்தனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுவில் இஸ்மெயிலர் தலைவராகிய **மகம்மது ஆசன்**[3] என்பவர் பாரசீக நாட்டு மன்னன் ஷா என்பவன் மகளை மணந்து மெஹலெட் என்னும் (மண்டல) மாகாணத்துக்கு ஆட்சியாளராய் (கவர்னராய்) நியமிக்கப்பட்டார். மெஹலெட் அதிபதிக்கு ஆகாகான் என்ற பட்டம் உரியது. ஷா இறந்தபோது மகம்மது ஆசன், தான் அவருக்கு வாரிசு என்று வாதித்தார். ஆனால் அவர் வாரிசுப் போட்டியில் தோல்வி

1. Hasfan Ali Zakaria Salam. 2. Hulagu.
3. Mahammad Hasan.

யுற்றுப் பம்பாய்ப்பக்கம் ஓடி வந்து மாஸ்கோவோன் என்ற இடத்தில் தங்கினார். அவரே தற்கால ஆகாகானுக்குப் பாட்டனார்.

தற்கால ஆகாகானாகிய மகம்மது ஷா என்பவர், தம் பாட்டனார் வீட்டில் முற்றிலும் கீழைநாட்டு முறையில் வளர்க்கப்பட்டு வந்தார். தம் பாட்டனாரிடமிருந்து அவர் தம் வாழ்க்கைக் கருத்துக்களையும் நடத்தையையும் உரிமையாகப் பெற்றுக்கொண்டார். பாட்டனார வாணிகத்திற் சிறந்தவர். பம்பாயில் இந்துக்கள் பலரை மகம்மதியர்களாக்கி அவர்கள் உதவி கொண்டு விரைவில் பணக்காரரானவர். அவரைப் பின்பற்றியவர்களுக்குக் கோஜா[1]க்கள் என்பது பெயர். மேலும் அவர் எல்லாவகையான விளையாட்டிலும், முக்கியமாகக் குதிரைப் பந்தயத்திலும், மிகுந்த விருப்பமுடையவர். நான்கு நல்ல குதிரைகள் பூட்டிய வண்டியில் தம்மூரிலிருந்து பந்தயமேடைக்குத் தம் பேரனையும் அழைத்துக்கொண்டு அவர் செல்வார். தம் குழுவினராகிய இஸ்மெயிலரிடம் மிகுந்த பற்றுடையவர். அவர்களுக்காக மிகவும் உழைத்தவர். இந்தியாவில் ஆங்கில ஆட்சியால் தம் காரியமும் அவர்கள் காரியமும் செவ்வையாய் நடைபெறுமென்று நம்பி, தம்மவர் ஆட்களைச் சேர்த்து ஆப்கானிஸ்தானத்திலும் சிந்துவிலும் ஆங்கிலேயர் பக்கம் நின்று போர் புரிந்தார். அவரிடத்திற் கடுமையான மதப்பற்றுக் கிடையாது. அவர் மிகவும் கண்ணியத்தோடு வாழ்ந்து வயது முதிர்ந்து இறந்தார். அவர்தம் மகன் அவருக்குப்பின் நெடுநாள் வாழவில்லை. 1885-ல் எட்டு வயதில் அவர் பேரன் மகம்மது ஷா ஆகாகானாகி விட்டார்.

பாட்டனார் இறந்தபின் ஆகாகானை மேற்பார்த்து வந்தவர் அவருடைய தாயார். அவர் பாரசீகநாட்டு அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்; இந்தியக் கல்வியும் பாரசீகக் கல்வியுங் கலந்து தம் மகனுக்குக் கற்பிக்கும்படி ஏற்பாடு செய்தார்; ஓர் ஆங்கில ஆசிரியரையும் நியமித்திருந்தார்.

1. Kojas.

ஆகாகான் இயற்கையாகவே சுறுசுறுப்பும் அறிவுக் கூர்மையும் உடையவராய் இருந்தமையால் கணக்கிலும் இலக்கியத்திலும் மிகத் தேர்ச்சி யடைந்தார். மொழிகளை எளிதில் அவர் கற்றுக்கொண்டார். நல்ல நினைவாற்றல் இருந்தபடியால் அவர் ஆங்கிலக் கவியாகிய செகப்பிரியர்[1] நாடகங்களிலிருந்தும் பாரசிகப் பெரும் பாவலராகிய ஆவிஸின்[2] கவிகளிலிருந்தும் மேற்கோள்கள் எளிதாகவும் விரைவாகவும் எடுத்துக் கூறுவார். பதினாறு வயது ஆனபோது அவர் தம் காரியத்தைத் தாமே பார்க்கக்கூடிய ?மையுடையவரானார்.

தம்முடைய பாட்டனாரைப்போலவே இவரும் ஆடம்பரமான வாழ்க்கை நடத்தினார். இவர் பரித்தொழுவிற் குதிரைகள் நிறைந்திருந்ததோடு வீட்டில் வேலைக்காரர்கள் நிரம்பியும் இருந்தனர். பூனா, கராச்சி, சிநது முதலிய இடங்களில் இவர் தம்மவர்களைப் பார்க்கப் போனபோது அஃது ஓர் அரசர் ஊர்வலஞ் சென்றாற்போலவேயிருந்தது. இவர் தம் முறைப்பெண்ணாகிய ஷா ஸாடாவை மணந்த போது ஒரு வள்ளல்போலவே எல்லாரையும் வரவேற்றார். சிறப்புக்களெல்லாம் பூனாவில் நடைபெற்றன. ஊருக்கு வெளியே இருபதினாயிரம் விருந்தினர் இருக்கக்கூடிய கூடாரங்கள் போடப்பட்டிருந்தன. இந்தியாவிலுள்ள பரதநாட்டியக்காரர்கள், செப்படி வித்தைக்காரர்கள், சர்க்கஸ்காரர்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தனர். அவர்கள் எல்லோருக்கும் அரசமுறையில் உணவும் பரிசும் அளிக்கப்பட்டன.

தம் பாட்டனாரைப்போலவே இஸ்மெயிலருக்காகவும் இந்தியாவிலுள்ள எல்லா மகம்மதியர்களுக்காகவும் அவர் எப்போதும் உழைத்து, பிற இந்தியர்கள் செல்வம், வணிகம், அரசியற்றுறை முதலியவைகளில் முற்போக்குடையவர்களாய் இருத்தலைக்கண்டு மகம்மதியரும் அவர்களோடு போட்டி போட்டு மேலான நிலைக்கு வரவேண்டு

1. Shakespeare. 2. Hafiz.

மென்று எடுத்தோதி வந்தார். அவர்களுடைய முதல் தேவை கல்வியே ஆதலின், எங்கும் அவர்களுக்குக் கல்வியைப்பற்றிப் போதித்து வந்தார். அவாகள் தஙகளேயும் தங்கள் மக்களேயும் படிப்பிக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்; கலாசாலேகள் திறப்பித்தார். அலிகாரில்[1] மகம் மதியக் கல்லூரி அமைப்பதற்குத் தாராளமாக நன்கொடை கொடுத்தார். அரசப் பிரதிநிதியாகிய மின்டோ[2] பிரபுவினிடம் மகம்மதியர்களுக்குப் பொதுநல வாழ்க்கையில் அதிக வசதிகள் வேண்டுமென்று எடுத்துக்கூறச் சென்ற தூதுக் குழுவுக்கு அவர் தலேமை வகிததார். அலிகார் பல்கலேக் கழகத்தில் ஒரு காலத்தில் அவர் பேசியபோது, "இந்தியாவில் என்னேடு ஒத்த சமயத்தாருக்கு நான் சொல்லும் ஒரு மொழி யாதெனில் பல்கலேக்கழகத்திலே முழு நாட்டம் வையுங்கள். அதன் வழியாக முதற்படிக் கல்வி, இரண்டாம்படிக் கல்வி, வர்த்தகக் கல்வி, தொழிற் கல்வி முதலியவற்றிற்குத் தெளிவான வழி வகுப்பதற்கு அடிப்படை கோலுங்கள் என்பதே," என்ருர்.

மகம்மதியர்களுக்குள் ஷீயருக்கும சுனியாகளுக்கும் உள்ள சண்டை சச்சரவுகளே ஒழிப்பதற்கு அவர் மிகவும் முயன்ருர் தம்மவர் ஷீயராயிருந்து சுனியர் பிரிவுக்குச் சென்ற மூவரைக் கொலே செய்தபோது கொலேஞர்களே மதத்திற்குப் புறம்பாக்கி அவர்களோடு கிராமத்தார் கலவாதிருக்கும்படி கட்டளேயிட்டார். அவர் கட்டளேக்குச் சமுதாயம் முழுதுங் கீழ்ப்படிந்தது. எல்லா மகம்மதியர் களேயும் ஒன்று சேர்த்தற்பொருட்டு அகில இந்திய மகமமதிய சங்கம் அமைப்பதற்கு அவர் உதவி புரிந்தார். துருக்கி மகம்மதியப் பேரரசு இஸ்லாமுக்கு முற்காலத்திற் போலத் தற்காலத்தில் தலேமையிடமாக இல்லாதிருப்பது தெரிநது இந்தியா அவ்வாறு முக்கிய நடுவிடமாக இருக்க வேண்டுமென்று கருதினர். நிலேத்த ஆர்வத்தோடு அவர் இளமையிலேயே உழைத்து வந்தமையால் முப்பதாவது வயதிலேயே அவர் ஒரு பெரிய தலேவராக மதிக்கப்பட்டார்.

1. Aligarh. 2. Minto

அவர் இந்தியாவிலே பிறந்து வளர்ந்தாலும் மகம்மதிய மதம் பரவியுள்ள பல நாடுகளுக்கு அவர் செல்ல வேண்டியிருந்ததால் மகம்மதிய மதப் பொதுத் தலைவராக அவர் பெயர் பெற்ருர். அவர் தம்மவர் காரியத்தைக் கவனிப்பதற்காக மலாய்நாடு, எகிப்து, உகாந்தா[1], கெனியா, சான்ஸிபார் முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்தார். செல்வமும் அதிகாரமும் மிகுதியுடைய ஐரோப்பாக் கண்டத்து இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கே புதுக் கருத்துக்களையும் புது முறைகளையும் அறிந்தார் சீமையில் வின்சர்[2] அரண்மனையில் விக்டோரியா மகாராணியுடன் அவர் தங்கியிருந்தார். பெர்லினில் கெய்சருடைய விருந்தினராய்த் திகழ்ந்தார். சீமையில் ஏழாவது எட்வர்ட் முடிசூட்டு விழாவிற்கு அவர் சென்றிருந்தார். அடிக்கடி இங்கிலாந்துக்குப்போய் அங்கே நெடுநாள் தங்கியிருந்து ஆங்கில வாழ்க்கையைப் பழகி அவர்களுடைய பந்தடி விளையாட்டுக்களிலும் மற்றப போர்களிலும் பயிற்சியுற்ருர். அதனல், அவர் தம் இந்திய நோக்கம் மாறப் பெற்று உலகப் பொதுநோக்க முடையவரானர். அவர் இந்திய மகம்மதியக் கொள்கைகளை வெளிநாட்டினர் நோக்கும் முறையில் கவனிக்கப் பழகினர். பல நாடுகளிற் காரியங்களைக் கவனிக்கவேண்டி யிருந்தமையால் அவர் அகில இந்திய மகம்மதிய சங்கத்தின் தலைமையினின்று நீங்கினர். தம் முதல் மனைவியைத் தள்ளிவிட்டு தெரிசா என்னும் இத்தாலிய மாதினை அவர் மணந்தார். அவளுக்குப் பிறந்த மகன் ஆலிகான் என்பவன்.

ஆங்கில அரசு பொதுவாக இநதியாவுக்கு நல்லதென்றும் இந்தியாவில் எண்ணிக்கை குறைவாகவுள்ள மகம்மதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கத்தக்க அரசு அதுவேயென்றும் தம் பாட்டனுரைப்போலவே அவர் கருதினர். ஒருகாலத்தில் அவர் சொன்னதாவது: “செல்வர்களுக்கும எளியவர்களுக்கும் சமமாகவும் வெவ்வேறு பிறப்பு

1. Uganda. 2. Windsor.

வளர்ப்புடைய மக்களுக்குப் பொதுவாகவும் நீதி செலுத்து கின்ற அரசாங்கத்தின்கீழ் வாழும் நன்மை நமக்கு ஏற்பட் டுள்ளது. நம்முடைய இனமக்களின் நிலைமையை உயர்த்து வதற்குள்ள முயற்சிகள் செய்ய நமக்கு முழு உரிமை இப்போது இருக்கிறது. இந்தியாவிலுள்ள நம் மக்களை ஆங்கிலேயருடைய நிலைக்கு உயர்த்துவதே நாம் செய்ய வேண்டிய கடமையாம்,'' என்பதே.

ஆகாகான் ஆங்கிலேயரிடம் நிலைத்த அன்புடைய வராய் இருந்தார் ஜெர்மனியோடு உலகபோர் தொடங் கியபோது ஆங்கிலேயா பக்கம் துணையாக நிற்கும்படி எல்லா நாட்டிலுமுள்ள இஸ்மெயிலர்களுக்கு அவர் தந்தி யடித்தார். தாமே யொரு சிப்பாயாக ஊழியஞ் செய்வ தாகக் கூறினர். ஆங்கில அரசாங்கத்தார் அவரை அவ்வாறு செய்ய இடங் கொடுக்கவில்லை; அவருதவியை மற்ளெரு வழியில் நாடினர். ஜெர்மனியோடு துருக்கி சேர்ந்து கொள்ளவே, துருக்கி சுல்தான் எல்லா மகமதியர்களையும் ஆங்கிலப் பிரஞ்சுக்காரர்களுக்கு எதிரிடையாக விருக்கும் படி தூண்டினர் சுல்தான் கட்டளைக்கு மாருக இந்திய மகம்மதியர்களை இயக்குவதற்கு ஆகாகான் துணைபுரிந்தார். அவரை ஓர் அரசாளும் மன்னராக ஆங்கிலேய அரசாங் க்த்தார் மதித்து அவர் வரவுக்குப் பதிஞெரு குண்டுகள் போடும்படி ஏற்பாடு செய்தனர். போர் நடந்த காலம் முழு வதிலும் அவர் எங்கும் யாத்திரை செய்து சொற்பொழிவு கள் நிகழ்த்தி இலவச சிப்பாய்களும், நிதிகளுஞ் சேர்த்து இந்தியா, ஆப்பிரிக்கா, அராபியா முதலிய நாடுகளில் ஜெர் மனிக்கு எதிர்ப் பிரசாரம் நடத்தினர்.

போா முடிந்தபின் ஆங்கிலேயர் துருக்கியை அறவே அடக்க முயன்றபோது அதற்கு ஆகாகான் இணங்கவில்லை. இந்தியாவுக்குப் பயனில்லாத வேலைகளில் இந்தியச் சேனையை இந்தியாவுக்கு வெளியே பயன் படுத்துவது அவர் மனத்துக்கு ஒவ்வாதிருநதது. அவர் அக் கொள்கை யில் ஆங்கிலேயரை ஊக்கத்துடன் எதிர்க்காவிட்டாலும்

சமாதானச் சங்கத்துக்குச் சென்று அங்கே தம் சொல்லாற்றலைப் பயன்படுத்தியதோடு ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு ஆங்கிலேயருடைய மிகையான நிலையைக் கண்டித்து எழுதிவந்தார். சீமையில் அமைச்சர் குழுவுக்கும் தம் கருத்துக்களை மிகத் தெளிவாக அறிவித்தார். ஆங்கிலமக்கள் தம் நாட்டுப் பொறுப்புக்களை அவர் அசட்டை செய்தாரென்றும், தமக்குத் தொடர்பில்லாத காரியங்களில் தாம் புகுந்து துருக்கியர் சார்பினராயினர் என்றுங் குறை கூறினர். துருக்கியர் தங்கள் உள்நாட்டுக் காரியங்களில் அவர் தலையிடுவது தவறு என்றார்கள். இந்தியாவிலும் கீழை நாடுகளிலும அவர் மேலைநாட்டுச் சார்பில் மையலுற்று வீண் விளையாட்டுகளிற் பணத்தையும் நேரத்தையும் செலவழித்து இந்தியன் அல்லது மகம்மதியன் இருக்கவேண்டிய நிலையில் இருக்கவில்லையென்று பலர் கண்டனஞ் செய்தார்கள். இஸ்மெயிலர்களுள் சிலரும் அவருக்கு எதிரியானார்கள்.

ஆகாகான் எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாது தாம் கொண்ட கொள்கைகளில் உறுதியாக நின்றார். இந்தியாவும் ஐரோப்பாவும் ஒன்றோடொன்று தொடர்புடையனவென்றும், பண்டைநாளில் உள்ள பிரிவுக்கும் பகைமைக்கும் இக் காலத்தில் இடமில்லையென்றும் அவர் கருதினார். அவர் தம் ஐரோப்பியத் தொடர்புகளை விரிவு செய்து கொண்டார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பொருளாதாரத் தொழில்களில் தம பணத்தை ஈடுபடுத்திக் கெட்டித் தனமாகப் பொருள் ஈட்டிக்கொண்டார். பிரான்சிலும் பரித்தொழுக்கள் அமைத்துத் தாம் கருதிய நன்முறையிற் குதிரைகளை வளர்த்து டெர்பி[1] முதலிய இடங்களில் நடக்கும் குதிரைப் பந்தயங்களிற் பலமுறை அவர் வெற்றி பெற்றார்: ஐரோப்பியத் தத்துவ நூல்களையும் அரசியல் நூல்களையும் அவர் நன்றாகக் கற்றார். தம் இத்தாலிய மனைவி இறந்துவிட்டபோது ஒரு பிரெஞ்சு மாதை அவர் மணந்துகொண்டார்.

---

1. Derby.

இதே காலத்தில் இந்தியாவுக்கும் அடிக்கடி வந்து இந்திய அரசியலாளர்க்குத் தம் கருத்தை அவர் எடுத்துரைத்தார். இந்தியா ஆங்கிலப் பேரரசில் ஒரு தனிப் பகுதியாகவும் மாகாண அரசுத் தொகுப்பாகவும் இருக்க வேண்டுமென்பது அவர் கொள்கை. அவர் சொன்னதாவது: "என் வாழ்நாள் முழுவதிலும் நன்கறிந்து நம்பியிருப்பது யாதெனில், இந்தியாவுக்கும் ஆங்கிலநாட்டுக்குமுள்ள தொடர்புகளைப் பலப்படுத்துவது, இருநாட்டிற்கும் நன்மை பயப்பதோடு மனிதவர்க்கத்திற்கும் நாகரிகத்துக்கும் அவசியமானது. இந்தியா ஆங்கிலநாட்டுடனும், மக்கள் குடியேற்ற நாடுகளுடனும் ஏகாதிபத்தியத்தால் தொடர்புற்றுத் தன்னரசு செலுத்தும் சுயாதீன ஆசியப் பெருநாடாக வளர்ந்தோங்க வேண்டும் என்றும், அரசியற் பொருளாதார அறிவு முயற்சிகளில் இருநாட்டுக்கும் பொதுதொடர்பு இருக்கவேண்டும் என்றும் நான் விரும்புகின்றேன்," என்பதே.

தம் இனத்தாருக்குத் தாம் செய்ய வேண்டிய கடமையே முதன்மை பெறுதற்குரியதென அவர் உணர்ந்தார். இந்தியாவில் அரசியல் அதிகாரம் ஆங்கிலேயரிட மிருநது இந்தியர்களுக்கு மாறுந் தருணத்தில் எண்ணிக்கையிற் குறைவுள்ள மகம்மதியர்கள் தங்கள் பிளவுகளைத் தொலைதது விரைவில் ஒன்றுசோந்து தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று அவர் மிகவும் வற்புறுத்தி உழைத்தார். எண்ணிக்கைக் குறைவுள்ள பகுதியினர் எல்லாருஞ் சேர்ந்து கிட்டத்தட்டப் பதினைன்குகோடி ஆயினர். அவர்கள் இந்துக்களோடு போட்டிபோட வேண்டுமென்று கருதினர். இந்த வேலையை அவர் தொடங்கியபின் சுகமாகக் கலைத்துறைகளில் மகிழ்ந்து இருப்பதை விடுத்துச் சுறுசுறுப்புள்ள அரசியற் றலைவரானர். தம்முடைய உறுதியினல் மற்றவர்களைத் தம் பக்கம் இழுத்துக் காரியம் முடிக்கவல்ல திறமையுடையவரானர். சீமையில் 1930-ல் கூடிய வட்டமேசை மகாநாட்டில் இந்தியக் கொள்கைகள்

முற்றிலும் ஆராய்ச்சி செய்து வாதிக்கப்பட்ட பொழுது ஆகாகான் இஸ்மெயிலருக்கு மாத்திரமல்ல இந்திய மகம்மதிய சமுதாயம் முழுவதற்குமே தலைவராகவும் இந்தியப் பிரதிநிதிகளுள் முதன்மை வாய்ந்தவர்களி லொருவராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். 1932-லும் அதற்குப் பின்னும் அகில தேசச் சங்கத்திலும், படை யொழிப்பு மகாநாட்டிலும் அவர் இந்தியப் பிரதிநிதி யாகத் திகழ்ந்தார்.

அவர் இன்றைக்கு உலகப்பொதுவாய் உள்ள பெருந் தலைவர்களுள் ஒருவராவர். அவர் கீழை நாட்டிலுள்ள ஒரு பெரிய மக்கட் குழுவினுக்குப பொறுப்பான பேச் சதிகாரம் உடையவராய் இருக்கிறார். அவர் மேலைநாட் டுடன் நேரே தொடர்புடையவராயும் இருக்கிறார். கீழ்த் திசையையும மேற்றிசையையும் பிரிக்கும பிளவினைத் தொலைத்து இரண்டிடத்திலும் மேலான நிலையைத் தமக்குத் தேடிக்கொண்டார். பிறப்பு, வளர்ச்சி, சமுதாய நிலை, நோக்கம் என்பவைகளில் கீழை நாட்டினருள் பெரிய தலைவராய் அவர் விளங்குகின்றார். கோடிக் கணக்கான கீழை நாட்டு மக்கள் அவர் முன்னோரை வணங்கியது போலவே அவரையுங் கடவுட்கு அடுத்த நிலையில் மதித்து அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து காணிக்கை கொடுக்கிறார்கள். அக் காணிக்கை, நூறு ஆண்டுகளுக்கு முன்போலவே இப்போதும் மத்திய ஆப்பிரிக்கா முதல் மலாய்நாடுவரையுள்ள நெடுந் தூரமான நாடுகளின் கிராமங்களிலிருந்து வசூல் செய்யப் பட்டுக் கோவேறுகழுதைமேலும் ஒட்டகையின்மேலும் முத்திரைகள் வைக்கப்படாத தோற்பைகளில் இட்டு ஏற்றப்பெற்று, மலைகள் வழியாகவும் காடுகள் வழியாக வும் கள்ளர் பயமின்றி மஸகாவோனிலுள்ள அவர் அரண்மனைக்கு ஆண்டுதோறும் வந்து சேருகிறது. இவ்வாறு கீழைநாட்டில் அவர் அதிகாரம் பரம்பரையான தெய்வ உரிமையாக ஏற்பட்டுள்ளது.

மேல்நாட்டில் தம் சொந்த முயற்சியாலும் ஆளுந் திறனாலும் தக்க பதவியை அவர் தமக்கு உண்டாக்கிக் கொண்டார். அங்கே அவர் சொற்றிறம் மிகுந்த ஒரு பொருளாளர். அவர் பக்கிங்காம் அரண்மனையிலும், இங்கிலாந்திலும் பிரான்சிலுமுள்ள பிரபுக்களுடைய கிராம வீடுகளிலும் விருப்பத்தோடு வரவேற்கப்படுகின்ற சமுதாய விருந்தாளி. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்திய மகம்மதியரின் முக்கிய தலைவராகவும் வாக்காளராவும் அவர் கருதப்படுகின்றார். விரைவில் இந்தியாவில் பெரிய மாறுதல்கள் ஏற்படக்கூடும். நாளை யேற்படும் இந்திய அரசியலில் மகம்மதியாகள் உரிய பங்கினைப் பெறுவதில் ஆகாகானே பரிந்து பேசித் துணைசெய்ய வல்லவர். ஆதலின் இதுவரை அவர் செய்த வேலை வழி வகுத்தற்கே பயன்பட்டது. எதிர்காலத்தில்தான் மிக உன்னதமான பதவி வகிக்கும் வேலை அவருக்கு அமைவதாகும்.

# ௨. தலைவர் திவாலரா[1]

திவாலராவின் வரலாறுபோல நேர்மையாகக் கூறப்படாத தற்கால வாழ்க்கை வரலாறு வேறு யாதுமில்லை. பத்திரிகை யுலகம் பல ஆண்டுகளாக அவரைக் கொடிய மதப்பித்துப் பிடித்தவர் போலவும் செயலுக்குக் கொண்டு வர முடியாதவற்றைக் கனவு காண்பவர் போலவும் படம் பிடித்துக் காட்டிவிட்டது. அவர்தம் நேரான மனப்பான்மையைக் கருதினால் அவர் அழுத்தமான சனநாயக வாதி யாவர். தம் கருத்தையாவது தம் ஆட்சித் திறத்தையாவது தம்மைப் பின்பற்றுபவரிடம் அவர் வலிந்து புகுத்துவதில்லை. தம் மக்களின் ஆர்வ மிக்க நோக்கங்களை வெளிப்படுத்துவதற்குத் தம் சிறந்த ஆட்சித் திறனை அவர் பயன்படுத்துபவர். அவர் அதனைப் பயன்படுத்து முறை அவர் போக்கிற்கு ஏற்றவாறும், அவருடைய நாட்டு மக்களின் தனி மனப்பான்மை நோக்க வேறுபாடுகள் ஆகிய இவைகளுக்கு ஏற்றவாறும் அமைந்துள்ளது அவருடைய முயற்சிகளுக்கெல்லாம் தொடக்கத்திலிருந்து அடிப்படையாய் இருப்பது அவருக்கு இயற்கையாய் ஏற்பட்டிருந்த ஆர்வ மிக்க சனநாயக நோக்கமே. சிலருக்கு இசை, ஓவியம் முதலிய தொழில்களுக்கே சிறப்பாக உரிய மனப்பான்மை இருத்தல்போல, திவாலராவுக்குச் சனநாயக நோக்கத்திற்கேற்ற தனிச் சிறப்பு மனப்பான்மை இருந்தது. ஏதாவது ஒருமுறையை அவர் கையாளும்போது பொதுநன்மக்கள் அதை ஒப்புக் கொள்வார்களா என்று அவரை வினவினால், 'என் உள்ளம் எனக்கு அது தக்கதென்று சொல்லுகிறது,' என்ற விடையையே அவர் பகர்வார். அப்படிச் சொல்லுகின்ற பொதுநலத் தலைவர்கள் மிகச் சிலரே; அப்படிச் சொன்னால் நம்பப்படுகின்ற தலைவரும் மிகச் சிலரே. அவரளவில் அதுவே தெளிவான உண்மையாகும். பொது

1. De Valera.

மக்களையும் தம்மையும் எப்பொழுதும் ஒன்றாகவே அவர் கருதினபடியால், அவர்கள் இன்ன செய்ய வேண்டுமென்று விரும்புவார்கள் என்பதையும் இன்ன செய்யக் கூடாது என்று கருதுவார்கள் என்பதையும் இயற்கையாகவே அவர் உணரக்கூடியவரானார். தம் மக்கள் விருப்பத்திற்கு அதிகப்படாமலும் குறைவுபடாமலும் எதையுஞ் செய்வதே அவர் விருப்பம். கிறித்துமத பெரியோர்கள் அவரைக் கிறிஸ்துநாதரின் தொண்டர்க்குத் தொண்டன் என்பர். சுயாதீனம் நாடிய ஐரிஷ் கிறிஸ்துவ மக்களின் ஊழியனாகவே அவர் இருக்க முயன்றவர். சில காலங்களில் தம் மக்களைப் பார்த்து, 'நீங்கள் பலமற்றவர்களாய் இருந்ததால் நானும் பலமற்றவனாய் விட்டேன்,' என்று அவர் சொல்லியிருத்தல் கூடும். அரசியற்றுறையில் அவர் ஒரு பெரிய பரிசோதனை நடத்த



தலைவர் திவாலரா

முயன்றிருக்கிறார். அவருக்கு ஊக்கமும் உணர்ச்சியும் முனிவர்களிடமிருந்து வருவனவேயன்றி அரசியல வல்லாரிடமிருந்து வருவதாகக் கூற முடியாது. தம மக்களின் தந்தையாகவும், மேய்ப்போனாகவும் அவர் அரசியற்றுறையில் வாழ முயன்றார். அவர் முயற்சியின் பயன் அவர் கட்சியின் எதிர்கால நிலைக்கு அப்பாற் செல்வது. அவர் முயற்சியின் வெற்றி ஐரோப்பாவில் ஜெர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் தோன்றிய ஆட் சிறப்பில்லாத பொதுவுடைமைக் கட்சிக்குத் தக்க எதிர் விடையாகும். அவர் முயற்சியின் தோல்வி சனநாயகக் குறிக்கோளுக்கே தோல்வியாகும். ஏனெனில் சமயப்பற்றுப் போன்ற ஏதாவது ஒரு பொது ஆர்வத்தினால் ஒன்றாய்ப் பிணிக்கப்பட்ட சமுதாயத்திலேதான் சனநாயகம் உயர்ந்த

முறையிற் சிறந்து விளங்கக் கூடியது. தற்கால அரசாங்கத்திலும் மிகுதியாக அயர்லாந்திலும் நீக்கமுடியாது காணப்படுகின்ற பல்வேறு கூட்டங்களும் உரிமைகளும் பரவிய ஒரு சமுதாயத்தில் சனநாயக நோக்கம் தவறவே செய்யும் என்னும் உண்மையை அது விளக்குவதாகும.

1916 வரை திவாலராவைப் பற்றி ஒன்றுங் கேட்கப் படவில்லை. அயர்லாந்துக்கு வெளியே மாத்திரமன்று; உள்நாட்டிலும் அவர் நன்கு அறியப்படவில்லை சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு ஸ்பானியத் தகப்பனுருக்கும் ஐரிஷ் தாயாருக்கும் நியூயார்க்கிற் பிறந்து மூன்ரும் வயதில் தாய்மாமனுன ஓர் உழவனுல் வளர்க்கப்படும் பொருட்டு லிமெரிக்கு அனுப்பப்பட்டார். அவர் அரசப் பல்கலைக் கழகத்திற் கணிதங் கற்பதற்குரிய இலவச மாணவர் நிலைமை யடைந்து தம் கல்வி முற்றியபின், பல கல்லூரிகளில் கணித ஆசிரியராய் விளங்கினர்.

இங்கேதான் அவரை அரசியற் பெரு வெளிச்சத்தில் தள்ளுதற்கு உரிய நிகழ்ச்சிகள் வந்து கூடின; அவ்வெளிச்சத்தினுள் தாமாகப் புகுவதற்கு அவர் விரும்பவேயில்லை. பேராசையுடைய தலைவர்களுக்குக் கிடையாத சமய வாய்ப்புக்கள் திவாலராவுக்கு எதிர்பாராமலே வந்து சேர்ந்தன. பெரும்போருக்கு முற்பட்ட ஆண்டுகளில் டப்ளின் நகரத்தில் தேசீயப் போக்குகளில் ஈடுபட்ட அறிவு மிக்க இளைஞுய் இருத்தல் மரணத்தை விளைவிக்கக்கூடியது அல்லது விரைவான அரசியல் முற்போக்கிற்குக் காரணமாகக் கூடியதா யிருக்கிறது. அயர்லாந்து தன் வரலாற்றில் மிகவும் முக்கியமான காலம் உதிக்கும் நிலையில் நின்றது. அப்போது அறிவாலும் உணர்ச்சியாலும் அதிற் பங்கெடுக்கக் கூடியவர்கள் மிகச் சிலரே இருந்தனர் 1916-வது ஆண்டு நடந்த கலகத்திற்குப்பின் அத்தகையோர் மிகச் சிலரே யாயினர்.

டால்ஸ்டாய் கூறும் சரித்திர தத்துவப்படி மனிதர்கள் தங்களைப் பார்க்கிலும் பலமான சக்திகளில் ஈடுபட்டிருந்த

னர். பெரிய சத்திகளை அவர்கள் இயக்கினதாகக் கூறுவதைப் பார்க்கிலும் அச் சத்திகளால் எழுந்த அலைகளின் மீது அவர்கள் இடம் பெற்று உலகோர் மனத்தைக் கவர்ந்தனர்; அது நெப்போலியன் வரலாற்றால் தெரிவது என்பதே உண்மை என்பதைப் "போரும சமாதானமும்" என்ற நூலில் டால்ஸ்டாய் விளக்கியுள்ளார். அவ்வுண்மை திவாலரா வாழ்க்கை வரலாற்றில் மிக எளிதாக விளங்கக் கூடியதே. எனினும், சந்தர்ப்பஙகளுக்கே முழுப் பொறுப்புக் கொடுத்துவிடுதல் கூடாது. செயல்களைத் தனக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளும் மனிதனின் தனி மனப்பான்மையைக் கவனியாது இருக்க இடமில்லை. அயர்லாந்தின் வருங் கால முடிவில் அளவற்ற நம்பிக்கை திவாலராவுக்கு இருந்தது. அதனையே தம் வாழ்க்கை முடிவாகவும் கருதினுர். அயர்லாந்தின் சுயாதீனக் கட்சியில் தம்மை மக்கள் பயன் படுத்திக்கொள்வார்கள் என்று அவர் நம்பினுர். அஃது எக்காலம், எப்போது, எப்படி என்பதைப்பற்றி அவர் கருதவில்லை. அவருடைய நம்பிக்கை செருக்குடன் கலந்ததில்லை. உள்ளத்தின் உள்ளே உண்மையாக அத்தகைய நம்பிக்கை எவனுக்கு இருக்கின்றதோ அவன் ஓவியக்காரனுய் இருப்பினும் முனிவனுயிருப்பினும் அரசியல் வல்லானுய் இருப்பினும் அவன் பெரிய உச்சநிலை யடைவான். அத்தகைய உச்சநிலை சுயநலப் பான்மையுடைய ஆசைக்காரருக்கு அமையாது.

தம நாட்டின் தொண்டனுகப் பயன்பட வேண்டுமென்ற விருப்பமே திவாலராவின் மெய்க் கொள்கையாகவும், அவருடைய ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படையாகவும் விளங்கிற்று. 1916-ல் நடந்த கலகத்திற்கு முன் சிறப்பான இராணுவத்திறமை யொன்றும் அவர் காட்டவில்லை. 1913-ம் ஆண்டு முடிவில் ஐரிஷ் தொண்டர்படையில் அவர் சேர்ந்து சிறுபடைத் தலைவராயினர். அதற்குக் காரணம அவர்தம் அறிவாற்றலே யென்று கூறவேண்டும். இராணுவத்தில் திறமையால் உயர்ந்தார் என்பது பொருந்தாது. 1916-ஆம் ஆண்டு கலகத்துக்கு நன்ருய் ஆய்ந்து

திட்டம் வகுக்கப்படவில்லை அதற்குக் காரணராய் இருந்தவர்கள் அஃது இராணுவ வெற்றி பெறக்கூடியதன்று என்று தெரிந்தாலும் மன வேறுபாட்டைக் காட்டும் ஓர் அடையாளமாகவே அதனைக் கருதினர். தற்செயலாகத் திவாலரா பாதுகாக்க வேண்டிய இடம் தக்க இடமாக அமைந்தது. போலண்டு ஆலைகளும்[1] அவற்றைச் சுற்றிய நிலப்பகுதியும் அவர் பார்வையில் அமைந்தன. கிங்ஸ்டவுனிலிருந்து டப்ளினிக்கு வரக்கூடிய வழியில் அஃது இருந்தது இங்கிலாந்திலிருந்து ஹோலிஹெட்[2] வழியாக வரக்கூடிய உதவிப் படைகளைத் தாக்குவதற்குரிய இடத்தில் திவாலரா படை அமைந்திருந்தது. அவ்விடத்தில் திவாலரா இராணுவ அநுபவம் இல்லாதவரா யிருந்தும் மிக்க சூழ்ச்சிவல்ல தளகர்த்தராய்த் தம் திறமையைக் காட்டினர். பிற்காலத்தில் ஆங்கிலப் படைத்தலைவர் ஒருவர் சொன்னதாவது, ‘எல்லா உத்தியோகத்தர்களும திவாலராவின் திறமையுடையவர்களாய் இருந்தால் ஐரிஷ் கலகம் மும்மடங்கு காலம் நீடித்திருக்கும்,’ என்பதே. திவாலரா நின்ற இடம் குண்டுபோட்டுத் தாக்கப்படாத இடங்களில் ஒன்ருய் இருந்தது. ஏனென்றல் அவா பக்கததிலிருந்த சாராய வடிப்பு நிலையத்தில் சிலரை இயந்திரப் பீரங்கியோடு நிறுத்தி அங்கே மாத்திரம் மூவர்ணக் கொடியை எடுததுக் காட்டி முக்கிய நிலையத்தை ஆங்கிலர் தாக்காதபடி மறைத்துவிட்டார். ஆலையின் பலகணிகளில் மாச் சாக்குகள் அடுக்கிப் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. திவாலரா எபபோதும மனவுறுதி யுடையவராயிருந்தார். செர்மானியரை எதிர்த்த ஆங்கிலப் படையைக் கடவுள் அருளால் தாங்கள் தடுக்க முடியுமெனறு நம்பினர். என்ருவது ஒருநாள் ஐரிஷ்காரர் ஆங்கிலப் படையை வெற்றியோடு விலக்குதல கூடும் என்று நம்பினவர் அவர். அயர்லாந்து சென்றடைவதற்குரிய குறிக்கோளின்மீது கண் வைத்திருந்த பேரன்பினருள் அவர் ஒருவர். அக் குறிக்கோளுக்குச் செல்லும் வழியில் அயர்லாந்தை

1. Boland Mills. 2. Holy head.

நடாத்துவதற்குத் தாம் தகுதியற்றவர் என்றே எப்போதும் அவர் தம்மை எண்ணினாலும், பற்று உள்ள ஊழியனாக அல்லது மக்கட்கு முன் செல்லும் மேய்ப்போனாக இருக்க அவர் விரும்பினார்.

1916-ல் மேய்ப்பதற்கு மந்தை யொன்றுமில்லை யென்று அவர் உணர்ந்தார். ஐரிஷ் மக்கள் கலகத்திற்கு எதிரிடையாக இருந்தனர். திவாலராவின் கருத்துப்படி அவர்காலத்து ஐரிஷ்மக்கள் மாத்திரமல்லாது முன் சென்ற ஐரிஷ்மக்களும் அயர்லாந்துக்காக உழைத்தவர் களும் மந்தையிற் சேர்ந்தவர்களே எதிர்காலத்தைக் கருதி அரசியல் வல்லார் சட்டம் உண்டாக்குதல்போலத் திவாலரா சென்ற தலைமுறைகளைப்பற்றி எப்போதும் உணர்ச்சியோடிருந்தார். ஒரு நாட்டின் பழக்க வழக்க கங்கள் அதற்குத தனிச்சிறப்புக கொடுப்பன வென்றும், அவைகள் நாட்டுப் பற்றிற்கு உறுதியளிப்பன வென்றும் அவற்றைப் போற்றினார். ஆதிகக விருப்பமில்லாத மக்களின் மனத்தில் ஆதிக்க உணர்ச்சியை நிலைபடுத்து வதற்குச் செய்த முயற்சியாகவே 1916-வது ஆண்டுக் கலகத்தை அவர் கருதினார். அயர்லாந்தினருக்குத் தங்கள் காரியத்தைத் தாங்களே தீர்மானிக்கக்கூடிய உரிமை முக்கியமாகக் கிடைக்கவேண்டுமென்பது அவர் கொள்கை. ஆதிக்கம் வேண்டும் என்ற உணர்ச்சியை ஆர்வமற்ற தூங்கிக் கிடந்த மக்களுள் எழுப்புவதற்கே அவர் 1916-ல் போர்புரிந்தார். ஆதிக்க உணர்ச்சி ஏற்பட்டபின் ஐரிஷ் மக்களுக்குத் தொண்டனாக இருக்க அவர் தயாராய் இருந்தார். ஆதிக்க உணர்ச்சி யில்லாதபொழுது எப்படி அவர் சனநாயகத் தலைவராக இருக்க முடியும்?

1916-ல் ஒரு சனிக்கிழமை இரண்டு மணிக்குக் கலகத் தினரின் முக்கிய படை எதிரிகளுக்குத் தாழ்ந்து சரண் புகுந்தது ஞாயிற்றுக்கிழமை காலைவரை திவாலரா சரண் புகவில்லை. தம் விருப்பத்திற்கு மாறாக மற்ற உத்தியோகத் தர்களோடு இணங்கவேண்டி யிருந்தது. கலகக்காரர்களின் முடிவு இன்னதாக இருக்கு மென்று அவர்கள் உணர்ந்

திருந்தனர். அது போரிற் சாவு அல்லது அதற்குப்பின் தூக்கு என்பது அவர்களுக்குத் தெரியும். திவாலராவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது பலர் தண்டனை பெற்று மாண்டனர். திவாலரா அமெரிக்காவின் குடியுரிமை பெற்றிருந்ததால் தண்டனையினின்று தம் முயற்சியில்லாமலே காக்கப்பட்டார். தம்முடைய அறையில் ஒரு சமய நூல் வாசித்துக்கொண்டிருந்தபோது அவர் தண்டனை ஒத்திவைக்கப்பட்டது என்ற செய்தி அவருக்கு அறிவிக்கப பட்டது. செய்தி கொண்டு வந்தவருக்கு நன்றி கூறிவிட்டு அவா நூலை மறுபடியும் படித்துக்கொண்டிருந்தார். இன்னும் அவர் ஐரிஷ் மக்களுக்குத் தொண்டு செய்யுமபடி கடவுளால் உயிர் காக்கப்பட்டார். ஐரிஷ் மக்கள் உணர்ச்சியற்ற நிலையிலிருந்து உயிர்த்தெழுந்து முற்போக்குடைய மக்களாக மாறிக்கொண் டிருந்தமையால் அவர்களோடு அதிக இணக்கமுடையவராய் அவர்கட்கே தம்மை முற்றிலும கொடுத்து அன்போடு உழைக்கும் நிலையில் அவர் இருந்தார். ஆனால் கலகம் முடிந்த தருணத்தில் பயனற்ற கலகததிற் கலந்துகொண்ட ஒரு பித்துபபிடித்த பள்ளிக்கூட ஆசிரியராகவே பலர் அவரைக் கருதினர். அவருடைய செயல் எதிர்காலத்தில் மறைபட்டுப் போம் என்பதே பலர் கருத்து. ஆனால் அக் கருத்து மாறிக்கொண்டே வநதது. முற்போக்குடையவர்கள் அக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

திவாலராவும் இன்னும் அறுவரும் ஆயுள்வரை உழைப்புத் தண்டனை விதிக்கப்பட்டார்கள். சிறிதுகாலம் அயாலாந்தில் அமைதி யேற்பட்டிருந்தது முதலில் ஓர் அலையும் அதன்பின் அமைதியும் தோன்றினும் முழுப் புயல் பின்னேதான் பொங்கியெழுவதாய் இருநதது. லீவிஸ் சிறைச்சாலையில் சிறையினர்க்கு அவர் தலைவராக்கப் பட்டார். சிறையிலிருந்தபோது குற்றவாளிகளைத் தக்க முறையில் நடத்தாமை காரணமாக எழுந்த கலகத்திற்கு அவர் காரணரானார். அவர் வேறு சிறைக்கு மாற்றப் பட்டார். ஈதெல்லாம் மக்களுக்குள் உணர்ச்சியை உண்

டாக்கிக்கொண் டிருந்தது. 1917 ஜூனில் அவரும் வேறு சிலரும் விடுதலை பெற்றபோது டப்ளின் நகரத்தில் அவர்களுக்குச் சிறந்த வரவேற்பு நடந்தது. மக்கள் அவரிடத்தில் அன்பு காட்டத் தொடங்கினர். அதற்குப்பின் அவர் ஐரிஷ் மக்களுக்காக உழைப்பதற்கு விரதம் பூண்டார். திவாலரா இருவகையான பற்றுடையவராய் விளங்கினார். தம் மக்களுக்குத் தந்தையாய்த் தலைவராய் இருந்ததோடு அயர்லாந்து நாட்டையும் புனிதமாகக் கருதி அதற்கு முழுச் சுவாதீனம் தேடவேண்டும் என்று ஆசைகொண்டார். அவர் விடுதலை யடைந்தபின் சட்டத்துக்கு உட்பட்ட அரசியல் தலைவனாக ஐரிஷ் கட்சிக்குத் தொண்டு செய்யத் தொடங்கினார். 1922-ல் மாத்திரம் ஒரு படைத் தொண்டனாக அவர் உழைக்கவேண்டி யிருந்தது.

1917-வது ஆண்டுக் கோடையில் கிளேர்[1] மாகாணத்துக்கு அவர் ஆங்கிலச் சட்டசபை அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் மக்களின் கட்சியிற் சிறந்து விளங்கினார். தன்னைத் தெரிந்தெடுத்தோர்களுக்குப் பிரதிநிதியாக உழைப்பதோடு அயர்லாந்தின் உயர்ந்த உரிமைகளைக் கைவிடாது பாதுகாக்கும் பொறுப்பும் அவர் கடமையாக இருந்தது. மக்கள் கட்சிக் கூட்டத்தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குக் காரணம் அதற்குமுன் தலைவராய் இருந்தவர் சாந்தவானாய் ஐரிஷ் குடியரசுக்குழு என்னும் இரகசிய சபையின் ஆதரவற்றவராய் இருந்ததே. திவாலரா தாம் அதன் உறுப்பினராய் இல்லை என்றாலும் அவரை அக் குழுவினர் நன்றாக மதித்தனர்.

1918-வது ஆண்டு மே மாதம் திவாலரா மறுபடியும் கைது செய்யப்பட்டு முதலில் வேல்ஸ் மாகாணத்திற் சிறையிடப்பட்டுப் பின்னர் மற்ற ஐரிஷ்காரர்களொடு லிங்கன் சிறையில் வைக்கப்பட்டார். அவர் சிறை வைக்கப் பட்டதற்குக் காரணம் செர்மன் போருக்காகக் கட்டாயச்

1. Clare.

சிப்பாய் சேர்ப்பதை எதிர்த்தமையே. அயர்லாந்து முழுதும் அக் காரணம்பற்றி இங்கிலாந்துமீது பெருஞ் சினமும் பகைமையும் பரவுதலாயின. வேற்றுநாட்டுப் போர்க்களத்திற்போய் இறப்பதைப் பார்க்கிலும் அயர்லாந்தில் துன்புறுவதே நல்லதென்ற உணர்ச்சி கிளம்பிற்று. திவாலராவின் பெயர் இரத்தக் கொதிப்புள்ள ஆர்வமுடையோரை அறைகூவி அழைக்கும் போர்க் குரலாய் இருந்ததோடு பொதுமக்களைத் தாங்கள் விரும்பாத சண்டைக்கு வலிய இழுக்காதபடி தடுக்கும் ஒருவகைப் பாதுகாப்பாகவும் இருந்தது. உரிமை பறிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்குந் தந்தையாக அவர் விளங்கினார். மாண்புமிக்க கட்சியைத் தாங்குந் தக்க தூண்போல அவர் இருந்தார். பலகாலம் ஊக்கமாய் அக் கடமையை அவர் செய்துவந்தார். தற்காலத்தில் மைக்கேல் காலின்ஸ் என்பவர்கூடத் திவாலராவைப் போல மக்களால் அழுத்தமாக நேசிக்கப்படவில்லை. திவாலராவிடம் மக்களுக்கு இருந்த நம்பிக்கை வேறு யாரிடத்திலுமில்லை. பிற்காலச் சண்டையில் மற்றவர்கள் இவரைப் பார்க்கிலும் மிக அதிசயமாகப் போர் புரிந்திருக்கலாம். அவர்களை மக்கள் புகழ்ந்து வியப்பாக வணங்கி யிருக்கலாம்; ஆனால், திவாலராவிடத்தில் அவர்களுக்குள்ள உணர்ச்சி ஒரு பையனுக்குத் தன் தந்தையினிடம் உள்ள உணர்ச்சி போல்வது; பிறரிடம் உள்ள உணர்ச்சி தமையனிடமுள்ள உணர்ச்சி போல்வது.

1919-வது ஆண்டு சனவரி மாதத்தில் ஐரிஷ் சட்டசபையின்[1] முதற்கூட்டம் கூடிற்று அங்கத்தினர்களில் மிகச் சிலரே அதற்குச் செல்ல முடிந்தது. சிலர் சிறையில் இருந்தனர். சிலர் ஓட்டத்தில் இருந்தனர். அப்போது சிறு சூழ்ச்சிச் சண்டை தொடங்கிற்று. போலீஸ்காரரையும் இராணுவப் படைகளையும் கலகக்காரர் இரகசியமாய்க் கொன்றார்கள். அவர்கள் வீடுகள் தீ வைக்கப்பட்டன. நாடு முழுவதும் அடுத்த புதுமையாக யாது நடக்கப் போகின்றது என்று மூச்சு விடாமல் எதிர்பார்த்துக்

1. Parliament.

கொண்டிருக்கும் நேரத்தில் திவாலரா லிங்கன் சிறையி லிருந்து அதிசயமாகத் தப்பி ஓடிவிட்டார். வளர்கின்ற நாட்டுப்பற்று அவரையே நோக்கி நின்றது. மான் செஸ்டரில் சில வாரங்கள் அவா ஒளிந்திருநதார். அயர் லாந்தில் தாம் தலைமை பூண்டிருந்த நாட்டுப்பற்றுக் கழகத்திற்குத் தம்மைப்பற்றி யாதும் அவர் தெரிவிக்க வில்லை. டப்ளினில் ஒரு பெரிய அரண்மனை வீட்டில் நடந்த சனக்கட்சியின் பெருந கூட்டத்தில் அவரைப்பற்றிச் செய்தி ஏதாவது உண்டா என்று கேட்டபொழுது ஒருவரும் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. ஆனால் அச்சமயத்தில் ஒன்றுஞ் சொல்லாமல் இருக்கக்கூடாது என்று மைக்கேல் காலின்ஸ் என்பவர் திவாலராவிட மிருந்து ஒரு செய்தி வந்ததுபோலக் காட்டி அதில் அவர், ‘நான் லிஙகன் சிறையிலிருந்து தேசத்தொண்டு செய்து கொண்டிருக்கிறேன்,’ என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரிவித்தார். அவர் சொன்னது உண்மையேயானாலும் திவாலரா தம்மைப்பற்றி அவ்வாறு சொல்லக் கருத மாட்டார். தேசத்தொண்டே தான் எப்பொழுதுஞ் செய்துகொண்டிருப்பதனால், அதற்காக ‘நான் ஓடினேன்’ என்று அவர் சொல்லவேண்டியதில்லை. சிலநாளுக்குள் அவா அயர்லாந்துக்கே களவாகக் கொண்டுவரபபட்டார்.

அவர் தலைவராய் இருந்த சட்டசபை, ஆங்கில அர சாங்கத்தைப் பொருட்படுத்தாது நாட்டை ஆளத்தொடங் கிறது. இதற்குப் பணம் விரைவில் வேண்டியதாய் இருந தது. பணம் கிடைக்கக்கூடிய இடம் அமெரிக்காவே. திவாலரா நாட்டின் வேலைக்காரனகத் தம்மைக் கருதி நியூயார்க்கிற்கு இரகசியமாய்ப் போய்ச் சேர்ந்தார். அவர் போன காரியம் மிகச் சிறப்பாக முடிந்தது. ஆனல் அயர் லாந்தில் சண்டை பலத்தது. 1921 ஜூலை வரை சிறு சூழ்சசிப்போர் தொடர்ச்சியாய் நடந்தது அவர் சண்டை நடுவில் வந்து மக்களுக்காக இடர்ப்பட்டார். எல்லா மக்களும் அவர்தான் தலைவர் என்ற ஒரே நோக்கத்தோ டிருந்தனர். பிற்பாடு சமாதானம் ஏற்பட்டது. திவாலரா

தெரிந்தெடுத்த பிரதிநிதிகள் இலண்டனுக்கு லாயிட் ஜியார்ஜைச் சந்திப்பதற்காகப்போய் உடன்படிக்கையிற் கையெழுத்திட்டார்கள். தம்மிடத்தில் முதலில் உடன்படிக்கையைக் காட்டாமல் கையெழுததிடக்கூடாது என்று திவாலரா சொல்லியிருந்தார். லாயிட் ஜியார்ஜ் உடனே கையெழுத்திடாவிட்டால் பெரும்போர் உடனே தொடங்கும் என்று அச்சுறுத்தியதால் அவருக்கு அதைக் காட்டாமலே பிரதிநிதிகள் கையெழுத்திட்டார்கள். ஐரிஷ் சட்டசபையில் அவ்வுடன்படிக்கை போதுமான சுயாதீனம் அயர்லாந்துக்குக் கொடுககவில்லை என்று அவர் கண்டித்துத் தள்ளினார். ஆனால், அவருக்கு வாக்குரிமை குறைந்தமையால் பிரதிநிதிகளில் ஒருவராகிய ஆர்தர் கிரிவித[1] என்பவர் சட்டசபைத் தலைவராகத தெரிந்தெடுக்கப்பட்டார். அவர் உடன்படிக்கையைக் கண்டித்தபோது மக்களைக் கவனியாது தாம் கொண்ட கொள்கையில் உறுதியான நம்பிக்கை மிகுதியாக வைத்திருந்தார். நெடு நாளாக அயர்லாநதினர் போர்புரிந்து துயருற்றதெல்லாம் அரைகுறையான சுயாதீனத்துக்காக அன்று; — தாஙகள் இழந்துபோன முழு ஆதிக்கத்தைப் பெறுவதற்கே என்பதையே அவர் நினைத்துக்கொண்டிருந்தார். ஆங்கில நில முதலாளிகள் குடியானவர்களுக்குக் கொடுமை செய்யாதிருந்தால் மாததிரம போதும் என்று கருதவில்லை. முழு ஆதிக்கம் தவிர வேறொன்றையும அவர் பொருட்படுத்தவில்லை.

உள்நாட்டுச் சண்டை மறுபடியும் தொடங்கியபோது அவர் குடியரசுக்கட்சிப் படையில்[2] ஒரு தொண்டராய்ச் சேர்ந்து உழைத்தார். அக்காலத்தில் மக்களிற் பெரும்பாலார் அவரைத் தலைவராகக் கருதவில்லை; செயலுக்குக் கொண்டுவரக் கூடாததை விடாபபிடியாய்ப் பிடிக்கும் பித்துக்கொண்டவர் என்று அவரை எண்ணினர். அவருக்கு மனம் கசப்பாகிய காலம் அதுவே 1916-ல் அவரைச் சேர்நத மனிதர்களே அவரை இகழ்ந்தாலும்

1. Arthur Griffith. 2. Republican army.

அவரிடம் நம்பிக்கை வைத்து அதனை இழக்கவில்லை. இப்போது அவரிடம் நம்பிக்கை வைத்துப் பலர் அதனை இழந்தனர். தம்முடைய அரசியல் வாழ்க்கை தாழ்ந்து போவதைப்பற்றி அவர் வருத்தப்படவில்லை. ஆனால் மக்களுக்குத் தாம் நினைத்தபடி பயன்படவில்லை என்பதுதான் அவருக்கு வருத்தம விளைத்தது. குடியரசுக்கட்சி, உடன்படிக்கையை எதிர்த்த கட்சி. அது 1922-ஆம் யாண்டுத் தேர்தலில் தோல்வியுற்றது. அதற்குச் சில மாதங்கள் கழித்துத்தான் உளநாட்டுச் சண்டை தொடங்கிற்று. குடியரசுக் கட்சியார் மக்கள் விரும்பினாலும விரும்பாவிட்டாலும் முழு ஆதிக்கத்திலேயே நோக்கம் வைத்திருநதனர். திவாலராவோ முழு ஆதிக்க நோக்கத்துடன் அவர் காலத்து ஐரிஷ் மக்களின் நன்மையையும நல்வாழ்வையுமே முக்கியமாகக் கருதி யிருந்தார். திவாலரா உடன்படிக்கையை மறுத்தபோது ஒருவகையாக மக்களின் விருப்பத்தையே அவர் தெரிவிததார் என்னலாம் உடன்படிக்கை கையெழுத்திடபபடாதிருபபின் தேர்தல் உலகம் அதனைத் தள்ளியிருக்கும. திவாலரா அநதச் சமயத்திற் கீழ்ப் போனாலும் அது மறுபடியும அவர் உயர்வதற்கே காரணமாயிற்று. உடன்படிக்கையைத் தழுவின கட்சி கடைசியாக அவமதிக்கப்பட்டது. சனங்களுக்கு வேண்டியது இன்னதென்று முன்னதாகவே அவர தெரிந்தபடி பிறர் எவரும் தெரியவில்லை. தம் இயற்கையறிவு செலுத்துகின்ற அவ்வழியில் அவர் செல்லுமளவும் மக்கள் எப்படியாவது அவரையே கடைசியாகப் பின்பற்றுவார்கள். 1932-ல் அவருடைய புதுக்கட்சி ஆதிக்கத்திற்கு வநதது.

தற்கால நிலைமையையும், எதிர்கால முடிவையும் பற்றிப் பேசுவது கடினம். திவாலரா இப்போது தவறினால் அவருடைய பிடிவாதத்தினாலாவது பொருளாதாரத் துறையில் தபபுச் செய்வதினாலாவது அத் தவறுதல் ஏற்படாது. இங்கிலாந்திலும் அயர்லாந்திலும பத்திரிகை உலகம் அவ்வாறு கூறலாம். அவருடைய பொருளாதாரக் கொள்கை வெற்றி பெறுதலே கூடும் பொருளாதாரத்

துறையிலாவது, சமுதாயத் துறையிலாவது அவருக்குச் சோதனை ஏற்படாது. முழு ஆதிக்கக்கொள்கைச் சார்பாகத்தான் சோதனை ஏற்படும். தம்மை மக்களின் தொண்டனாகக் கருதி மக்களுடைய தற்காலக் கருத்துக்கு அவர் இணங்கிவிட்டார். முழு ஆதிக்க ஆர்வத்தை அவர் கைவிட்டார் என்பதற்கு அடையாளங்கள் தோன்றுகின்றன. அப்படியானால் ஒரு முடிவுதான் அதற்கு அமையும். யாருக்காகத் தம்மைத் தியாகஞ் செய்தாரோ அந்த மக்கள் அவரைக் கடைசியாகக் கழித்துவிடக்கூடும். ஏனென்றால் நாள் செல்லச் செல்ல உச்சநிலைக்குத் தங்களை நடத்துகின்ற தலைவரைத்தான் மக்கள் பின்பற்றுவார்கள். அயர்லாந்திலுள்ள ஆர்வத்தின் உச்சத்தைப் பிற நாட்டினர் எளிதாகத் தெரிந்துகொள்ள முடியாது.

இதுவரை திவாலராவை ஐரிஷ்மக்கள் தங்களை உயர் நிலைக்கே நடத்துபவராகவும் மேய்ப்பவராகவும் உணர்ந்திருக்கின்றனர். ஆனால் சில நாட்களுக்கு முன்புதான் அதைப்பற்றிய சிறிய ஐயப்பாடு சிலர்க்குள் தோன்றியிருக்கிறது. அதனால் அயர்லாந்தில் ஒரு சிறு பொறி விரைவில் ஒரு சுடராக வளர்ந்து அச்சுடர் சுவாலையாகிவிடும. சில மாதங்களாக வாழ்க்கையில் திவாலரா முடிவான முற்போக்கினருக்குத் தம்மை எதிரியாகக் காட்டிக்கொண்டார். முன்னரசினர் ஏற்படுத்திய இராணுவ மன்றத்தை ஏற்படுத்திக் குடிஅரசினரை அதன் மூலம் விசாரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார். குடி அரசு வாரப்பத்திரிகையை அடக்கி இருக்கிறார். பிற நாட்டில் அவர் நிலைமையில் உள்ள அரசியல்தலைவர்களுக்கு அப்படிப்பட்ட செய்கைகள் அவசியமாய் இருக்கலாம். ஆனால், அயர்லாந்தில் எவ்வளவு திறமை மிக்க அரசியல் தலைமையும் பல நூற்றாண்டுகளாகக் கனன்றுகொண்டு இடையிடையே கொழுந்துவிட்டு எரிகின்ற முழு ஆர்வத்தீயை எதிர்க்குமாயின் அது தக்கபடி வெற்றி பெறாது.

அடுத்த அலை கிளம்பிச் செல்லும்போது திவாலரா அதன் உச்சத்தில் இல்லாதிருக்கலாம். அவரைக் கடந்து


அஃது உருண்டு போகவுங் கூடும். அதற்குப்பின் அவர் நாட்டுக்குப் பயன்படாமலும் போகலாம. அது நிகழக் கூடாது என்பதே விருப்பம். ஏனெனில் இந்த நூற்றாண்டில் அயர்லாந்தின் தலைவர்களாக வந்தவர்களுள் திவாலராவிடத்திற்போலப் பெருந்தன்மையும் தன்னலங் கருதாமையும் தியாக உணர்ச்சியும், பிறரிடம் காண்பதரிது. 1916-ல் குறிக்கோளாகக் கருதிய முடிந்த நிலைக்கு நாட்டை அவரே நடத்த வேண்டும் என்பது பொருத்தமும் நியாயமும ஆகும். ஆனால் அயர்லாந்தின் சரித்திரத்தில் நியாயமும் தகுதியுமான செயல் மிக அற்பமாகவே ஏற்படுகின்றது. முடிவில் தோற்றாலும் வென்றாலும் இருள் மிக்க காலங்களில் தம் மக்களை ஊக்கி ஆதரித்த தந்தையாகத் திவாலரா எப்போதும் எண்ணப்படுவார் என்பது திண்ணம்.

# ௩. ஹாவெலாக் எல்லிஸ்[1]

ஹாவெலாக் எல்லிஸ் என்பவர் தம் தலைமுறையில் மனித நூலில் தலைமையான தேர்ச்சி பெற்ற ஆங்கிலராகக் கருதப்படுவார். தம்முடைய சொந்த நாட்டில் மாத்திரம் மதிக்கப் பெருமையால் அவர் உண்மைத் தீர்க்கதரிசியின் அறிகுறியுடையார் என்னலாம். அவர் தம்முடைய சிறப்பு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட மனித நூற்பகுதி எந்தப் பல்கலைக் கழகத்துப் படிப்புத் திட்டத்திலும் ஒரு பாடமாக இல்லை. புது அறிவு நூல்கள் பல்கலைக் கழகங்களில் தொட்டில் இட்டு வளர்க்கப்படுகின்றன; அவைகள் அங்கே பிறப்பதில்லை. ஹாவெலாக் எல்லிஸ் ஒவ்வொரு நாள் வாழ்க்கைக்கும் உரிய மனிதநூல் ஆராய்ச்சி வல்லார். சாதாரண மனிதனுடைய சமுதாய ஒழுக்கம், நுண்ணூல் ஆராய்ச்சிக்குத் தக்க அரும் பொருள் என்பதே அவர் கருத்து. ஆங்கில மக்கள் அத்தகைய கருத்தைத் தக்கதாக எண்ணுவதில்லை. தொழிற் படிப்புக்கு இயற்கை அறிவு நூல் தக்க பாடம் என்பதை ஆங்கிலக் கல்வி முறை ஒருவாறு அனுசரித்தாலும், அதை உண்டாக்கிய வைதீகர்களுடைய அடையாளம் அதில் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. தூர நாட்டில் உள்ள மக்களை மாக்கள் என்பதற்கு ஓர் உதாரணமாக ஆங்கில நாட்டினர் கருதுவது இயல்பு. நாகரிகவான்கள் அவர்கள் கருதுகின்ற நாகரிகவானின் வடிவமாகவே அமைந்திருத்தல் வேண்டும். ஆங்கிலக் கருத்துக்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்கள், டாக்டர் ஜான்சன் எண்ணியபடி, மனிதனின் ஒழுக்க அறிவு சம்பந்தமான ஆராய்ச்சிக்கும் இயற்கை நூல் ஆராய்ச்சிக்கும் தொடர்பில்லை என்றே எண்ணுகிறார்கள். இலண்டன் பத்திரிகை ஒன்றில் எல்லிசைப்பற்றிச் சொன்னபோது 'அவர் கழிவுப் பொருள்களைப்பற்றி

1. Havelock Ellis.

நன்றாகப் பேசுவார்' என்று கூறப்பட்டது. ஆனால் தக்க அமெரிக்கர்களுடைய கருத்து வேறாகும். "ஒரு மனிதனுடைய சொந்த நற்பயிற்சிக்குத் தக்க அடையாளம், பொதுமக்கள் மனத்திலுள்ள அற்பக் கருத்துக்களினின்றும, குழந்தை உணர்ச்சிகளினின்றும விடுதலை பெற்றிருபபதேயென்றால், இநதத தலைமுறையில் தெளிவாக மிகுந்த நாகரிகமுற்ற ஆங்கிலன் ஹாவெலாக் எல்லிஸ் என்பவனே யாகும்," என்று அமெரிக்கப் பத்திரிகைகள் கூறின. அவரை அமெரிக்கர்கள் நன்கு மதிக்கின்றனர் என்றால் அவர்கள் புதிது புதிதாக ஒன்றைச் சொல்லவும் கேட்கவும் ஆசைபபடுவதினாலன்று; அறிவு நூல் என்பது அவர்களது படிப்பு முறையில் தக்க இடம் பெற்றிருப்பதே அதற்குக் காரணம். கற்ற அமெரிக்கன், செலவு செய்து படிக்காத வகுபபிலுள்ள ஒருவராகவே கிளாஸ்டன்[1] என்பவரை எண்ணுகின்றான்.



ஹாவெலாக் எல்லிஸ்

ஆராய்ச்சி வளர்ச்சிக்கு ஏதுவான விவரங்கள் தவிர, ஹாவெலாக் எல்லிஸ் வாழ்க்கையில் விசேடமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. சொலல வேண்டிய சிறு பகுதி அநாவசியமான நீளத்தில் டாக்டர் கோல்ட்பர்க் என்பவரால் முன்னமே கூறப்பட்டுள்ளது. மரணத்துக்கு முன் ஒருவனுடைய சரித்திரத்தை எழுதி வைப்பது திட்டமான

1. Mr. Gladstone,

புகழ்க் குறியாகாது. அரசியல் தலைவர்கள் எதிர்காலத்தில் வரக்கூடிய தாழ்வை உத்தேசித்துத் தங்கள் சரித்திரத்தை எழுதும்படி சொல்வதுண்டு. அறிவு நூலார்கள் அவ்வாறு செய்வதில்லை. ஹாவெலாக் எல்லிஸின் வீட்டுச் சிறு விவரங்களை அவர் சரித்திரக்காரர் விரித்திருப்பதுபோல விரியாது, அவர் செய்திருக்கும் அறிவுவேலையை நுட்பமாகவும் மதிப்பாகவும் ஆராய்ச்சி செய்து எழுதினால் அவர் மிகவுந் திருப்தியடைதல் கூடும்.

அவர் தமது முப்பதாவது வயதுவரையில் வைத்தியக் கல்வியில் தேர்ச்சியுற்றவர். அவர் எழுதின முதல் முக்கியப் புத்தகம் அதை விற்றவன்மீது குற்ற வழக்குத் தொடர்வதற்குக் காரணமாயிற்று. அவர் உயர்ந்த நூல் எழுதுவதற்குமுன் அறிவுபொருத்தமான மிக்க சீர்திருத்தக்காரரது கூட்டத்திற் பழகினார். அறிவின் உயர்வுகருச் சமயப்பற்று ஓர் அடையாளமாகக் கருதப்படுவதற்கு முன்னே, 1880-முதல் 1890-வரை உள்ள காலத்தில், ஹக்ஸிலி உயிரோடிருந்தார். அறிவுநூலார் அறிவுநூல் முயற்சியைத் தொடங்கி நடத்தினர். ஐரோப்பிய நாகரிகத்தில் மனித அறிவின் உயர்ச்சியைப் பாராட்டிய காலம் அதுவே.

ஹாவெலாக் எல்லிஸின் முதல் வெளியீடு 1889-ல் தோன்றிற்று. 'குற்றவாளி' என்பது அந் நூலின் பெயர். அது சாதாரண நடைபபோக்கில் உள்ளது. பரந்த கல்வியை அது காட்டினாலும கருத்துப் புதுமை ஒன்றும் அதில் இல்லை. அஃது அவர் நேராகச் செய்த ஆராய்ச்சியின் பயன் அன்று. துப்பறியுங் கதைகளில் அடிக்கடி பாராட்டப் பெற்ற ஐரோப்பியாக் கண்டத்து அவர் காலத்து மனிதநூல் வல்லார் குழுவின் தீர்மானங்களில் அவர் மிகவும் ஈடுபட்டார். உடல் அடையாளங்களால் குற்றவாளி இன்னர் என்பதை முன் அறிந்து கொள்ளலாம் என்பது அவர்கள் கொள்கை. அவர்கள் முயற்சி மிக்க உடற்கூற்று நூல் வல்லார்கள்; கணக்கெடுப்பதிற் சிறந்தவரல்லர்; சமுதாயநூல் அறிவு மிகக் குறைவாக

உடையவர்கள். தாங்களே முற்றும் நன்றாக அறியாத கேள்விகளுக்கு விடை பகரத் தொடங்கியவர்கள். குற்றம்[1] என்பது ஒருவனது சமுதாயத்தோடு சம்பந்தமாகவும் அவன் வாழ்கின்ற இடம், காலம் என்பவற்றின் சம்பந்த மாகவும் ஏற்படுகின்ற ஒருவகை ஒழுக்கக் குறைவேயாகும். அக் குற்றச் செயல்களின் பெரும்பகுதி தனியுடைமைச் சொத்து முறைபற்றி உண்டாவதாகும். அவை நிகழ் வதும் நிகழாதிருப்பதும் சொத்துப் பகுப்புக்குச் சமு தாயத்தார் செய்திருக்கும் ஏற்பாட்டு மாற்றங்களைக் குறித் தும், அம் மாற்றங்களைத் தாக்கும் மக்கள் தன்மையைப் பொறுத்தும் கூறத்தக்கன. இரண்டையும் ஒன்றோ டொன்று குழப்புதல் புதிதாய் விதிக்கும் மரண வரியை வலுவந்தக்களவு என்று சொல்லுவதுபோலாகும். இடம் பற்றியும் காலம்பற்றியும் ஒருவனைக் கொல்லுதல் பெரு நலம் என்றும் பெருங்குற்றம் என்றும் பேச இடம் உண்டு. ஐரோப்பாவில் முற்கால நாகரிகப்படி இன்ப விளையாட்டு என்று கருதப்பட்ட பழக்கங்கள் இப்போது வட ஐரோப் பாவில் இயற்கைக்கு மாறான ஒழுக்கப் பிசகுகள் என்று கண்டிக்கப்படுகின்றன.

1894-ல், 'ஆண்மக்களும் பெண்மக்களும்' என்ற புத்தகம் முதன்முதல் வெளியாயிற்று. அதுவே அவரது பிற்கால ஆராய்ச்சிகளுக்கு நேர் தொடர்புடையது. காதல் மனப்பான்மையைப்பற்றிய அவருடைய ஆராய்ச்சிகளுக்கு அதுவே முக்கியமான அடிப்படை என்று அவரே கருதி னார். தமது வாழ்க்கையில் எழுதிய பெரிய நூலின் உண் மையான முக்கியத்திற்கு இந்நூலில் அதிக மதிப்புக் கொடுக்கவில்லை. தம் மனத்தில் எது முக்கியமாக முன்னே உருவெடுத்தது என்பதுபற்றி அவர் தெளிவாகக் கூறவில்லை. அதை முடிவாகத் தீர்மானித்தற்கு அவர் நிலையான வழிகளையும் காட்டவில்லை. அதற்குப் பொருத்த மான விவரங்களின் தொகுதிக்கு அதிகமாக அவர் சேர்க்க வும் இல்லை. 1894-ல் இவற்றுள் எதுவும் செய்யத்தக்க

1. Crime.

நிலையில் அவர் இல்லை. பொதுவாகக் கருதினால் ஆண்களுக்கும பெண்களுக்கும் உள்ள வேறுபாடுகள் எவ்வளவுதூரம் வளர்ப்பைப் பொறுத்தது, எவ்வளவுதூரம் உடல் அமைபபைப் பொறுத்தது என்பனபற்றி இந்நூல் பேசுகின்றது என்னலாம்.

அவர் நூல் வெளியாகிப் பத்து ஆண்டுகட்குப்பின் நிகழ்ந்த பூதக்கண்ணுடி மூலமாகச் செய்யப்பட்ட பரிசோதனைகளால், ஆண் பெண் என்ற பகுப்பு எவற்றைப் பொறுத்தது என்பது தெளிவுபடுத்தப்பட்டது. ஒருத்தருடைய பரம்பரையாய் வருகின்ற உள்ளாற்றல்களுக்கு அடிப்படை, உடமபின் கருவிகளுக்குட் செங்கல்போலுள்ள கண்ணுக்குத் தெரியாத சிற்றறைகளிலுள்ளே கிடக்கும் நுட்பமாகிய நிற அணுக்களில் உள்ளது என்று தெரிகின்றோம். சிற்றறையுள் நிற அணுக்களின் இணைகள் காணப்படுகின்றன. இணையின் ஒருபகுதி தகப்பனாரிடமிருந்து வருவதும் மற்றொரு பகுதி தாயாரிடமிருந்து வருவதும் தெரியவருமு ஒவ்வொரு இணையிலும் இரு பகுதிகளும் ஒத்திருப்பதைக் காணலாம். ஏகதேசங்களில் பெண்ணுடம்பில் உளள் சிற்றறைகளில் இரு பகுதிகளும் ஒத்திருப்பதும், ஆண் உடம்பில் உள்ள சிற்றறைகளில் இரண்டும் ஒவ்வாதிருப்பதும் காணப்படும் தாயின் கருப்பையிலுள்ள் அணுக்களெல்லாம் ஒரே நிறமான அணுக்களாகவும, தகப்பனாரது உடம்புச் சத்தில் பாதி ஒரு நிற அணுக்களை உடையதாகவும் மற்றொரு பாதி மற்றொரு நிற அணுக்களை உடையதாகவும் காணப்படும். தாயின் கருப்பையில் உள்ள ஒருநிற அணுவொடு தகப்பனார் வித்திலுள்ள வேறுநிற அணு கலந்தால் ஆண் பிறக்கும்; ஒத்த அணுக்கள் கலந்தால் பெண் பிறக்கும்; சில சந்தர்பபங்களில் கருவின் சுற்றமைப்பில் அவசியமான நிலைமை இல்லாமையால் ஒத்த அல்லது வேறுபட்ட அணுவின் தொடர்பு பயன்படாதிருக்கலாம். அப்போது பிறக்கும் குழந்தைகளுக்கு ஒருபாலாரின் உடலமைப்பும் மற்றொரு பாலாரின் குண அமைப்பும் ஏற்படும். பால் வகையான

உடல் அமைப்பு சாதாரணமாகக் கருவுண்டாகுங் காலத்தில் தீர்மானிக்கப்படுவதாகும்.

1894-ம் வருடத்தில் சில பால்வேறுபாடுகள் மற்றவைகளைப் பார்க்கிலும் அழுத்தமாகப் பதிந்திருப்பவை என்றும் அல்லது முற்பட்டுப் பதிந்திருப்பவை யென்றும் தெரிந்திருந்தனவே யொழிய, உடலமைப்பு வேறுபாட்டைப்பற்றி யாதும் அதிகமாக உயிர் நூல் அறிஞர்கள் கூறவில்லை. உடலமைப்பு வேற்றுமைகள் வெவ்வேறான உடல்களில் எப்படி வெவ்வேறு வகையாகத் தோன்றுகின்றன; பாற்சார்பான தன்மைகளில் எவ்வகைகளில் அவை தோன்றுகின்றன என்று அக்காலத்து உயிர் நூல் பேசவில்லை. பிராணிகள் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள ஒரு வேறுபாடு யாதெனில், ஆண் சத்திற்குக் காரணமாகின்றது; பெண் முட்டைக்குக் காரணமாகின்றது என்பதே அதனோடு உறுப்பு வேற்றுமைகள் வெளிப்படையாகத் தோன்றின. ஆண்மயிலுக்குத் தோகையும் ஆண்மானுக்குக் கொம்பும் இருக்கின்றமைபோல்வன அவை. புணர்ச்சிச் சார்பான நடத்தைகளிலும் நடனம், ஒலி முதலிய வேறுபாடுகள் காணப்பட்டன. இவைகளெல்லாம் நேராக நிறஅணுக்களைப் பொறுத்தும் குறிப்பாக வெளிப்படும் சத்தின் சார்பு பற்றியும் ஏற்படுவன. புணர்ச்சி நடைவேறுபாடுகள் புறநிலைகளால் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை; அவை உடல் அமைப்பு வேற்றுமையைப் பொறுத்தனவே.

டாக்டர் சுக்கர்மன்[1] செய்த தற்கால ஆராய்ச்சிகளால் மனிதனுக்கு நெருங்கிய பிராணியினமாகிய குரங்குகளினிடத்தில் புணர்ச்சி நடைமுறைகள் ஒன்றைப்பார்த்து ஒன்று நடப்பதால் ஏற்பட்டன என்று தெரிகின்றது. வெவ்வேறு பாலார் வெவ்வேறு முறைகளைக் கற்பதற்கு வெவ்வேறு வகையான இயற்கைப் போக்கினை உடையவராய் இருக்கலாம். உடல் அமைப்பே முக்கியமென்பதில்லை. சாதாரணமாக நம்புவதற்கு மாறாக பாபூன்[2] என்ற குரங்கு

1. Zucherman. 2. Baboon.

வகையில் ஆண்களே ஆட்சி புரிவது என்பது நிரந்தரமாக இல்லை. சமய வாழ்க்கைகளை ஆண்களும் அடுக்களை வாழ்க் கைகளைப் பெண்களும் இயற்கையாக உடையவர் என்ற பண் டைய ஆரியக் கொள்கை, பிராணிகள் வளர்ச்சியில் புதி தாக ஏற்பட்ட மாறுதலைக் குறிப்பதே.

டாக்டர் சுக்கர்மன் சொல்வதுபோலக் குரங்குகளில் உடலமைப்புக் குறியை வேறாகப் பிரித்து ஆராய்தல் நாம் நினைப்பதைப் பார்க்கிலும் அதிகத் தொந்தரவான வேலை. மனிதர்களில் அங்ஙனமறிதல் அதைவிடத் தொந்தரவான செய்கை. தெளிவாக உள்ள பால்வேறுபாட்டுச் செயல் கள் தவிர எத்தனையோ வகையான சமுதாய வழக்கங் களில் ஆணும் பெண்ணும வேறுபடுகின்றார்கள்; அவ் வழக்கங்களின் பயனும் அழகும் வேறுபடுகின்றன இந்த வேறுபாட்டுக்கெல்லாம் பின்னணியில் குணவேறுபாடு ஒன்று இருப்பதாக நாம பேசுகின்றோம். குணம் என்பது பல தன்மைகளுக்கு ஒரு பெயராக வழங்குகின்றது. எந்தச் சமுதாயத்திலும் அதன் சரித்திரத்தில் ஒவ்வொரு நிலையில் உள்ள ஆண் பெண் நடத்தை வேறுபாடுகள் தெளிவாகக் கூறப்படத தக்கனவே. சில தொழில்களும் முறைகளும் ஆண்களுக்கே உரியனவாகவும், சில பெண் களுக்கே உரியனவாகவும் காணப்படுகின்றன. புறனடை கள் அங்கங்கே இருக்கலாம். இச்சமுதாய வேறுபாட் டுக்குக் காரணம் உடலமைப்பு வேற்றுமையே என்னும் கொள்கை எல்லிஸின் நூல் வெளியாகுங் காலத்தில பரவி யிருந்தது. விவிலிய நூலும் அதனை ஆதரித்தது

எல்லிஸின் நூல் 'ஒட்டு முகம், ஒட்டு முகமே' என்பதைத்தான் உறுதிப்படுத்தியது. அஃது ஒரு தனி மனிதனின் முகம் அன்று; நிழற்படம் எடுப்பவனின் முயற்சிப் பயனே அது. பிற்காலததில் கிடைத்த அறிவி னாலே எல்லிஸைப் பார்க்கிலும் தெளிவாகப் பால் வேற்று மையைப் பற்றிய பிரச்சினையை நாம எடுத்துக் கூறலாம். 'இயற்கை அறிவு' என்ற மயக்கச் சொல்லால் அதன் கலப்பினை நாம் மறைக்க வேண்டியதில்லை, காதற்செயல்கள்,

தொழில்கள், குணச்செயல்கள் முதலிய சமுதாய ஒழுக்கங்களில் உள்ள வேறுபாடுகளில் பார்த்துப் படித்தல் என்பது எப்போதும் காணப்படுவதொன்றே.

பார்த்துப் படிப்பதில் உள்ள வேறுபாடுகள் உடம்பின் சிற்றறைகளில் உள்ள நிற அணுக்களின் வேறுபாடுகள் காரணமாக நிகழலாம். அவ்வுடல் வேற்றுமை ஒழுக்கத்தை நேராகவும் பாதிக்கலாம்; சுற்று வழியிலும் பாதிக்கலாம். ஏனெனில், சில இயற்கை நடத்தைக்குச் சில சமுதாய ஒழுக்க விதிகள் இடைஞ்சலாக இருக்கலாம். தற்காலச் சமுதாய வாழ்க்கையில் வீட்டுக்கு வெளியே வேலை பார்பபது பிள்ளைப்பேற்றிக்கு இடைஞ்சலாக இருக்கும். சமுதாய வழக்கங்கள் காரணமாக இருபாலாருடைய புணர்ச்சி நடத்தைகளும் வேறுபட்டு அவை தொடர்ச்சியாக வழக்கத்தில் வநதிருக்கலாம. பிள்ளைப் பேறு காரணமாகவே பெண்கள் போர்வீரராய் இருப்பது வழக்கமில்லாமற் போய்விட்டது. அதனால் போர் புரியும் சமுதாயத்தில் ஆண் மக்களுக்கே ஆதிக்கம் ஏற்பட்டது. அவ் வாதிக்கம் காரணமாகப் பெண்மக்கள் தகுதியாக வேலை செய்யக்கூடிய சில துறைகளையும் ஆண்மக்களே கையாளத்தக்க நிலை ஏற்பட்டது.

ஆண் பெண்களுக்கு உள்ள வேற்றுமைகளைப் பற்றித் தெளிவாக முதலில் தோன்றிய கருத்துக்களிலே மக்கள் ஒட்டிக்கொண் டிருப்பதற்குக காரணம், ஆண்மக்கள் எந்தச் சமுதாய நிலைமைகளுக்கு உட்பட்டு வளர்க்கப்படுகிறார்களோ அதே வகையான சமுதாய நிலைமைகளிற பெண்மககள் வளர்க்கப்படுவதில்லை என்பதே. மனம் சம்பந்தமான பரிசோதனைகளால், அறிவை அளந்து செய்த சுருக்கமும் திட்பமுமான ஆராய்ச்சிகளால், இருபாலார்க்கும் எடுத்துப் பேசத்தக்க மூளை வித்தியாசம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பெண்கள் கட்சியின் எதிரிகள் உயர்ந்த விவகார ஆற்றல் பெண்களுக்குக் கிடையாது என்று வீரமாகப் பேசிவந்தார்கள். அவர்கள் தங்கள் சொல்லை . நிலைநாட்டக் காட்டிய செய்திகள்

உண்மையாயினும் அவர்கள் கூறிய அவற்றின் விளக்கம் தவருக இருக்கின்றது. அதேவிதமான தர்க்கம் பிற்போக்குடைய சமுதாயங்களின் திறமைகளைப் பற்றியும் வழங்கி வருகிறது. சில காலமாகச் செய்யப்பட்டுள்ள மனிதநூல் ஆராய்ச்சிகளால் பால் வேற்றுமைகளைப்பற்றிச் சரித்திரச் சார்பாகவும தரைநூற் சார்பாகவும் கிடைத்திருக்கின்ற விவரங்கள், சமுதாய ஒழுக்கத்தில் உள்ள பால்வேறுபாடுகள் உடலமைப்பின் வேறுபாடுபற்றி ஏற்பட்டுள்ளன என்ற பரம்பரை நம்பிக்கையை அசைப்பனவாய் இருக்கின்றன. இருபாலாருள்ளும் மனித சமுதாயங்களில் எதிரிடையான நடத்தை காணப்படினும் எல்லாச் சமுதாயத்திலும் எல்லாக் காலத்திலும் ஒருபாலார்க்கே உரிய நடத்தை யென எதையும் சொல்வதற்கில்லை.

உயிர்நூலிற் செய்யப்பட்ட தற்கால ஆராய்ச்சிகள் பழைய நம்பிக்கையை மிகவும் தப்பெனக் காட்டுகின்றன. செங்கருப் புழு, பழத்தின் ஈ என்பவற்றின் வளர்ச்சியில் ஏற்படும் பாற்பகுப்புகளைப் படிப்படியாகச் சோதனை செய்து பார்த்ததில், கருவில் உள்ள எவ்வித நிற அணுக்கள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பதைப் பற்றிப் புது விவரங்கள் கிடைத்துள்ளன. ஆண் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் உள்ள நடத்தை வேறுபாடு கருவின் அமைப்பைப் பொறுத்ததாய் இருந்தால் அவற்றைக் கருவின் வளர்ச்சியிலேயே படிப்படியாக ஆண் பகுப்பு எது, பெண் பகுப்பு எது என்று அளந்து அறிதல் கூடும். நடத்தை சம்பந்தமாக அப்படி அளந்தறிய இடமில்லை. இளைஞன் ஒருவன் உடற்பயிறசியில் மிக்க தேர்ச்சியுற்றவனுய் ஆண்தன்மை யுடையவனுகக் காணப்படலாம். ஆனல், அறிவு முயற்சியில் கோழைத்தனமாயும் பெண் தன்மை யுடையவனுயும் அவனே இருப்பதால் அவனை ஆண்மகனல்லன் என்று சொல்லமுடியுமா? அவன் தம்பி சாட்சி விசாரணைகளில் குறுக்குக் கேள்வி கேட்பதிலும் வாதஞ் செய்வதிலும் ஆண்தன்மை யுடையவனுய்ப் போட்டி விளையாட்டுக்களில் விருப்பற்றவனுய் ஒதுங்கிச்

சென்றால் அவன் தன்மையை என்னென்று கூறுவது? கருவில் உள்ள அணுக்களின் திறத்தை வைத்து இவற்றை அளப்பதற்கு வழியில்லை.

ஹாவெலாக் எல்லிஸின் கீர்த்தியின் முக்கிய அடிப்படை சாதாரண வழக்கத்தில் காணபபடும் காதல் நடத்தைக்கு அபபாற்பட்ட செயல்களின் வேறுபாடுகளைப்பற்றி ஆராய்ந்து வெளியிட்ட பலவற்றை உள்ளடக்கிய பெரும் புத்தகங்களில் அமைநதிருக்கிறது. முன்கூறிய நூல்போலல்லாமல் அவர் தானே நேரில் அறிந்த தனித்தனி மக்கள் வரலாற்று நுட்பங்களின் களஞ்சியமாக அவை இருக்கின்றன. காதல்கொள்ளும் பொருள்களின் மாறுட்டத்தைப்பற்றி அவை முதலில் பேசுகின்றன. கடைசியாகக் காதலிப்பவனது தன்மை மாறுட்டத்தைப்பற்றி அவை பேசுகின்றன. வழக்கமான காதல் ஒழுக்கமுறைக்கு மாறுபட்ட பலவகைச் செயல்களைப்பற்றி அவை பேசுவதால் உடற்கூறு காரணமாக எழக்கூடிய இடைப்பட்ட காதற் செயல்களுக்கும் சமுதாயச் சார்பான காதற் செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக அறியக்கூடும். நூலின் முதல் நோக்கம் அதுவாக இல்லாதிருக்கலாம். பிராணிகளிற் காணப்படும் இடைப்பட்ட பாற்பகுபபுகளுக்குரிய காரணத்தைப் பிறப்புநூல் வல்லார் தெரிவதற்கு முனனேயே இந நூல்கள் குறிப்பித்துள்ளன.

பிராணிகளைப்பற்றி ஆராய்வது ஒருபுறம் இருப்ப, நோய்ப்பட்ட உடல் நிலைகளைப் பரிசோதனை செய்வதால் உடம்பு தன் கடமைகளை எவ்வாறு செய்கிறதென்பதை நாம் மிகுதியும் அறிகிறோம். நோய்நிலை என்பது சாதாரண உடம்பின் செயலில் ஒருபகுதி மிகுதிப்படுவதேயாகும். மனிதனுடைய ஒழுக்க அறிவியற்கையைப் பற்றிய நோய் நிலையும் இவ்வாறேயாகும். 1890 முதல், 1900வரை இந்தக் கருத்து இப்பொழுது தெரிவதுபோல் தெளிவாகப் பரவவில்லை. உடலில் உள்ள கலவை மாற்றங்களில கரிநீர்ச் சத்துக்கள் இன்ன இன்ன நிலைகள் அடைகின்றன என்பதை நீரிழிவு நோய் ஆராய்ச்சியால் நாம் எவ்வளவு

அறிகிறோம் என்பதும், தொண்டையிலுள்ள தசைக் கோளங்களின் நீர்ப் பெருக்கால் உளவாம் உடல்வளர்ச்சிக் குறை, அறிவு வளர்ச்சிக் குறை என்னும் நோய் நிலைகளை ஆராய்வதால் உடம்பிலுள்ள நீர்ச் சுரப்புகளைப்பற்றி நாம் நன்கு அறிகிறோம் என்பதும் ஒவ்வொரு உயிர்நூலாரும் நன்கறிவர்.

மனிதனது ஒழுக்க இயற்கைக்கு மாறுகிய செயல்களைக் குற்றம் என்று பெயரிட்டு உடற்சார்பாக நன்கு ஆராய்ச்சி செய்யாத போலீசார், வழக்கறிஞர் முதலியவர்களுக்கு அவற்றைப்பற்றிக் கவனிக்க விட்டுவிடுவது வழக்கமாயிற்று. ஹாவெலாக் எல்லிஸ் அவ்வகைத் தொழில்களினின்று நல்வினைப்பயனுக விலகிவிட்டார்

"காதற் செயல் மாற்றங்கள்" என்னும் நூலை அவர் வெளியிட்டு ஒரு வருட மாவதற்குள் 1898-ல் அதனை விற்றவர்மீது குற்ற வழக்குத் தொடரப்பெற்றது. அதனுல் விற்றவருக்கு மிக நட்டம் உண்டு. ஆசிரியர்மீது வழக்குத் தொடரப்படவில்லை. அந் நூலின் செர்மன் பதிப்பு வெளியானதும் ஆங்கிலப் பதிப்பை ஆசிரியர் நிறுத்திவிட்டார். "காதல் மனப்பான்மை" என்னும் அவருடைய நூல் இப்போது ஆங்கிலத்தில் கிடைப்பதற்குக் காரணம் அதனை வெளியிட்ட அமெரிக்கர் ஒருவரின் முயற்சியே யாகும்.

அந்நூலின் முக்கியம் அறிவுநூல் முக்கியத்திற்கு ஒருவகையிலும் குறைந்ததில்லை. அஃது இயற்கை வரலாற்றையே பேசுகின்றது. கணக்கெடுத்துக் காட்ட முடியாத ஆராய்ச்சி நுட்பங்களைச் சில அறிவுநூலார் பொருட்படுத்துவதில்லை பூதநூல், இயற்கைநூல் முதலியவற்றிற்குக் கணக்கு அவசியம் என்கின்ற கருத்து எல்லா அறிவு நூல்களுக்கும் அஃது அவசியம் என்ற எண்ணத்தை யுண்டாக்கிவிட்டது. அளக்கக்கூடிய பொருள்களைப்பற்றியே அறிவுநூல் பேசுவது உண்மையே. ஆனல் அறிவாராய்ச்சிப் பொருள்களை எப்படி

அளத்தல் கூடும்; எவ்வகையான அளவை இலாபகர மானது என்று கண்டு பிடிப்பதே அறிவுநூற் சரித்தி ரத்தில் மிகுதியும பேசப்படும். ஒவ்வோர் அறிவு நூலிலும் கணக்கெடுப்பதற்கு முன் பல நூற்றுண்டுகளாக அதன் சார்பான பொருள்களை நுட்பமாகக் கவனித்துப் பார்ப்பதே நடைபெற்றிருக்கிறது. அராபிய வைத்தி யர்கள் இல்லாமற்போனால் தற்காலக் கலவை நூல்[1] ஏற்பட் டிராது. லின்னேயஸ் போன்ற புற்பூண்டு தொகுப்போர் இல்லாமற்போனால் தாவரநூல் ஏற்பட்டிராது. மனித னது சமுதாய வாழ்க்கையைப்பற்றி அறிவாராய்ச்சி யானது விவரங்கள் தொகுக்கும் நிலையில்தான் இப் பொழுது இருந்துகொண்டிருக்கிறது. அறிவுநூ லொன் றின் முககிய அடையாளமாவது, செயல் முறைக்கு வழிகாட்டும் விவரங்களை அது எவ்வளவுதூரம் அளிக்கும் என்பதே.

இவ்விதமாகப் பார்க்கும்போது ஹாவெலாக் எல்லி ஸின் நூல் இருவகையான முக்கியம் உடையது தனி மனிதனின் காதல் ஒழுக்கத்திற்கேற்ற உடற்பாதுகாப்பு முறையைப்பற்றி அஃது ஒரு புதிய பார்வையை அளிக் கிறது. இரண்டாவதாக நம்முடைய நாகரிகத்தின் நிலையற்ற சில முக்கிய இயல்புகளின்மீது நம்முடைய கவனததை அது நிலைநாட்டுகின்றது.

ஒருவனது காதல் ஒழுக்க நடையை எப்படி ஒழுங்கு படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுபற்றிய கருத்துக்கள் மனித இயற்கையின் நுட்பமான ஆராய்ச்சிச் சார்பாக உருவெடுக்காமல் இரண்டு முனைகளுக்கு நடுவே ஊசலாடு கின்றன. ஒன்று காதற்செயல்கள் தசைச் சேட்டை என்று கழித்துவிடுதல்; மற்றொன்று, உள் அன்பு அல்லது உடற்பழக்கம் ஏதோ ஒரு தன்மையானது என்று விளங் காத சொற்களால் கூறுதல்; எல்லிஸின் ஆராய்ச்சியால் இரண்டும் பொருத்தமில்லாதன என்பது தெரியவரும்.

1. Chemistry.

டாக்டர் சுக்கர்மன் ஆராய்ச்சியைப்போல அது புதிய உயிர் நூற் கருத்துக்கு அநுசரணையாய் உள்ளது. காதல் அமைப்புப் பலவகைக் கலப்புடைய சமுதாய ஒழுக்கத்தின் பயனும் உள்ளது. அதுவே உடல் தொடர்பிற்குக் காரணமாயும் அதனை உள்ளடக்கியும் இருப்பது. இக்கலவையில் குண எதிர்ப்பு அவசியமானது. அது தனி ஆட்களின் குண இயற்கையைப் பொறுத்தது. அவ்வொழுக்கத்தில் எப்பகுதியிலாவது யாருக்கு ஆட்சித்திறன், யாருக்கு அடங்குந்திறன் அமையுமென்பது முதலில் உடற்கூற்று வேறுபாடுபற்றித் தீர்மானிக்கப்படுவதன்று.

காதலில் ஈடுபடுவதற்கு முக்கியமாய் வேண்டப்படுவது உடற்சார்பாகிய நோக்கத்திற்குத் துணையாக உள்ள நுட்பமான முன் இயல்புகள் குணத்தால் ஒற்றுமைப்பட வேண்டும என்பதே. முடிவாகப் பார்த்தால் தெளிவான உடற்சார்பு நோக்கமும், வீரமாகப் பேசும் அன்பு நோக்கமும், ஒரே பயனுக்கு வந்து சேரும். காதல் வளர்ச்சி என்பதன இயல்பினை நன்கறிந்து, திடீரென்று காதல் கொள்ளுதல் என்பதுபற்றிப் பேசுதல் ஒழிந்தபோதுதான், காதற் சேர்க்கையைப்பற்றி அறிவுப் பொருத்தமான விளக்கம் ஏற்படும். ஒவ்வொருத்தருடைய காதற்சார்பான உள்ளப்போக்கை உருப்படுத்துங் குண இயற்கை வேறுபாடுகள் புரூட்[1] என்பவர் கருதுவது போல, பிள்ளைமைப் பருவத்தில் ஏற்படும் அனுபவ உணர்ச்சி காரணமாக அமையுமென்றோ, அல்லது உடற் பரம்பரை காரணமாக அமையுமென்றோ ஹாவெலாக் எல்லிஸ் துணிந்து கூறவில்லை. பரமபரைப் பழக்கத்திற்கு அவர் முக்கியங் கூறுகின்றார். அதைப்பற்றிய நம்பிக்கை சமுதாய வாழ்க்கையில் முக்கியமானதாகும். சமுதாயச் சூழ்நிலைகள் காரணமாக ஒழுக்க வேறுபாடுகள் அமையும் என்று கொண்டால் ஒரு முறைப்பட்ட ஒழுக்கத்தில் நின்று மாறுபடுந் தவறுகளை முறைமாற்றம் என்று எண்ணவேண்டி வரும். முறை மாற்றத்துக்குத் தண்டனை,

1. Freud.

கல்வி, வைத்தியம் என்பவற்றுற் சீர்திருத்தஞ் செய்ய வேண்டும் என்பது ஏற்படும். ஒழுக்கத்தில் முறைமாற்றம் பிறவியை ஒட்டியது என்று கண்டால் வெவ்வேறு ஒழுக்க முறைகளுக்கு ஏற்றவாறு சமுதாய அமைப்புகளை மாற்றவேண்டுமென்பது முடியும். வெவ்வேறு மக்களின் வெவ்வேறு காதல்மனப்பான்மைக் கூறுபாடுகளை அறிவதைப் பொறுத்துக் காதற்சேர்க்கையை உருப் படுத்துதல் அவசியமாகும். இக் கருத்து இருபாலாரின் தொடர்பைபபற்றி ஒருசார்பான சீர்திருத்தக் கொள்கை உடையவருக்கும் பழைய கொள்கை உடையவருக்கும் ஒவ்வாதிருக்கலாம்.

பெண்களுக்குச் சார்பாக ஆதியிற் பேசியவர்கள் காதல் தொடர்புக்குக் குண எதிர்ப்பு அவசியமென்ப தைப் பொருட்படுத்தாது மனப்பான்மை முற்றிலும் ஒத்த இருவரது சேர்க்கையாக மணவாளரின் கூட்டுற வைக் கருதினுர்கள்; எல்லாருடைய காதல் ஒழுக்கமும் ஒரேமாதிரி இருக்கவேண்டுமென்பதை விரும்பினுர்கள். நம்முடைய காலத்திலேயே பெர்ட்ரண்டு ரசலின் கருத்து யாதெனில் உள்ளிருக்கும் அழுக்கை நீக்கிவிட்டால் எல்லாருடைய காதல் ஒழுக்கமும் ஒருதன்மையாய் இருக்குமென்பதே. தக்க ஆண்மகன் ஒருவன் தக்க பெண்மகளைத் தனது இயற்கை அறிவினுலேயே எங்ஙனம் கலந்து சுகமாக வாழலாம் என்று தெரியக் கூடும் தெரிவதற்குத் தடை யாதெனில் தக்க பிள்ளை களாய் இருக்கும்போது அவர்கள் கிறித்துமதக் கோட்பாடு களிற் பயிற்றப பட்டமையே என்பது அவர் கருத்து.

காதல் மனப்பான்மையைப்பற்றி அறிவது தனி ஆட் களின் நல்வாழ்க்கைக்கு அவசியமாவதோடு சமுதாயததிற் கும் அவசியமானது நுட்பமான ஆராய்ச்சித் தலைவர்கள் சென்ற சில ஆண்டுகளாக ஏற்பட்டுளள சமுதாயத் தட்டுக் கேட்டுக்குக காரணம் நாம மனித இயற்கையை அறிவதைப் பார்க்கிலும் வெளி இயற்கையை அதிகமாகக் கற்றுவிட் டதே என்கின்றுர்கள் மனித இயற்கையை அறியாமை

யினால்தான் நம்முடைய பொருளாதார நிலையங்கள் முறிபட்டனவோ என்னவோ என்று சந்தேகித்தாலும் பொருளாதார அபாய நிலையினாலேயே நமது சமுதாயப் பரம்பரைக் கொள்கைகள் வீழ்ந்து நொறுங்கின என்று எண்ணக் காரணமிருக்கிறது.

19-வது நூற்றாண்டின் மூன்று தலைமுறைக்குள் சுயமான சமுதாய மாற்றக் காட்சிகள் ஏற்பட்டன முன் மனித வரலாற்றில் அப்படிப்பட்ட நிகழ்ச்சி நிகழவில்லை சமுதாய ஒழுக்கத்தின் புதுபுது மாதிரிகள் ஒன்றன்பின் ஒன்றாய் விரைநது தொடர்வனவாயின. 19-வது நூற்றாண்டு முடிவில் மேலைநாட்டு நாகரிகம் ஒழுங்கானமுறையில் பொது அறிவு வளர்ச்சி, தனியாட்சி, சுயாதீனம் நிலைத்த செல்வ வாழ்க்கை, உலக சமாதானம் முதலியவற்றை நோக்கிச் சென்றுகொண் டிருப்பதாகத் தோன்றிற்று. இன்றைக்குத் தற்காலத்தின் சுவததிக அடையாளம அநாரிகத்தை நோக்கிச் செல்லுந் தலைகீழான பிற்போக்கைக் குறிக்கிறது. அதற்கு அடங்கியோரின் காலின் கீழ், பாதி ஐரோப்பாக்கண்டம் இப்பொழுது இருக்கிறது சென்ற நூற்றாண்டின் முடிவில் முழுச் சமாதானம் மக்களுக்குள் உண்டாகும் என்று சில பெரியோர்கள் சொன்னது பிசகல்ல எதிரிகள் சொன்னதுபோல மனித இயறகை மாறவில்லையாயினும் பெரியார் கருத்துப் பிசகுவதில்லை. மனித இயற்கையாயினும் புற இயற்கையாயினும் அவற்றைப்பற்றிப் பேக்கன் சொன்னது சரியே அஃதாவது, இயற்கைக்கு முதலில் கீழ்ப்படிநதுதான் பின் அதனை ஆளக்கூடும் என்பதே மனித இயற்கை மாறுபடுவதற்கு உரிய சட்டம் இன்னதென்று உணராமல் மனித இயற்கையை மாற்றுவதற்கு 19-வது நூற்றாண்டினர் தொடங்கினர். புதுமாதிரி சமுதாய ஒழுக்கம் நிலை பெறவேண்டும் என்றால் மனிதர்களை எப்படிக கல்வி பயிற்றவேண்டும் என்பதைக் கண்டு பிடியாமல் மனிதர்கள் நடுவே புதுமாதிரி ஒழுக்கத்தை அக்காலதது மக்கள் புகுத்தத் தொடங்கினர்.

சமுதாய மாற்றக் காட்சிகளின் மூன்று பகுதிகள் மனித இயற்கையைப் புதுமாதிரி எதிர்ப்பிற்குத் தயார் செய்யாமல் அதன்மேல் புதுபபாரம சுமத்தின. 19-வது நூற்றுண்டின் தொடக்கததில் முன்னில்லாத பொதுசனங்களின் மனமாறுதல், துன்புறுத்துந் தண்டனை சம்பந்தமாகத் திடீரென்று தோன்றிற்று சித்திரவதை செய்வதும் பொது இடத்தில் மரண தண்டனை கொடுப்பதும், பழிக்குபபழி வாங்குவதும, பல பழைய நாகரிகங்களின் அடையாளஙகளாக இருநதன. கிரேக்கர்களுக்குள் ஸ்டாயிக்ஸ் என்னும் தத்துவ ஆராய்ச்சிக்காரரும, பிற்காலத்தில் இராஸமஸ்,[1] வால்டேர[2] முதலிய பெரியோர்களுமே அவற்றைக் கண்டிததார்கள். ஆனுல் 19-வது நூற்றுண்டின் தொடக்கத்தில் கொடுந்தண்டனை கூடாது என்ற உணாச்சி பொதுமக்கள் எல்லாருக்கும ஏற்பட்டது. அமெரிக்கப் புரட்சிக்குப்பின் அதன் முககியம் அதிகரிததது.

19-வது நூற்றுண்டில் உண்டான இன்னெரு மாற்றம் யாதெனில் சுகாதார மேம்பாடு. சுகத்தின் அவசியத்தைப் பற்றிப் புதுப்புது நுட்பங்கள் காணப்பட்டன, எல்லாரும் சோப்பை எளிதாக வாஙகுமபடி செய்ய அதனைக் குறைவான விலைக்கு உண்டாக்கும் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. வடநாட்டிற்குப் புதுமையான அடிக்கடி குளிப்பு முறைகளும் பலரிடத்தும பரவலாயின. சுத்தமான புதுக் காற்றுத் தெய்வம்போலக் கொண்டாடப்பெற்றது. வீட்டினைச் சுத்தமாக வைக்கும புது ஒழுங்குமுறையில் வாசனைத்திரவியங்கள் கூடா என்பதும் அவற்றைக் கலியாணத் திறகூட அதிகமாகப் பயன்படுத்துதல் கூடாது என்பதும் பழக்கமாயின.

மூன்றுவதாவது, தனி மனிதனின் சிறப்பே முக்கியமாயிற்று. ஒரே இடத்தில் பல மக்கள் வாழத் தொடங்கினமையால் சமுதாயச் சார்பினை மனிதன் அதிகமாக நாடவில்லை. புது இடங்களுககு மக்கள் மாறிச் சென்றமையால

1. Eramus. 2. Voltaire.

குடியேறின இடங்களில் சமுதாயத் தொடர்பு அதிகமாக அமையவில்லை. மத நம்பிக்கை குறைந்தமையால் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் உள்ள தொடர்பு குறைந்து விட்டது.

19-வது நூற்றாண்டின் சமுதாயச் சீர்திருத்தக்காரர்கள் கொடுமைக்குறைவும் அதிகத் தனிமையும் ஏற்பட்டால் மக்கள் நல்லவர்களாயும் பாதுகாப்பு மிகுதியுடையவர்களாயும் இருப்பார்கள் என்று எண்ணினார்கள். கொடுமை, நோய், தப்பு, நம்பிக்கை என்பன எளிதாக நீக்கப்படக்கூடிய இடைஞ்சல்களென்று அவர்கள் நம்பினார்கள். அவை மனித இயற்கையில் ஆழமாய்ப் பதிந்திருப்பன என்பதை அவர்கள் அறியவில்லை ஒரு நூற்றாண்டாகப் போது வாழ்க்கையில் கொடுமை மிகவும் குறைவுபட்டாலும் மக்களின் கொடிய இயற்கையை மாற்றக்கூடிய கல்வி எதுவென்று ஒருவரும் கருதவில்லை. பொதுவான சுகாதாரம் விருத்தியடைந்தாலும் வைத்தியர்களைத் தவிர மற்றவர்கள் காதல் காரணமான நரம்புப் பலவீனத்தைத் தடுப்பதுபற்றி எண்ணவில்லை. கொடுமையை நீக்கினாலும் அதற்குப் பதிலான ஊக்கம் எழும்பும் காட்சிகளைச் சீர்திருத்தக்காரர் ஏற்படுத்தவில்லை. நோய்க்குப் பயந்தாலும் உடலைப் பயன்படுத்த முறை தெரியாது பலர் அஞ்சிக்கொண்டிருந்தனர். தனியே இருக்கலாம் என்ற உரிமை கிடைத்தாலும் தனிமைத் துயரை நீக்கும் வழி கண்டு பிடிக்கபபடவில்லை. நாகரிக மக்கள் இலாபத்தைப் பார்க்கிலும் நட்டத்தை அதிகமாகக் கருதுபவராயினர். அப்போது நாகரிகமே மக்களுக்குப் பகையாகத் தோன்றியது. பொதுமக்கள் கருததை எதிர்பார்த்து லாரன்ஸ் போன்ற சில ஆசிரியர்கள் அநாகரிகத்தை இளைஞர் கண்ணுக்கு உயர்த்திக் காட்டினர். ஆஸ்திரிய அம்பட்டன் ஒருவன் தனக்கு அதிகார வாழ்வு வந்தபோது, கூடாவொழுக்கக் காட்சிகளைப் பழைய முறைப்படி காட்டுவானாயினன்.

இன்னும் பல ஆண்டுகளுக்கு மேல்நாட்டு நாகரிக வாழ்க்கையில் அறிவுக்கு மாறான செயல்களும், பலவந்தச

செயல்களும், பொறுமைக் குறைவும் காணப்படும் மனித னது நடத்தையைப்பற்றிய அறிவுநூல் செவ்வையாக ஏற் படும்வரை, முற்போக்குள்ள சமுதாயத்திற்கு வேண்டப்படும் பொதுத் தேவைகளையும் தனி மனித இயற்கைக்குரிய தனி வாழ்க்கைத் தேவைகளையும் ஒற்றுமைப்படுத்த முடியாது. ஒழுக்க அறிவு நூலுக்கு முற்பட்ட வேலையாக எல்லிஸ் முதலியோர் அடிகோலி இருப்பதன் சமுதாய முக்கியம் யாவரும் அறிந்து பாராட்டற்பாலது.

ஹாவெலாக் எல்லிஸ் இருமாதங்களுக்குமுன் (1936 சூலை 10உ அடுத்துக்) காலஞ் சென்றுவிட்டார். அவர் 2—2—1859-ல் கிராய்டன்[1] என்னுமிடத்திற் பிறந்து தனி யாளுகைக் குட்பட்ட பள்ளிக்கூடங்களிலும செயின்ட் தாமஸ் மருத்துவச்சாலையிலும் கல்வி பயின்றார். அவருடைய பெற்றோர்கள் கடற்சார்பான தொடர்புடைய குடும்பத் தினர். அவர் 1875-முதல் 1879-வரை நியூ சவுத் வேல்ஸின்[2] பல பாகங்களில் ஆசிரியராயிருந்தார். பின், எல்லிஸ் இங்கிலாந்திற்கு மீண்டு மருத்துவராகத் தகுதி யுற்றார் சில நாட்கள் அவர் வைத்தியத் தொழில் நடாத்தினார். 1887—89-ல் பழைய நடிகா வெளியீடுகளைப் பதிப்பித்து வந்தார. ஐந்து ஆண்டுகளாகத் தற்கால அறிவியற் றொகுதி யென்னும் வெளியீடுகளை மேற் பார்த்தார்.

1891-ல் அவர் மணவாழ்க்கை தொடங்கினர். அவர் மனைவி 1916-ல் இறந்தாள். புது உணர்சசி, வாழ்க்கை நடனம், பாலியர் மனநூல் முதலிய பலசிறப்பட்ட நூல் களுக்கு அவர் ஆசிரியர்.

1. Croyden. 2. New South Wales.

# ச. ஸ்டாலின்[1]

இற்றைநாள் உலகில் ஒருவகைத் தலைவர்கள் நிறைந்திருக்கிறார்கள் அவர்கள் மிக ஓட்டமான பேச்சு வன்மையும் வீரமான நிலைகளும் உடையவர்கள்; நாடுகளுக்குத் தாங்களே பிரதிநிதிகள் என்று உரிமை பாராட்டுகிறவர்கள்; அறியாத மூட நம்பிக்கையுடைய மக்கள் பாதித் தெய்வத்தன்மை யுடைவர்களுக்குக் காட்டும் மரியாதை தங்களுக்குக் காட்டவேண்டு மென்பவர்கள்; அத்தகைய தலைவர்கள் எப்போதும் சரித்திரததில் ஏராளமாக இருந்திருக்கிறார்கள்; சரித்திரத்தின் பக்கங்களில் அவர்களுடைய மறக்கப்பட்ட, அசட்டை செய்யபபட்ட கல்லறைகள் சிதறிக கிடககின்றன. இருபதாவது நூற்றாண்டு ஐரோபபாவின் முற்போக்கான அரசுகள், தென்னமெரிக்காக் குடியரசுகளின் உழவர் சம்பந்தமான அநாகரிகத்தில் தங்களுடைய அரசியற் குறிக்கோளைத் தேடுதல் சரித்திரச் சார்பாய்க் குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் மனிதவாழ்க்கை ஒரு புதுவகையான வீர ஆண்மையால் வளமபடுததக் கூடியதன்று. அத்தகைய எதேச்சாதிகாரிகளோடு ஸ்டாலினை ஒத்துப பார்த்தல் முட்டாள்தனமாகும். ஸ்டாலின் லெனினைக் குறிபபதற்குப படைத்துக் கூறிய சொற்றொடரையே அவருக்கு நாமும் சொல்லலாம். "அப்படிப்பட்ட மனிதர்கள் கடலில் ஒரு துளியே, ஸடாலின் ஒரு முழுக்கடல்;" அவர்களின் அளவின் ஆராய்ச்சிக்கு வேறாக அவர்களுடைய தன்மைகள் வேறுபடுவன. அவை இரண்டு மாறுபாடான உலகஙகள் போல்வன. ஸ்டாலின், லெனின் என்பவர்களுடைய பேச்சுக்கள் மிகச் சில. அவற்றின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை பார்த்தாலும் அழகான சொற்றொடாகள் அல்லது வீரமான சாடைகள் காண்பதரிது. செய்த வேலையைப் பற்றியும்,

---

1. Stalin..

நடக்க வேண்டிய போரிற் சண்டை உத்தரவு பற்றியும் தொழில் முறையிலுள்ள அறிக்கைகளாகவே அவை உள்ளன. எதார்த்தமான சண்டை உத்தரவுக்குரிய விபரங்களைக் கவனிக்குங் கூர்மையான கவனத்தோடும் சண்டை போடவேண்டிய இடத்தையும், தங்கவேண்டிய தானங்களையும் சிரமப்பட்டு அளந்தெடுக்கும் முயற்சியோடும் அவை தயார் செய்யப்பட்டவை.

ஸ்டாலின் ஒருநாட்டின் பிரதிநிதியல்லர் அவர் ஒரு வகுபபின் பிரதிநிதி; அவரைப போய்ப பார்க்கச் சென்ற உழவர் கூட்டத்தின் குழுக்களொன்றின் தலைவர் அவரைப் பார்த்தபோது ஏற்பட்ட இடர்பபாட்டை வெளியிட்டிருக்கிறார். அவர் ஸ்டாலினைப் பார்த்துப் பேசத் தொடஙகுகையில், 'பெரிய அன்பான தலைவரே' என்றழைத்தாராம் ஸடாலின் உடனே அவரைத் தடுத்து, 'தோழரே! பெரிய தலைவர் என்ற சொற்களை விடுத்துவிட்டு நாம காரியத்தைக் கவனிப்போமே' என்றாராம். வேலை செய்யும் மக்களின் புதல்வர் தாம் என்பதை ஸ்டாலின் மறக்கமுடியாது.



ஸ்டாலின்

தமக்கும் அவர்களுக்குமிடையில் பிளவு ஏற்படுத்துவது தம்முடைய உயிரைப் பிரித்தெறிவதுபோல அவருக்குத் தோன்றுமாம் மார்க்ஸ், எஞ்சல்ஸ் முதலியவர்களைப்போல லெனின் என்பவர் தமமுடைய வகுபபை விட்டு வேலைக்காரர்களோடு சேர்நது உழைத்தார். அப் பெரிய புரட்சிக்காரரைப் போலல்லாமல் ஸ்டாலின் வேலைககார வகுப்பின் நடுவேயிருந்து கிளமபினவர். அதுவும வேலைக்காரர்களில் மிகவும் துன்பப்பட்ட பிரிவுகளில் ஒன்றிலிருந்து அவர்

ஒரு குழுச் சேர்த்தற்கு உதவி செய்தார். அதன் நீக்க முடியாத பயன் பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளப் பட்டமையே. அவர் டைபிலிஸ் பட்டணத்தில் தாம் பிழைப்பதற்கு வேண்டியதைச் சம்பாதித்துக்கொண்டார். அங்கே ருஷ்யாவின் சமுதாய சனநாயகக் கட்சியின் உட் கழகம் 1900-ல் ஏற்பட்டபொழுது அவர் அதன் அங்கத் தினரானார். மற்றப் புரட்சிக்காரர்களுக்கு ருஷ்யாவில் ஏற்பட்டதுபோல அவருக்கும் போலீஸ் தொந்தரவு ஏற்படவே, ஒரு பொய்யான அனுமதிச் சீட்டுப் பெற்று நிலத்துக்குக்கீழ் வாழ்க்கை நடத்தவேண்டியதாயிருந்தது. டைபிளிசிலிருநது பாட்டூம் எனனும் துறைமுகத்திற்குப் போய்க் கப்பல்வேலை செய்கின்றவர்களுக்குள் அவர் சுறு சுறுப்பாய் வேலை பார்ததார். அங்கே முதலில் அவர் கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடம் சிறையிற் காலங்கழித்துப் பின்னர், கீழைச் சைபீரியாவில் நாட்டுக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டார். ஆனால் அங்கிருந்து தப்பியோடிப்போய் பாட்டூமில் அவர் பார்த்த வேலைக்குத் திரும்பிவிட்டார். அவர் சிறையிலிருந்தபோது புதிதாக உண்டாக்கப்பட்ட சமுதாயக் கட்சி இலண்டனில் நடத்திய அதன் இரண் டாவது மகாநாட்டில் பிளவுபட்டது. ஸ்டாலின் சைபீரியா வில் தள்ளப்பட்ட இடத்திலிருக்கும்போது அவருக்கு எழுதப்பட்ட லெனின் கடிதம் தெளிவாயும் மிகுந்த ஆழ முடையதாயு மிருந்தது. அதைப் படித்தபின் லெனின் நடத்திய புரட்சிக் கட்சியின் மிகுதிப் பக்கம் தான் சேருவ தாகக் கூறினார்.

காக்கஸ் மலைக்கருகே உள்ள இடத்தில் ஸ்டாலின் திரும்பி வந்தபோது கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளப் பட்டார். 1905-ல் நிகழ்ந்த குழப்பங்களில் அவர் தம் தன்மைகளைக் காட்டினார். அங்கே நடந்த புரட்சி வெற்றி பெறவில்லையானாலும் அஃது அவருக்குப் போர்த் தொழி லைக் கற்பித்தது. அங்கே போரானது சாரின் ஆதிக்கத் துக்கு விரோதமாகச் சிறு சூழ்ச்சிச் சண்டை வடிவெடுத்து ருஷ்யாவின் மற்றைப் பாகத்திற் பார்க்கிலும் அதிக நாள்

நீடித்திருந்தது. காக்கசைச் சார்ந்த போல்ஷிவியர்கள் சண்டையில் அவர் முழு விருப்பத்தோடு சேர்ந்து பல இடங்களில் தலைமை பெற்றனர். தங்களுக்கு வேண்டிய பணத்திற்கு அவர்கள் அரசாங்க நிதி நிலையத்தையும் ருஷ்யன் பாங்குகளையும் கொள்ளையடித்தனர். தைரியமாய்த் திருடியும், தைரியமாய் எதிரிகளிடத்திலிருந்து ஆயுதங்களைப் பிடுங்கியும் ஆயுதம் சேர்த்தனர். புரட்சி தோல்வியுற்றும் அழிக்கப்படவில்லை. அதிலிருந்து படிக்க வேண்டியவைகளைப் போல்ஷிவியர்கள் லெனினிடம் கற்றார்கள். 1905-ல் ஸ்டாலின் முதன் முதல் தம் கட்சிக்கும் ருஷ்ய வேலைக்காரர்களுக்கும் தலைவராகிய 'மலைக்கழுகு' என்று சொல்லப்படுபவரைக் கண்டார்.

1907-ல் அவர் காக்கசில் உள்ள பெரிய தொழில் நிலையமாகிய பாக்கு என்னும் பட்டணத்துக்குப் போனார். அங்கே வேலைக்காரர்கள் மென்செவிக் என்பவர் சார்பில் இருந்தார்கள். ஸ்டாலின் அங்கே செய்த வேலைகளினால் அப் பெரிய எண்ணெய் வியாபாரத் தலம் போல்ஷிவியர்களுடைய கோட்டையாய்விட்டது. கைதுசெய்தல், புறம்பே தள்ளுதல் என்பவற்றால் இருமுறை அவர் வேலைக்குத் தடையேற்பட்டது. ஸ்டாலின் மேம்பாட்டுக்கு, பாக்குவில் அவர் வாழ்க்கை மிக முக்கியமாகப் பயன்பட்டது. ருஷ்யர்கள், துருக்கியர்கள், அன்னியர்கள், பாரசீகர்கள், ஜியார்ஜியர்கள் என்னும் பல இனத்தவர்கள் ஒன்றுகூடுமிடம் பாக்கு. புரட்சிக்குச் சில வருடங்களுக்கு முன் அப் பட்டணத்தின் பெரிய செல்வ வளங்கள் அன்னியர்களின் பொருளுதவி கொண்டு முக்கியமாய் விருத்தி செய்யப்பட்டன. அந் நகரத்தில் பெரும் பணக்காரர்களும், சொல்ல முடியாத ஆசிய ஏழைகளும் இருந்தார்கள். ஐரோப்பியத் தொழில் முறைத் தேர்ச்சியும் ஆசிய ஆபாசமும் இருந்தன. உலகப் பொருளாட்சிக்கும், முதலாளிக் கொடுமைக்கும், ஆதிக்க முறைக்கும் எடுத்துக்காட்டான குடியேற்றப் பட்டணமாக இருந்தது. லெனின் அப்போது கொள்கையில் விரித்துப் பேசியதெல்லாம், ஸ்டாலின்

அனுபவத்தில் பாக்குப் பட்டணத்திற் கண்டார். முதலாளி ஆதிபத்தியத்தின் தன்மையும், வேலைக்கார வகுப்பின ருக்குத் தேசிய முடிபின் அளவற்ற முக்கியமும் ஸ்டாலின் அங்கே தெரிந்தார். தேசிய முக்கியத்தைப்பற்றி ஆத்திர மாய்ப் படிக்கத் தொடங்கி அதைப்பற்றிய மார்க்ஸ இலக்கி யத்தின் ஒவ்வொரு துண்டையும் வாசித்துக் கட்சியில் அதைப்பற்றி அதிகாரத்தோடு பேசும் முதல் மனிதரானார். 1912-ல் 'சமுதாயக் கட்சியும் தேசியக் கேள்வியும்' என்பது பற்றி அவர் ஒரு நூல் எழுதினார். அதில் அவர் இரண்டாவது பல நாட்டுப் பொது மகாநாட்டைப் பலமாகத் தாக்கினார். அது பல இனத்தாருக்குச் ——— போலிருக்கிற ஆஸ்திரிய அங்கேரியப் பேரரசின் சமுதாய விதிகளின் கொள்கையைத் தாக்கினதாகும். அவர் களுக்குத் தலைவர் [1]ஆட்டோ பாவர் என்பவர்

1905-க்குப் பின் பழைய போல்சிவியத் தலைவர்களிற் பலர் அதைரியப்பட்டு வீழ்ந்தனர். கடுமையான எதிர்ப்புக் காலத்தில் ஸ்டாலின், முலட்டோ, காலஞ்சென்ற சாக் காஸவர்ட்லோ முதலிய மனிதர்கள்தாம் லெனின் செலுத்துகிற வழியினின்று ருசியாவில் கட்சியை ஒற்று மைப்படுத்தினர். ஒரு பக்கத்தில் அவர்கள் ஒற்றர்களும் துரோகிகளும் எங்கும் வைத்து வேலைசெய்த சாரின் போலீஸ் படைக்கு விரோதமாகச் சண்டைபோட வேண்டியிருந்தது. இன்னொரு பக்கம் நல்லநாள் வருகிற வரை சட்டப்படி எது முடியுமோ அதை ஏற்றுக்கொண்டு சண்டையை விட்டுவிட வேண்டுமென்ற சமுதாயக்கட்சிப் பிரிவினருக்கு விரோதமாகப் போர்புரிய வேண்டி யிருந்தது. வெளிநாட்டிலிருந்து டிராட்ஸ்கி என்பவர் பிரிவிக்குந் தமது திறமையோடும் ஐரோப்பிய சமுதாயக் கட்சியினர் பலருடைய முழு ஆதரவோடும் கிடைக்கக் கூடிய ஆற்றல்களைப் போல்சிவியர்களுக்கும் லெனி னுக்கும் விரோதமாக ஒன்று சேர்க்க முயன்றுகொண் டிருந்தார். இந்தச் சோதனைக்காலத்தில் கடைசியாகச்

1. Otto Bauva.

சைபீரியாவில் தள்ளப்பட்ட இடத்திலிருந்து ஸ்டாலினை செயின்ட் பீட்டர்ஸ்பர்க்குக் கட்சிக்காரர்கள் அழைத்தனர். போலீஸ் தொந்தரவுகளால் அவருக்குச் சமாதானம் சிறிதுங் கிடையாது. 1910 முதல் 1912 வரை போலீசுக்குத் தப்பி ஓடுவதும், கைதியாவதும் தள்ளப்படுவதுமே தொடர்ச்சியாய் நடந்தன.

1912-ல் லெனின் எடுத்துக் கூறியதன்மேல் ஸ்டாலின், கட்சியின் உட்கழகத்துக்கு அங்கத்தினராகச் சேர்க்கப்பட்டார். உலகப்போருக்கு முற்பட்ட இரண்டு ஆண்டுகள் ருஷ்யப்புரட்சி வரலாற்றில் முடிபான காரியங்கள் நடந்த காலமாகும். வேலைவகுப்பினர் 1905-ல் ஏற்பட்ட நிலையிலிருந்து மாறி மறுபடியும சார் கொள்கைக்கும் முதலாளிக் கொள்கைக்கும் மாறுகச் சண்டைபோடத் தொடஙகினர். சண்டை மிகுதி ஆக ஆக, போல்சிவியர்களுக்குத் தொழில் நிலயங்களில் வேலை செய்பவர்களுள் மிகுந்தவர்களின் ஆதரவு கிடைத்தது. சிறிய குழுவாய்ச் சண்டையிடத் தக்கவர்களாய் இருந்த வியாபார ஒற்றுமை இயக்கத்தார்களின் ஆதரவும் கிடைத்தது. தொழில் வளர்ச்சி விரைவாக ஏற்பட்டு வேலைக்கார வகுப்பினர், எண்ணத்திலும அதிகாரத்திலும் வளர்ந்துகொண்டிருந்தனர். இந்தக் காலததில் போல்சிவியர்கள் டூமாவிலுள்ள ஆறு அங்கத்தினர் உதவிகொண்டும, பிராவ்டா என்னும் தங்களுடைய தினசரிபபத்திரிகையின் உதவி கொண்டும் தங்களுடைய சொற்சக்தியை மிக விரைவாக அதிகப்படுத்திக்கொண்டார்கள். இப்போது மேற்கு ருஷ்யாவிலுள்ள கட்சிக்குத் தலைவராயிருந்த ஸ்டாலின் ஒளிந்திருந்து லெனின் துணைகொண்டு டூமா அங்கத்தினர் வேலையையும் பததிரிகை வேலையையும் பீட்டர்ஸ்பர்க்கிலிருந்து நடத்த வேண்டியதாயிருந்தது. கட்சியைப் பலப்படுத்துவதற்காக நாட்டு மாகாணங்களுக்கு அவர் பல தடவை போக வேண்டியதாயிருந்தது. 1913-ல் மலினுவிஸ்கி என்பவரால் அவர் போலீசுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டார். அப்போது அவர் சைபீரியாவில பனிக்கடற் சார்பான வட

பாகத்தில் தப்பி ஓடிவர முடியாத இடத்திற்குக் கொண்டு தள்ளப்பட்டார். அங்கே மிகவும் அபாயகரமான, திருந்தாத அரசியற் கைதிகள்தாம் அனுப்பப் படுவது வழக்கம். அந்தத் தனிக் காட்டுச் சிறையிலிருந்து 1917-ல் நடந்த புரட்சிதான் அவரை விடுவித்தது.

பெட்ரோகிராடில் அவர் 1917 மார்ச்சுமாதக் கடைசியில் திரும்பியபோது எல்லாம் குழப்பமாயிருந்தது. லெனின் சுவிட்சர்லாண்டிலிருந்து திரும்பி வருவதற்கு மிக முயன்றும் முடியாமல் தம் கட்சிக்காரருக்கு, தற்காலம் அமைத்த அரசாங்கத்தை எதிர்க்க வேண்டுமென்றும், வேலைக்காரர்களும் குடியானவர்களும் சேர்ந்து அமைத்த சோவியத்துக்காரர் கைக்குள் அதிகாரம் கிடைப்பதற்குப் பாடுபடவேண்டுமென்றும் தெரிவித்தார். சண்டைக்கு மாறாக வேலைக்காரருக்கு ரொட்டியும், குடியானவர்களுக்கு நிலமும் கிடைக்கவேண்டுமென்ற போல்சிவியர் கருத்து, சோவியத்து அதிகாரத்தில்தான் நிறைவேறுமென்றும் அவர் கருதினார். ருஷ்யாவினுள் போல்சிவியத் தலைவர்களுள்ளே அபிப்பிராயம் நிலைபெறாமல் லெனினுடைய வழிக்குப் பலமான எதிர்ப்பு இருந்தது. ஸ்டாலின் தள்ளப்பட்ட இடத்திலிருந்து திரும்பியவுடன் நிலைமை மாறிற்று. புரட்சியோடு மறுபடி தோன்றிய 'பிராவ்டா' என்ற பத்திரிகை போரை ஆதரித்து அக்காலத்து அரசாங்கத்தையும் தாக்கத் தொடங்கியது. லெனின் ஏப்ரலில் திரும்பியபோது ஸ்டாலின் அவருடைய பக்கமாகப் பலரைத் திருப்பிவிட்டார். புரட்சியை மேல்நடத்த வேண்டுமென்ற அவருடைய கொள்கை ஆர்வத்தோடு ஒப்புக்கொள்ளத் தக்கதாயிற்று.

பிப்ரவரியில் போல்சிவியர்கள் எண்ணத்தில் குறைவாய் இருந்தனர். ஆனால் வேலைக்காரர்கள், சிப்பாய்கள், முழுவுடை அணிந்த குடியானவர்கள் என்பவர்களுள் திரளான மக்களின் ஆதரவு அவர்களுக்கு விரைவாகக் கிடைத்தது. ஜூலையில் ஆஸ்திரிய முனையில் குற்றமான எதிர்ப்பை மேற்கொண்ட கிரேன்ஸ்கியினுடைய அரசாங்

கத்துக்கு விரோதமாகவும், சோவியத்காரர்களுக்கு அதிகாரம் மாற்றவேண்டுமென்பதற்காகவும் ஒரு பெரிய கிளர்ச்சி பெட்ரோகிராடிலுள்ள காப்புப்படைகளின் வேலைக்காரர்களுள் நடைபெற்றது. கலகம் உரிய காலத்திற்கு முற்பட்டதாயிருந்தது. போல்சிவியர் அதைத் தடைசெய்ய முடியாமை கண்டு தாங்களே தலைமைபூண்டு அவர்கள் பின்னோட்டம் ஒழுங்காய் நடைபெறும்படி செய்தனர். ஜூலை நாட்களில் நடந்த காரியங்களின் பயனாக அரசாங்கத்தார், போல்சிவியர்களை எதிர்க்கும் படைகளையெல்லாம் ஒன்று சேர்த்துக்கொண்டு கட்சியைச் சட்ட விரோதமென்று முடிவுகட்டி அடக்கினார்கள். லெனின் தலைக்கு ஒரு விலை வைத்துவிட்டபடியால் அவர் பின்லண்டில் போய் ஒளிப்பில் இருக்கவேண்டியதாயிற்று. லெனின் அரசாங்கத்தார் கட்சிக்கு விரோதமாய்க் கொண்டுவந்த குற்றச்சாட்டுகளை மறுப்பதற்காகத் தாம் ஒழுங்கான விசாரணைக்கு உட்பட விரும்பினார். ஆனால் அவருடைய தோழர்கள் அவர் கொலைக் குள்ளாவாரென்று அதற்கு அவரை இணங்க விடவில்லை. லெனின் ஓடிப்போக வேண்டுமென்று தீர்மானித்த போல்சிவியத் தலைவர்களின் சிறு கூட்டம் வேலைக்காரர் அலலுயே என்பவர் மாடியில் நள்ளிரவில் நடைபெற்றது. ஸ்டாலின் முதன்முதல் அவ் வேலைக்காரர் மகளை அவ்விடத்திற் சந்தித்தார். பிற்காலத்தில் அவளை அவர் மணந்தார்.

லெனின் இல்லாதபோது கட்சித்தலைமையை ஸ்டாலின் மேற்கொண்டார். கிரேன்ஸ்கியினுடைய அரசாங்கம் புரட்சிப் போர், நிலக்கேள்வி, வேலைக்காரர் வேண்டுகோள் என்பவற்றுள் ஏதொன்றையும் ஒழுங்காக முடிவு செய்யத் தவறினமையாலும், எதிர்ப்பை மதிக்காமல் சாக்குபோக்குச் சொன்னமையாலும் திரளான மக்கள் பட்டினங்களிலும் கிராமங்களிலும் போல்சிவியர் பக்கஞ் சேர்ந்துகொண்டிருந்தனர். ஸ்டாலின் கட்டளைப்படி ஆகஸ்டில் கூடிய போல்சிவிய மகாநாடு சோவியத்தார் கையில் அதிகாரம் கிடைப்பதற்குக் கலகம் செய்யத்

தயார்செய்ய வேண்டியிருந்தது. கொர்னிலோ என்னும் தளகர்த்தர் தோல்வியுற்றது கலகத்துக்கு இடமாயிற்று. புரட்சிக்குப் பகைவராகிய அந்தத் தளகர்த்தர் புதிய குடியரசைத் தொலைக்க முயன்றது காரணமாகக் கோடிக் கணக்கான மக்கள் போல்சிவியர் பக்கம் திரும்பினர். கிரேன்ஸ்கியின் அதிகாரம் தாக்கப்பட்டது. அப்போதிருந்த அரசாங்கம் போல்சிவியர் தலைவர் ஒளித்துக் கொண்டிருக்குங் காலத்தில் எதிர்ப்பை அடக்காமல் அது பலப்பட்டுப் படைகள் சேர்ப்பதற்கு இடங் கொடுத்ததற்காகச் சனங்களால் குற்றம் சாட்டப்பட்டது. அதிகமாக சோவியததார் கைக்குள் உண்மைக் குடியரசும் சனங்களின் உண்மையான அதிகாரமும் சென்றுவிட்டதென்ற உணர்ச்சி அதிகரித்தது. முதலாளிகளும் சமுதாயக் கொள்கையாரும் கிரென்ஸ்கி மூலம் ஏற்படுத்திய பலமற்ற அரசாஙகம், ஆங்கிலப் பிரஞ்சதிகாரம் என்பதின்பேரால் ஒரு புது அடிமைத்தனத்தை உண்டாக்கிக்கொண்டிருந்தது. சோவியத்துக்களில் மிகுந்த பேர் வேலைக்கார வகுப்பினரின் கட்சியாகிய போல்சிவியர் பக்கஞ் சேர்ந்தனர். அக்டோபர் மாதத்தில் கலகத்துக்குச் சுறுசுறுப்பான ஆயத்தங்கள் நடைபெற்றன. லெனின் பின்லண்டில் ஒளிந்த இடத்திலிருந்து வந்து பெட்ரோகிராடில் ஒரு மாடியில் தங்கினர். கலகத்தில் விபரங்களுக்குத் திட்டம் வகுத்த கட்சித் தலைவரின் சிறு குழுவை நடத்தும் வேலை ஸ்டாலினுக்குக் கொடுக்கப்பட்டது. அரசியல் இயக்கம் போரைப்போன்றதே. இரண்டிற்கும் ஒரு முக்கிய வித்தியாசமுண்டு. அதைப் போல்சிவியத் தலைவர்கள் பிபரவரி முதல் அக்டோபர் வரை உள்ள காலத்தி லுணர்ந்தனர். ஸ்டாலின் அதைக் குறிப்பிக்கிற முறையாவது, "இராணுவத் தலைவர் தயார் செய்த படைகளோடு போருக்குப் போகின்றார். ஆனால் அரசியல் கட்சிச் சண்டை நடக்கும்போது, வகுப்புக்கும் வகுப்புக்கும் தாக்குதல்கள் ஏற்படும்போது சனங்களைச் சேர்க்கவேண்டியதாயிருக்கிறது. மேற்கோள் வாக்கியங்களின் உண்மைகளையும், கட்சிக்கொள்கையின் பிழையற்ற நன்மையையும்

திரளான மக்கள் தங்கள் அனுபவத்திலுணர்ந்தே கட்சியிற் சேருகிறார்கள்,” என்றார்.

ருஷ்யப் புரட்சியானது உணவுக்கும் உயிருக்கும் வருந்துகின்ற கோடிக்கணக்கான மக்களின் இயக்கமாகும். பொருள் பறிக்கப்பட்டு மனங் கசந்து வருநதுகின்ற மக்கள் சமூகத்தின் பெரிய கிளர்ச்சியே அதுவாகும். இந்த இயக்கத்தை நடத்துவதற்குப் போல்ஷிவியர் தகுதியானமைக்குக் காரணம் பழைய அடிமையை அடிப்படையிலேயே ஒழிக்குங் கொள்கையே; அவர்களுக்கு அது விடுதலை தருமென்று திரளான மக்களை உணரும்படி அவர்கள் செய்தமையே என்க. கோடிக்கணக்கான மக்களிருக்குமிடத்தில் அரசியல் தொடங்குகிற தென்று லெனின் வற்புறுத்த விரும்பினார். கோடிக்கணக்கான மக்களின் தசையு முதிரமும் ஆகவும் அவர்களை நடத்துந் தலைவராகவும் தாம் இருக்கக்கூடிய கட்சியைச் சுட்டியமைப்பதற்குத் தம்முயிரைக் கொடுத்த ஸ்டாலின், வேலைக்கார வகுப்புப் புரட்சியின் பிறப்பு வளர்ப்பு வெற்றி அனுபவம் முற்றிலும் அதனோடு ஒருங்கு வாழ்ந்தவராவர். குடியேற்ற நாட்டில் ஓர் ஆலைவேலைக்காரருடைய எளிய குடிசையில் அவர் பிறந்து, வாழ்நாளின் பெரும்பாகம் எளிமையிலும் பசியிலும் வருந்தி, தெருத் தெருவாகவும் பட்டணம் பட்டணமாகவும் துரத்தப்பட்டு, தம் வாழ்நாளின் மிகுந்த ஆண்டுகளை அழுக்கான சிறைகளிலும் பயங்கரமான தீவாநதரங்களிலும் கழித்தார். இப்படிப் பட்ட வாழ்க்கையி னனுபவமும் மூன்று புரட்சியி னனுபவமும் உலகத்தில் பிற எதைப்பார்க்கிலும் அவருக்கு அதிகப் பயன் தந்தன. அது காரணமாக லெனின் இறந்து ஐநது நாட்கள் கழித்து, சோவியத்து மகாநாட்டில் அவர் பேசிய தனி நயமான சொல்வன்மையுடைய சொற்பொழிவுக்கு ஆர்வம்தந்து அவர் சொன்னதாவது: “தோழர் லெனின் நிலைநாட்டிய கட்சியின் அங்கத்தினரென்ற பட்டத்தைப்பார்க்கிலும் பெரிய பட்டம் உலகத்தில் யாதுமில்லை. அத்தகைய கட்சியின் அங்கத்

தினரா யிருப்பதற்கு எல்லாருக்கும் கொடுத்துவைக்க வில்லை. வேலைக்காரர்களின் புதல்வர்கள், எளிமை, வருத்தம், நம்ப முடியாத இழப்பு, வீர முயற்சி இவற்றின் மக்கள் தாம் அத்தகைய கட்சியில் முதலில் அங்கத்தினரா யிருக்கவேண்டும்'' என்பதே.

ஸ்டாலின் வேலைக்கார வகுப்பின் அத்தகைய புதல்வ ராவர். 1917 நவம்பர் 7-ல் ஏற்பட்ட வெற்றிப் புரட்சித் தீயில் உண்மையாகப் பண்படுத்தப்பட்ட ஒரு வாளாக அவரைக் காட்டிற்று. நடந்த வருடங்களில் அவரை உருப்படுத்திய கட்சியும் அவரால் உருப்படுத்தப்பட்ட கட்சியுமாகிய ஒரு கட்சியின் புரட்சியில் கொதித்துக் கிளம்பிய கோடிக்கணக்கான மக்களைத் தொடர்ந்து நடத்த வேண்டுமே என்ற கவலை அவருக்கிருந்தது. கட்சியின் கொள்கை மொழிகள் அனுபவத்தின் பயனுகப் பெருந் திரளான மக்களின் கொள்கை மொழியாக வேண்டும். அப்பொழுதுதான் உண்மையாகவே அப் புரட்சி, சனங் களின புரட்சியாகும்.

மிகவும் கடுமையான காலம் இனித்தான் வரக்கூடிய தாயிருந்தது. முதலில் புரட்சிக்காரர் உள்நாட்டுப் பகை வரையும் படையெடுத்த பதினலு அரசுகளையும் வெல்ல வேண்டியதாயிருந்தது. ஒரு புதுப்படை உண்டாக்கிப் பாழடைந்த தேசத்திலிருந்து அவர்களுடைய தேவைகளை நிரப்ப வேண்டியதாயிருந்தது. இராணுவ வெற்றி ஒரு முறை கிடைத்தாலும் மிகுந்த மக்கள் சிறுகுடி உழவரா யிருக்கும் நாட்டில் சமுதாயக் கட்சி ஏற்பாட்டை எப்படி நிலைநாட்டக் கூடுமென்ற கேள்விக்கு முடிவுகாண வேண்டி யிருந்தது. நவம்பர் ஏழில் அதிகாரம் வேலைக்காரப் போல்ஷிவியர் கையிற் சேர்ந்தது. ஆனல் சமுதாயக் கொள்கை வேண்டுமா, வேண்டாமா என்பது தீர்மானிக்க வேண்டியிருந்தது. அதைத் தீர்மானிக்கிற வழியில் தங்கள் கட்சியே இரு பிளவு படுமோவென்ற பயங்கரமான அபாயத்தைப் புரட்சித் தலைவர்கள் எதிர்க்கவேண்டி யிருந்தது. பறிமுதல் செய்தலும்; வகுப்பு வேறுபாடும்

இல்லாத சமுதாயத்தைப் படைத்தலாகிய, இதுவரை யாருஞ் செய்யாத வேலையைச் செய்து முடிப்பதற்கு ஆதரவான பொருள்வருவாய் வளங்கள் நாட்டிலில்லை. பாழடைந்த ஒரு நாட்டிலே கட்சியின் பலமக்கள் வீரமும், எல்லா அபாயங்களையும் வருத்தங்களையும் கடப்பதற்குத் துணைசெய்யப்பட்ட திரளான மக்களின் நம்பிக்கையுமே ஆதரவாக இருந்தன. நம்பிக்கையும் வீரமும் குருட்டுத் தனமாய் வந்த இயற்கை உணர்ச்சியின் பயனல்ல. அவைகள் மக்கள் வரலாற்றையும் மக்கள் தொடர்பையும் வேர் முதற்கொண்டு செய்த ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனுகவே ஏற்பட்டன. விடுதலைக்கு முயல்வதில் வேலைக்கார மக்களுக்கு அறிவுநூலாக விளங்கிய மார்க்ஸ் என்பவரின் கொள்கை சில தலைவர்களின் தனிப்பட்ட கொள்கையன்று. அஃது உயிருக்காகப் போர்புரியும் கோடிக்கணக்கான மக்களின் உண்மையான ஆயுதமாய்விட்டது. மார்க்ஸ் கொள்கையின் அடிப்படையாவது, முதலாளி ஆட்சிச் சமுதாயத்திலிருந்து சம சமுதாய நிலைக்கு மாறுதல், ஏழை மக்களின் ஏதேச்சாதிகாரத் தலைவரால் ஏற்படக் கூடிய தென்பதே மார்க்ஸ் கொள்கையை லெனின் அறிவோடு ருஷ்ய நிலைமைக்குப் பொருத்திப் பார்த்து வேலைக்காரர்களும் குடியானவர்களும் ஒன்றுசேர்ந்து ஓர் அடிப்படையாக, அவ்வடிப்படையின்மேல் கட்டப்பட்ட ஏதேச்சாதிகாரந்தான் நிலைபெறுமென்று கண்டார்.

புரட்சியின் முதல் வருடங்களில், போர் முனையில் ஸ்டாலினுடைய வேலை முக்கியமாய் நடந்தது. எவ்வளவு அபாயகரமான நிலைமையிலும் திகில் உண்டாக்க முடியாத இரும்புபோன்ற உறுதியுடையவர் அவரென்று கட்சிக் காரர் அறிந்திருந்தனர். 1919-ல் சோவியத்துக்காரர் களைச் சுற்றித் துப்பாக்கிப்படையும் கத்திப்படையும் சூழ்ந்து தாக்கிய கொடிய காலங்களில், பொது உடைமைக்காரர்கள் சிவப்புப்படை யென்பதை உண்டாக்கி, அதன் நடுவில் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட வேலையாளர் குழுவை அமைத்து, எதிரியைப் பக்கத்திலும் பின்

புறத்திலும் எதிர்பாராது தாக்கக்கூடிய குதிரைப்படை யும் உண்டாக்கினர். சாரிட்சின் என்னுமிடத்தில் எதிரியின் தெற்குமுனை வெடிப்புறத் தொடங்கியபோது, ஒரோசிலாப், புதியென்னி, ஸ்டாலின் என்பவர்கள் எதிரியின் செலவுக்குத் திட்டமான தடையை முதலில் ஏற்படுத்தினர். சாரிட்சின் என்னும் பட்டணம் பிற் காலத்தில் ஸ்டாலின் கிராடு என்று பெயரிடப்பட்டது. அது வெள்ளைப் படைக்கு எதிரிடையான கட்சியைப் பாதுகாப்பதற்கு முக்கியமான இடம் ஆனதுபோலத் தற்காலத் தொழில்முறை ஆட்சியின்பொருட்டுச் சமுதா யக் கட்சிக்கு வெற்றிநாட்டவும் அஃது இடமாயிற்று.

போர் வேலையோடு மற்ற வேலையும் ஸ்டாலினுக்கு ஏற்பட்டது. பலவகை மக்களினத்தாருடைய தேவை களைப் பூர்த்திசெய்யும் வேலை அவருக்கு அமைந்தது. அவருடைய கட்டளையினால் முந்திய பேரரசின் குடிகளுக் குச் சுயாதீனமும் சமத்துவமும் கொடுக்கப்பட்டன. அதனால் வேலைவகுப்பினருக்கு எதிர்ப்புரட்சியை எதிர்ப்ப தற்கு விலை மதிக்கமுடியாத துணைகள் கிடைத்தன. எதிர் காலத்தில் அமைக்கக் கருதிய சமுதாயக்கட்சித் திட்டத் துக்கும் உண்மையான அடிப்படை போடப்பட்டது. தேசீயக் கல்விப்பயிற்சி விருத்தியால்தான் பிற்போக் கான இனங்களைச் சமுதாயக் கட்சித் திட்டத்துக்கு ஒத்து வரும்படி செய்ய முடியும். வேலைக்காரரையும் குடியான வர்களையும் விசாரித்து உணவளிக்கும் நிலையத்துக்கு அவர் ஸ்தாபகரானார். அந்நிலையம் அரசாங்க உத்தியோகக் கெடுதல்களை ஒழிப்பதற்கும் திரளான மக்களைப் புது அரசை நிர்வகிக்க இழுப்பதற்கும் தக்க ஆயுதமாயிற்று.

லெனினுடைய தூண்டுதலின்மீது 1922-ல் பொது உடைமைக் கட்சிக்கு ஸ்டாலின் பொது அமைச்சராக நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்கள் கழித்து, லெனின் இறந்தபொழுது கட்சியில் பலர் லெனினின் பின் வாரிசாக ஸ்டாலினையே கருதினர். புரட்சியின் நிலை சந்தேகத்திற் கிடமாயிருந்த 1905-க்குப் பின்னும், 1917

ஏப்ரலிலும், நவம்பர் ஏழிலும் லெனினுக்குத் துணையாய் நின்று பிளவுகளை நீக்கியவர் ஸ்டாலின்தான். புரட்சியின் எதிர்காலச் சிறப்பும் உலகச் சமுதாயக் கட்சியின் நிலை பேறும் தம் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாப்பதே என்று அவர் அறிந்தார். வகுப்புக்கள் சண்டை போடு வதில் மத்தியஸதம் பேசி ஒற்றுமை நாட்டமுடியாது. ஆதலால் லெனின் இறந்த பிற்பாடு கட்சியின் ஒற்றுமை யைப் பாதுகாப்பதற்காக அதனை அழிக்கக் கருதிய எதிரி களைப் பகைதது நிந்தித்தார். தம்முடைய முயற்சியால் கட்சி உறுப்பினர்களில் பலரைத் தம்பக்கம் சேர்ந் திருக்கச் செய்வதில் வெற்றி பெற்றார்.

ிகள் தரைக்குக் கீழாகச் சண்டை போடும் போது அவரிடததில் அதிகார மிருந்ததுபற்றி அவருக்கு வெற்றி கிடைத்ததென்று சொல்ல முடியாது. 1924 லும் 1925-லும் டிராஸ்ட்கி என்பவர் தம்முடைய முதல் எதிர்ப்பை ஒழுங்கு படுத்தியபோதும், 1928 முதல் 1933 வரையிலும் சமுதாயக்கட்சி அடிப்படையை விரைவாகக் கட்டும் வேலைப்போக்கில் நேர்ந்த அபாயங்களைக் கண்டு அஞ்சி வலப்பக்கத்தார் எதிர்ப்பு ஏற்படுத்தியபோதும் ஒவ்வொரு வேலைக்காரருக்குந் தெரிந்தோருடைய மனி தர்களே ஸ்டாலின் தலைமையை எதிர்த்து நின்றனர். கட்சியின் பத்திரிகைகளிலும் கட்சிக்கூட்டங்களிலும் மா நாடுகளிலும தங்கள் கொள்கைகளை அவர்கள் நிரம்பத் தெரிவித்தனர். ஆகவே அவர்கள் தவறியது தங்கள் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பில்லாமைபற்றி யன்று; அவர்கள் கொள்கை கட்சிக்கும் திரளான மக்களுக்கும் ஒத்துவராமைபற்றியே யென்க. மத்திய வகுப்புக் குடி யானவர்களுக்கு வரிபோட்டு மேல் தொழில் நிலை வகுக்கக் கருதிய டிராட்ஸ்கியின் திட்டமும், பணக்கார உழவர்களைச் சார்ந்து கீழான உழவர்கள் செல்வர்களாவ தற்குரிய புக்காரின் திட்டமும், சோவியத் அரசனுக்கு அடிப்படையாகிய வேலைக்காரர் குடியானவர் ஒற்றுமை யைக் கெடுக்கக் கருதின. அவை அவர்களால் ஒப்புக்

கொள்ளப் படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக ஸ்டாலினது பாறைபோன்ற உறுதியான தலைமையே எதிரிகளின் தோல்விக்குக் காரணம். முக்கியமாய் உழவு வேலையைப் பொறுத்த ஒரு நாட்டில் பொருளாக்கும் வேலையும் போக்கு வரவும் வலுவற்றனவாயும் பிற்போக்காயும் இருந்தமையால், அந்நாடு தானே எளிமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்து வகுப்பு வேறுபாடும் வேலைப் பறிமுதலு மில்லாத சமுதாயக் கட்சித் திட்டத்தை முற்றிலும் அடையமுடியாது. ஸ்டாலின் களங்கமின்றிச் சொல்லியதுபோல அப்படிப் பட்ட நாடு பொருளாதாரத்திற்கு வெளியுலகத்தைச் சார்ந்து வாழும் அபாய நிலையி லிருப்பது. மேலும், அஃது இராணுவத்தினல் தோல்வியடைந்து நாட்டில் எப்பக்கமும் வளருகின்ற முதலாளி ஆட்சிக்கு மீண்டும் மீண்டும் அடிமைப்படுத்தப்படும் அபாய நிலையிலிருப்பது. இவ்வபாயங்களை ஒழித்து நாட்டில் பொருள்வளர்ச்சியை ஏற்படுத்தி உழவில் சமுதாயத் திட்டத்திற்கு அடிப்படை கோலுவதற்காக முதல் ஐந்து வருடத் திட்டம் வகுக்கப் பட்டது

முதலாளி உலகம், அவ்வளவு சுருங்கிய நேரத்தில் பெரிய நாட்டைச் சமுதாயக்கட்சிக் கருத்துக்கு மாற்றக் கூடுமென்ற எண்ணத்தை இகழ்ந்து நகைத்தது; அவ்வாறே ஒருகாலத்தில் இன்மை வாதிய ரென்ற புரட்சிச் சிறுகூட்டத்தாரையும் பார்த்து அது நகைத்தது. உள்நாட்டுச் சண்டையால் வந்த கேட்டின் நடுவில், 1919-ல் லெனின் ருஷ்யா முழுவதும் மின்சாரத்தைப் பரப்புவதற்கு ஒரு பெரிய திட்டம் கொண்டுவந்தபோது, அவருடைய தோழர்களே அதனைப் பொறுக்காமற் சண்டையிட்டது, ஸ்டாலினுக்கு நன்முக நினைவிருந்தது. அக்காலத்தில் கட்சித் தலைவருள் ஒரு சிறு கூட்டத்தினரே ருஷ்யாவின் பிற்போக்கைப் பொறுத்தும், நாட்டின் அபாய நிலையைப் பொறுத்தும், அவற்றை நீக்க எண்ணிய கருத்தின் முக்கிய உண்மையை மனம்பற்றியிருந்தனர்.

அவர்களுள் முதலானவர் ஸ்டாலின்; இப்போது லெனின் திட்டத்தை அவர் செயலுக்குக் கொண்டுவர முயன்ருர்.

புதுத் திட்டத்தின்கீழ் ஸ்டாலின்கிராடில் கட்டிய பெரிய முதல் ஆலை ஒன்றறை வருடங்களாகத் திருப்தி கரமான அளவு சாமான்களை உண்டாக்கத் தவறியபோது உலகம் அதைப் பார்த்துச் சிரித்தது. கடைசியில் மனவலி இல்லாதவர்களும் தளர்ந்தனர். திட்டத்தின் பொய்ம்மை யைப்பற்றி ஐரோப்பிய அமெரிக்க முதலாளிகளின் பத்திரிகை நிலையங்களில் மாத்திரமல்லாமல் பொது உடைமைக் கட்சியின் சிறு பிரிவினர்களும் பேசுவது வழக்கமா யிருந்தது. தோல்வி யென்பது சண்டைபோட முடியாமற்போகுங் காலத்தில்தான் ஏற்படுமென்று அனு பவத்தால் கண்டறிந்த ஸ்டாலின் உண்மையாய் உள்ள நிலையை மிகவும் பொறுமையோடும் கவலையோடும் பரி சோதித்தார். வெற்றிக்கு வேண்டியவைகளெல்லாம் அமைந்திருந்தன என்பது கண்டு தலைமையில் அல்லது மேற்பார்வையில்தான் குற்றமிருக்க வேண்டுமென்று ஊகித் தார். கைத்தொழிற்சாலை நிர்வாகிகளும் பிரிவுத் தலைவர் களும் தங்கள் வேலைகளைத் தெரிந்துகொள்ளாவிட்டால் தற்காலத்தில் பெருந் திரளான பொருளுண்டாக்குதற்கு அமைக்கப்பட்ட பல பகுதிகளையுடைய வேலை இயந்திரம் வேலை செய்ய மறுத்துவிடுவது இயற்கையே. பிற்போக்கா ளர் எப்பொழுதும் அடித்துத் தள்ளப்படுகிருர்கள். ஆனல் நாம் அடிபட விரும்பவில்லை. ஆதலின் முக்கியமான செய்தி யாதென்ருல் எழுச்சியுள்ள போல்சிவியர் தொழில் முறைமையையும் சாமான் உண்டாக்கும் நூலையும் முற்றி லும் கற்றுத் தேர்தல் வேண்டும். ஒன்றைப் பெறவேண்டு மென்று உண்மையான ஆத்திரத்தோடு ஆசைப்பட்டால் எவ்விதமான தொந்தரவையும் வென்றுவிடலாம். முத லாளி ஆதிக்கத்தின் நாகரிகமற்ற சட்ட மென்னவெனருல் பிற்போக்காளரையும் வலியற்றவர்களையும் அடித்துத்தள்ளு வதே. முற்போக்கான நாடுகளுக்கு நாம் 50 அல்லது 100 ஆண்டுகள் பின்னே இருக்கின்ருேம். இந்தத் தூரத்தை

நாம் பத்து வருடங்களில் கடந்து செல்லவேண்டும் என்று நாம் இதைச் செய்யவேண்டும். அல்லது அவர்கள் நம்மை நசுக்கிவிடுவார்கள். புது வேலைகளுக்குப் புது வழியாக நாம் வேலை செய்யவேண்டுமென்று ஸ்டாலின் புதுத் தலைமை முறையை ஆறு குறிப்புக்களில் முடித்துக் கூறினர். எழுச்சியான கருத்துடைய அவருடைய முடிபுகள் ருஷ்யாவில் கட்டப்படும் சமுதாயத் திட்டத்திற்கும் மேலை நாட்டு முதலாளி ஆதிக்கத்திற்குமுள்ள வேறுபாட்டை நன்கு விளக்குவன. நம்முடைய திட்டத்தின் உண்மை யாவது: பொதுமக்கள் வாழ்க்கை, நம்முடைய விருப்பம், நம்முடைய வேலை, புது வழியில் வேலை செய்யும் நம்முடைய சித்தம், திட்டத்தை நிறைவேற்ற நம்முடைய உறுதி என்னும் இவை யெல்லாவற்றையும் உயிர்ப்புடன் இருக்கச் செய்வதே' என்றார். ஸ்டாலின் நிலைபெற்ற தலைமைக் கொள்கைக்கும் சனங்களின் துன்ப நீக்கத்திற்காகப் பாசியத் தலைவரால் அமைக்கப்பட்ட சமுதாய அமைப்புக்கும் உள்ள கூர்மையான வேறுபாடு யாதெனில், ருஷ்யத் திட்டத்தில் செய்யப்படும் வேலைக்கும் செய்யும் மக்களுக்குமுள்ள உயிரான தொடர்பே. சோவியத்துச் சங்கத்தில் தலைமைபற்றிய தொந்தரவுகள் தொழில் முனையிலல்ல; உழவுமுனையில் ஏற்பட்டன. நூறாண்டுகளாக வழக்கமாக இருந்த கிராம வாழ்க்கையை அழித்து அதற்குப் பதிலாகக் கைவேலை முறைப்படி மொத்த ஒத்துழைப்புத் திட்டத்தை யேற்படுத்துவது எளிதான வேலையன்று. பழைய கிராமமானது, எளிமை, அறியாமை, குடியானவரின் ஒடுங்கிய சிந்தை, கடும் வட்டித் தொந்தரவு, விலங்குபோட்டு அவர்களைத் துன்புறுத்தல் என்பவற்றிற்கு ஒவ்வொரு நாளும் நிலையமாயிருந்த தென்பது உண்மையே. ஆனால் அதன் வழக்கங்கள் பூமி தோன்றியது முதல் ஏற்பட்டு இருந்தனவாகத் தோன்றின. அவற்றை நினைத்தவர்களுக்குப் பதினெட்டாவது நூற்றாண்டில் ஆங்கிலக் கிராம வாழ்க்கையிலும் அமெரிக்க உழவு சரிதத்திலும் ஏற்பட்ட புரட்சி மறந்திருக்கும்; அல்லது தெரியாதிருந்திருக்கும்.

ருஷ்யக் கிராமத்தில் முதலாளி ஆதிக்கத்திற்கும் அரசியல் எதிர்ப்பிற்கும் முக்கியமானவன் ஹூலாகு என்பவன். அவன் வேலை ஆட்களை நியமிக்கும் உழவன். இயந்திரம் வைத்திருக்கும் ஏழைக் குடியானவர்களுக்குப் பணம் அல்லது சாமான்கள் கடன் கொடுப்பவன். ஆலைகளிலிருந்து முதலாளித்தனத்தை அடியோடு எடுத்துவிட்டதுபோலவே, ஹூலாகு என்பவனைத் தொலைத்தாலன்றி மத்திய வகுப்பு உழவன் நிலமில்லாத ஏழை உழவர்களோடு புது உழவுத் திட்டத்தைக் கையாளுவதில் ஒத்துப்போகமாட்டான். அதேகாலத்தில் ஏராளமான கடன் பணங்களும் வரிநீக்கமும் மொத்த உழவு வேலைக்குக் கொடுக்கப்பட்டபடியால் குடியானவர்கள் புது முறையை விரும்பினார்கள். ஹூலாகின்மீது போர் தொடங்கப்பட்டது. தவறாகப் பல பொது உடைமைக்காரர்கள் மொத்தப் பயிரிடுதலை உடனே ஒப்புக்கொள்ளாத குடியானவர்களையும் ஹூலாகோடு ஒத்த எதிரிகளாகக் கருதினர். எப்போதும் புத்திமதி சொல்லித் திருத்துவதைப் பார்க்கிலும் கட்டளையிடுதல் எளிது. ஆதலால் விருப்பமாய் ஒத்துழைக்கும்படி செய்வது கைவிடப்பட்டது. மத்திய வகுப்பு உழவன் ஹூலாகுக்குச் செவிசாய்க்கத் தொடங்கினான். ஆடுமாடுகள் ஏராளமாகக் கொல்லப்பட்டன. வயல்கள் அழிக்கப்பட்டன. புதுத் திட்டம் ஏற்படுத்துகிறவர்கள் கொலையுண்டார்கள். புது இயக்கத்தின் முடிவு நிச்சயமற்றதாய்விட்டது. இதனைக் கண்ட ஸ்டாலின் மறுபடியும் தன்னுடைய தெளிவான சொற்களாலும் சுறுசுறுப்பான முயற்சியாலும் கட்சியை ஒற்றுமைப் படுத்தினார். "வெற்றியால் தலை கிறுகிறுப்பு" என்ற கட்டுரையில் வல்வந்தஞ் செய்த அதிகாரிகளை இரக்கமில்லாமற் கண்டித்து, ஏற்பட்ட தவறுகளை ஒழித்துச் சாந்தமும் தெளிந்த மனமும் உடையவர்களாக இருக்கும்படி அவர்களை ஊக்கும் முறை காணபபடும்.

குடியானவர்களில் மிகுந்தவர்கள் புது உழவு முறையை ஒப்புக்கொண்டார்கள். நூறு குடும்பங்கள்

தங்கள் நிலத்தையும் கருவிகளையும் ஒரு பெரு முயற்சிக்காக ஒன்றுசேர்த்தல் அம் முயற்சியின் தொடக்கமேயாகும். பெரிய அளவில் உழவு செய்யும்முறை, வேலையை ஒழுங்கு படுத்தும் முறை, இயந்திரங்களைக் கவனமாய் உபயோகிக்கும் முறை, மேற்பார்வை என்பவற்றை அவர்கள் கற்றுத் தேரவேண்டியதா யிருந்தது. கற்றுத் தேராத பல இடங்களில் புது முறை தோல்வியுற்றது கண்டு ஒத்துழைப்பு முறை நடைபெறுதென்ற உணர்ச்சி பரவியது. அதனால் நேர்ந்த மோசங்களும் பல.

உள்நாட்டுச் சண்டையின் அனுபோகம் பொது உடைமைக்காரர்களுக்குத் துணைசெய்தது. பொது உடைமைக் கட்சிக்காரர்களின் அரசியற் பகுதிகளால் சேனைகளுக்குள் ஒற்றுமையும் ஒரு நோக்கமும் உண்டாக்கப்பட்டன. விரைவாகச் சேர்க்கப்பட்ட படைகளுக்கும் இயந்திரங்களுக்கும் பொது உடைமைக்காரர்கள் வேலை ஒழுங்குபடுத்தும் அனுபவங் காட்டினர். புரட்சிக்காரர்கள் படைகளை நடத்தும் திறமையும் உறுதியும அறிவும் படைகளுக்குப் பரவின. அங்கே பல பிரிவுகள் ஒழுஙகாக அமைத்ததைப்போலப் பெரிய உழவு நிலையங்களிலும், அம்முறை அனுசரிக்கவேண்டுமென்று ஸ்டாலின் குறிப்பித்ததன்மேல் குழப்பங்கள் ஒழிந்து ஒழுங்குநிலை பெற்றது. குடியானவனுக்கு இப்போது அவன் பக்கத்தில் ஒவ்வொரு தொந்தரவிலும் உதவிசெய்யத்தக்க வேலைக்காரர்களின் துணையிருக்கிறது. புதுமுறை தவறினல் குற்றம் குடியானவர்கள் பேரிலில்லை; அஃது அளவற்ற புது மாற்றங்களுக் கேற்றபடி நடவாத பொது உடைமைக்காரரிடமே யுள்ளது என்று ஸ்டாலின் வற்புறுத்தினர். எதிர்கால வாழ்வு இப்பொழுது உழவர்கள் கையிலேதானிருக்கிறது. மொத்த உழவில் சேர்ந்த ஒவ்வொருவரும் செழிப்பாக வாழும்படி செய்வதே எதிர்கால நோக்கமென்று ஸ்டாலின் சுருக்கிக் கூறினர்.

லெனின் இறந்த பத்து வருடங்களில், சோவியத்துச் சங்கத்தைச் சார்ந்த வேலைக்கார வகுப்பினரையும், குடி


யானவரையும் வலியற்ற பிற்போக்கான நாட்டு நிலைமையி லிருந்து வலிமையும் தொழில் முற்போக்குமுடைய நாட்டு நிலைமைக்குக் கொண்டுவந்தார் ஸ்டாலின். வேலையில்லாத் திண்டாட்டமும் கிராம எளிமையும் ஒழிந்தன. திரளான மக்களின் நிலை விரைவாய்ச் சீர்திருந்திக்கொண்டிருக்கிறது. இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தின் முக்கிய நோக்க மதுவே. சமுதாயக் கட்சித் திட்டத்தின் பெரிய சிற்பி என்னும் பட்டத்தை ஸ்டாலின் பெற்றுக்கொண்டார். அவருடைய பலமான ஆண்தன்மையுடைய வடிவமும், ருஷ்யன் செருப்புகளும், சாதாரணமான காக்கிச் சட்டை யும், பலமான சற்று உயர்ந்த முகமும், அமைதியான கூரிய கண்களும் உலகமெங்கும் தெரிந்தன. அவர் அடிக்கடி பேசுவதும் எழுதுவதுமில்லை. ஆனால் எதிர்காலச் சரித ஆசிரியர், லெனின், ஸ்டாலின் என்பவர்களுடைய பேச்சுக்களையும் கட்டுரைகளையும் அசட்டை செய்ய முடியாது. ஏனெனில் அவைகள் முதற்றரமான முக்கிய முடைய சரிதப் பத்திரங்கள். 1917-க்குப் பிந்திய ருஷ்யச் சரித்திரத்தை எழுதுவதற்கு அவைகள் அவசியமானவை. பிறநாடுகளில் அரசியல் தலைவர்கள் உண்மையான நிலையை மறைத்து, உண்மை இழிவா யிருக்குமாயின் ஆடம்பரமான சொற்களில் அதைப் பொதிந்து பேசு வதையே முக்கிய வேலையாகக் கொண்டவாகள். தொந் தரவுகளையும் குற்றங்களையும் சனங்களுக்குத் தெரிவித்து அவற்றை ஒழிப்பதற்குச் சனங்களின் உதவியை நாடுதலை அவர்கள் இவரைப்போல் மேற்கொள்வதில்லை

லெனின், வேலையைத் தொடர்ந்து நடத்துகின்றவராய் மாத்திரம் ஸ்டாலின் சரித்திரத்துட் புகவில்லை. இவரும் அதிகமாகச் சேர்த்திருக்கிறார். உதாரணமாகச் சமுதாயக் கட்சித் திட்டத்தில் பெண்களுக்குத் தக்க இடம் கொடுத் தவர் இவரே. கோடிக்கணக்கான குடியானவர்களின் பெண்களைக் கிராம வாழ்க்கை அடிமையிலிருந்து இவர் விடுதலை செய்திருக்கிறார். உழவர் தூதுகள் ஸ்டாலினைப் போய்ப் பார்ப்பதில்லை. அவர் பெண்களிடம் உண்மை

யான நிலைமையை விசாரித்து அறிந்துகொள்ளுவார். அடக்கப்பட்டுத் தவருக உபயோகிக்கப்பட்ட பாதி மனித சமூகத்தின் விடுதலையினுல் வரும் படைப்பு ஊக்கத்தின் பலன் சமுதாயத் திட்டத்திற்கு இதனுல் ஏற்பட்டுள்ளது. ஸ்டாலின் சொற்களைச் சுருக்கமாகவும் நேராகவும் சொல்லுகின்றவர். குற்றங்களை இரக்க மில்லாமல் தாக்குகின்றவரே ஒழியக் கதைகளிற் கூறும் அரக்கத் தன்மை அவரிடங் கிடையாது. செலியூஸ்கின் அனுதைப் பிள்ளைகளைக் காப்பாற்ற அவர் செய்த முயற் சியைப் பார்த்தால் ஸ்டாலினது நல்ல உணர்ச்சி தெளி வாக விளங்கும். ஒரு மனிதனிடத்திலும் அவரிடத்திற் போல வீரமும் பொறுமையும் திறமும் ஒன்று சேர்வது அரிது. ருஷ்யப் புரட்சி ஊக்கமும் அமெரிக்கச் செயல் திறனும ஒன்று சேர்ந்திருப்பதே வேலை முறையின் இலக்கணமென்பது அவர் கொள்கை. லெனின் வாழ்க் கையைப்போல ஸ்டாலின் வாழ்க்கையும் தம்முடைய நாட்டில் மாத்திரமல்லாமல் எங்கெங்கே உலகில் மனித சமூகத்தின் எதிர்கால நன்மைக்காகச் சண்டையிட வேண்டுமோ அங்கங்கே மக்களை அறைகூவி ஒற்றுமைப் படுத்துங் கொடியாகத் திகழ்கின்றது.

# ரு. டேவிட் லாயிட் ஜியார்ஜ்[1]

டேவிட் லாயிட் ஜியார்ஜ் தம் உச்ச காலத்தில் தெரிந்தெடுத்த நண்பராகிய ரிடல் பிரபு[2], விபரம் மிக்க தம்முடைய நாட்குறிப்பின் இரண்டாவது பெரும் புத்தகத்தில் "லாயிட் ஜியார்ஜ் உலகத்தில் உள்ள ஆறு பெரிய மனிதர்களில் ஒருவர்" என்று எழுதியிருக்கிறார். 1919-வது ஆண்டில் பிரிட்டனில் குறையில்லாமல் மிகுதியும் பேர்பெற்ற மனிதர் லாயிட் ஜியார்ஜே. உலகத்தில் மிகுதியும் பேர்பெற்ற பிரிட்டனாரும் அவரே. அக்காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் அவரைப் பிட்[3] என்பவருக்கு மேலாக வைத்துப் பேசின. தம்நாட்டிலும் வெளி இடத்திலும் வியப்பு, கவர்ச்சி, அச்சம் என்பதற்கு அவர் நிலைக்களமாக விளங்கினார். அவருடைய முகம்போல யாருக்கும் தெரிந்த முகம் வேறு கிடையாது. டேவிட்லோ என்பவர் அநேகமாய் ஒவ்வொரு நாளும் அவரைப்பற்றி ஒளி மிக்க விநோதப் படங்கள் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தார். அவர் காட்டிய



டேவிட் லாயிட் ஜியார்ஜ

படங்களுள் அவர் தன்மையைப் பெரிதும் பேசும் படம் யாதெனில், நிலத்தைக் குழிக்கும் ஊக்கமான நாய்ப் படமே. அதன் மிகுந்த ஒளியுடைய கண்கள் ஒருநேரம் மிகச் செருக்கும் சினமும் கொண்டு பார்க்கும்; ஒருவேளை

1· Lloyd George. 2, Riddel. 3, Pitt.

மெல்லிய சொற்களால் ஏமாற்றிக் கவர்வதுபோலத் தோன்றும்; சிலசமயம் தன்னுடைய சாமர்த்தியத்தைப் பார்த்து மகிழ்வதுபோலத் தோன்றும். அவை அடர்ந்த ரோமத்தால் சூழப்பெற்றிருந்தன. அந் நாய் உயர்ந்த இனத்தைச் சேர்ந்ததன்று. அஃது ஊக்கமும் ஆற்றலும் தாக்கும் சரியான முயற்சியும் நிறைந்த கலப்பினத்தைச் சேர்ந்ததாகத் தோன்றியது. அதன் மூக்கு எப்பொழுதும் மோப்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும். அதன் துணை எவ்விதமான வேட்டைக்கும் ஊக்கங் கொடுக்கும்.

1917-ஆம் வருடந் தொடங்கி முதல் மந்திரியாய் இருந்த லாயிட் ஜியார்ஜ் பொதுப்பிரதிநிதி சபையில் சீட்டு மூலமாய்க் கைக்கொண்ட மிகுந்த வாக்குரிமையும் ஏதாவது இடைஞ்சலான சந்தர்ப்பம் ஏற்பட்டால் போரில் வெற்றி பெறுதலைக் கூறித் தம் காரியசித்தி பெறுஞ் சூழ்ச்சியும், அவரை மிகக் குறைவாகப் பேசுங் கண்டனக்காரரும் மறுக்கமுடியாத உயர்ந்த சொல்வன்மையும், சிறந்த அறிவும் உடையவராய் விளங்கினமையால் அவர் எப்பொழுதுமே முதல் மந்திரியாக இருப்பார் என்று சிலருக்குத் தோன்றியது.

எல்லாவகைச் சமாதானக் கட்சியாருக்கும் அவர் தீமையின் அவதாரமாகவே தோன்றினர். ஸி. பி. ஸ்காட்[1] என்பவர் ஆப்பிரிக்கப் போயர்களுக்கு அனுகூலமான கட்சியினருள் மிகவும் தைரியமும் கோபப் பாங்கும் உடையவர் என்று அவரை அடிக்கடி எழுதினாலும், அவருடைய உயிர் ஆற்றற் களஞ்சியங்களை மிகவும் பாராட்டுகின்றார். அவ்வகை ஆற்றல்களில் சமாதானவாதிகளுக்கு நம்பிக்கை கிடையாது. தொழிலாளர் கட்சிக்கு அவருடைய 1909-ம் வருடத்து அரசாங்க வரவு செலவுத் திட்டத்தினால் பிறந்த நம்பிக்கை, இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தினால் வாடுதலுற்றுப் போர்ச் சட்டங்களினாலும் பெரும் ஊதியம் எடுப்பவனுக்கு அனுசரணையாய் இருந்தமையாலும் ஒழிந்துபோயிற்று. ஆனாலும், பல வகுப்பின

1. C. B. Scott.

ருக்கும், பொதுமக்கள் பெரும்பாலார்க்கும் 1919-வது ஆண்டில் அவர் பெரிய வீரராகவே தோன்றினார். அவர்கள் இதயத்துக்கு வீரராக அவர் இருந்தார் சாதாரண மனிதரின் தன்மையுடையவராய்ச் சாதாரண குணங்கள் உன்னத நிலையில் தம்மிடத்தில் தோன்றும்படி அவர் திகழ்ந்தார். அசைக்க முடியாத உற்சாகம், பரிகாசக்குறிப்பை உடனே அனுபவிக்கும் மனப்பாங்கு, குடும்ப வீட்டைப் பற்றிய அன்பு வெளியே போனால் மரம் ஏறுதல், பாட்டுப் பாடுதல், விளையாட்டுப் பொய் சொல்லுதல், (1914-முதல் 1919-ஆம் வருடம்வரை உள்ள காலத்து ஒவ்வொரு பெரிய மனிதனும் எப்போதாவது ஒருதரம் அதைரியப்பட்டிருபபினும்) தாம் ஒருபோதும் அதைரியப்படாதிருந்தமை என்னுந் தன்மைகளால், நாடோடிப் பழக்கமுடைய பொதுமனிதனை அவர் ஒத்திருந்தார். பெரிய கூட்டுக்கட்சி சாதாரண பால்டுவினது தாக்கினால் திடீரெனப் பிரிந்து போயிற்று. 1922-ஆம் வருடம்வரை எல்லாவற்றிலுஞ் சிறந்த பெரிய மனிதராக அவர் விளங்கினார். பதினாறு வருடம் தொடர்ச்சியாக உத்தியோகம் பார்த்தும், ஆறு ஆண்டுகளாக முதல் மந்திரியாக இருந்தும், முழுவதும் தமக்கென ஒரு கட்சி இல்லாமல் அவர் வெளியே வந்தார். அதிலிருந்து இப்பொழுது பன்னிரண்டு வருடங்கள் கழிந்தன. இன்னும் அவர் மறுபடி உள்ளே புகவில்லை. அவருக்குக் கட்சி யாதும் இல்லை. பத்திரிகை யாதும் இல்லை. மிக முன்னதாகவே பத்திரிகையின் அவசியத்தை அவர் தெரிந்திருந்தார். 1901-வது ஆண்டிலே தாராளக் கட்சியின் தன் பகுதிக்கு நாட்செய்தி[1] என்ற பத்திரிகையை வாங்கும்படி ஊக்கினார்; பத்திரிகை ஆசிரியரோடு நெருங்கிப் பழகினார். தின வரலாற்றுக் குறிப்பு[2] என்ற பத்திரிகையை நெடுநாட்களாக அவர் மேற்பார்த்து வந்தார். ஆனாலும் போக்குப் பிற்பட்ட தலைமுறையில் அவர் தற்கால மனிதராகக் குறிக்கப்படாமல் பழையகால ஆளாகவே கருதப்படுகின்றார். பல்கலைக்கழகப் பரிசோதனைக்கு உரியவர்களுட் சிலரை, 'இப்பொழுது உள்ள ஆறு பெரியாரைப்

1. Daily News. 2. Daily Chronicle.

பற்றிப் பேர் சொல்லுக' என்று கேட்டபோது, அவர்களுள் ஒருவர்கூட லாயிட் ஜியார்ஜைப் பற்றிச் சொல்லவில்லை.

அவர் தமக்குரிய காலத்துக்குப் பிற்பட்டு வாழுதல் பரிதாபத்துக்கு இடமானதே. மதிப்பு என்பதை அவர் கவனித்ததாகத் தோன்றவில்லையாயினும் பிற்காலங்களிலே தமக்கு ஒருவகையான மதிப்பைத் தேடிக்கொண்டார். மதிப்பில்லையே என்று பரிதாபப்பட இடமில்லை. அவருக்காக ஒருவரும் வருத்தப்படுவதில்லை. அவர் தமக்காக வருத்தப்படுகிறார் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. அவரை உயர்த்தியதுந் தாழ்த்தியதும் சந்தர்ப்பங்களல்ல. அவரது ஆளுந் திறனே. "சரித்திரத்தில் காணப்படும் வெவ்வேறு நிகழ்ச்சிகள் தள்ள முடியாத அடிப்படைக் காரணங்களால் முற்றிலும் நேர்வன''' என்றும், "ஆளுந் திறனால் அவற்றை விரைவுபடுத்தவோ தடை செய்யவோ முடியாதென்றும் கூறுவது தவ''றென்றும் அவரே சொல்லியிருக்கிறாரல்லவா ?

அவரது ஆளுந் திறன் கணிக்க முடியாத தொய்வுத் தன்மையுடன் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. 1934-ல் கூட எதிர்பாராத இடத்திலிருந்து புதிதாக அவர் கிளம்பமுடியாது என்று ஒருவரும் உறுதியாகச் சொல்லவில்லை. பன்னிரண்டு ஆண்டுகளாக அவருடைய சொற்சக்தியும் அதிகாரமும் குறைந்து கொண்டே வந்தமையால் அவர் திடீரென்று கிளம்பக் கூடும் என்று தோன்றவில்லை. அவருடைய சாமர்த்தியத்தில் பிரிட்டிஷ் மக்கள் ஒருகாலத்திற் பிடிபட்டு மற்றொரு காலத்தில் அவநம்பிக்கை கொண்டார்கள். அதனை மாற்ற அவர் உற்சாகமாக முயன்றும், அவர் முயற்சி பயனற்றுப போயிற்று.

1926-ல் பொதுவேலை நிறுத்தம் என்னும் கொதிப்பு மேடையில் அவர் புகுந்து மின்சார ஆற்றலோடு இறங்கினார். 1929-ல் கட்சிகளைக் கூட்டி ஒற்றுமைப்படுத்து முறையில் தமக்கு இளமை வந்ததுபோல ஊக்கமாக வேலை

செய்து வேலையில்லாத் திண்டாட்டத்தை வென்றுவிடலாம் என்று வீரம் பேசினர். அவருக்கு உரிமைச் சீட்டு அளிப்பதற்கில்லை யாயினும் அவருடைய பிரசங்கங்களுக்கு மக்கள் பலர் திரண்டு கூடினர். கூட்டமைச்சர் காலத்தில் ஏழைகளுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதைப் பற்றியும், போரினல் விளைந்த தொந்தரவுகளை நீக்கிவிடுவது பற்றியும் நிறையப் பேசிக் குறையச்செய்து தவறினமையும் பொதுமக்கள் நினைவில் இருந்துகொண்டிருந்தன. ஆனாலும் 1929-1931-ல் கூடிய பொதுப் பிரதிநிதிச் சட்டசபையில் அவர் ஒரு பெரிய ஆற்றலொடு விளங்கினர். அவர் பேச எழுந்தபோது பழமையாய் உள்ள கவர்ச்சி அவருக்குத் துணை செய்தது. உயர்ந்த செருக்கோடு பணம் கொடுக்கல் வாங்கல் செய்வோருக்கு மந்திரிகள் அடிமைப் பட்டதையும், சுரங்கக்காரர் நிலச் சுவான்கள் முதலியோர் காரியங்களில் தைரியமாய் நடவடிக்கை நடத்தாத அவர்களது கோழைத்தனத்தையும், அகிலதேச உடன்படிக்கைபபடி நிபந்தனைகளை அனுசரிக்கத் தவறினதையும் பற்றி அவர்களைக் கண்டித்துப் பேசினர். அவர் எழுந்தபோது இருக்கைகளிற் கூட்டமும், அவர் பேசும்போது மகிழ்ச்சியோடு கூடிய ஆட்டமும, அவர் உட்கார்ந்தபோது கூட்டக்கலைவும் நிகழ்ந்தன. அவர் சட்டசபை வழியில் நின்று வாக்குரிமை கேட்கும்போது நட்பாயும் ஊக்கமாயும் மகிழ்ச்சி தரக்கூடிய நிலையிலும் நடப்பார். அவர் கண்கள் சுருங்கிக் கொண்டிருக்கும்; அவருடைய காதுகள் இடை நிற்போர் பேசுவதை நன்ருகக் கவனிக்கும். அவர்கள் எண்ணம் மனத்தினின்று வாய்க்கு வ்ருவதற்குமுன் அவற்றைத தெரிந்து விடை கூறுவர். அவர் என்ன நோக்கத்தோடு இருக்கிருர் என்பது யாருக்குந் தெரியாது. தோன்றியும் மறைந்தும் இருந்த நட்சத்திரம்போல அவர் இருந்தார்.

1931-ல் அவருக்கு ஏற்பட்ட பலமான மருத்துவ சிகிச்சையால் தரையில காதை வைத்துத் தூரத்திற் பேசுவதைக் கேட்கும் ஆற்றல் அவருக்கு இல்லாமற் போய்விட்டது. தாராள வர்த்தகத்தைப்பற்றி அவர்

பேசியபோது அதற்கு ஒத்த எதிரொலி இல்லை. பேச்சு மேடையிலிருந்து விலகி இருந்தமையால் மக்கள் மனத்தி லிருந்த அச்சப் புயலைப்பற்றி அவர் அறியத் தவறினார். தற்காலச் சட்டசபையில் (சட்ட மன்றத்தில்) அவர் எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. ஒரு தொகுப் புக்கே நாற்பது வருடங்களுக்கு மேலாகப் பிரதிநிதியாய் இருந்தமையால் அவர் அச் சபையினருக்குத் தந்தையே. இப்பொழுது அவர் சிற்சில காலங்களில்தான் சட்ட மன்றத்திற்குச் செல்லுகின்றார். இப்பொழுது அவர் போர் நினைவுக் குறிப்பு[1] என்னும் நூல் எழுதுவதிலே தம் முழுக் கவனத்தையுஞ் செலுத்துகின்றார்..

அவருக்கு வயது இப்பொழுது எழுபதுக்கு மேலாகி விட்டது. பன்னிரண்டு ஆண்டுகளாக அவர் வெளியேதான் இருக்கிறார். போருக்குப் பிற்பட்ட தலைமுறையார் அவர் தற்கால மனிதர் என்பதைக்கூடச் சந்தேகித்து அவரைக் கழித்து எழுதுகிறார்கள். ஆனால் அவர்கள் வாழ்கின்ற உலகத்தையும் அதைக் கூத்தாளும் முறையையும் பெரும் பான்மை உண்டாக்கியவர் அவரே. இப்போதுள்ள உலகப் போர், சமாதான உடன்படிக்கைகள், மறுபடி செய்ய வேண்டிய ஆக்க வேலைகளில் தவறினமை என்பவற்றின் பயனாக உள்ளது. இவற்றுள் ஒவ்வொன்றிற்கும் பிறர் எவரினும் அவருடைய பொறுப்பே அதிகமானது. அபாயத்துக்குள் தவறி விழுந்த அரசியல் வல்லானைக் கட்டாயப்படுத்தும் பேச்சில் அவர் கலந்தவரில்லை. ஒரு சமயத்தில் ஜெர்மனிக்கு எதிரிடையாகக் கைதூக்கும்படி அவர் பேசிய பேச்சைத் தவிர, போருக்கு முற்பட்டு அந்நிய அரசுச் சார்பில் அவர் அதிக வேலை செய்யவில்லை. உள்நாட்டுக் காரியங்களில்தான் அவர் மிகுதியும் கவனத் தைச் செலுத்தினார். வேல்ஸ் சம்பந்தமாகவும அயர்லாந்து சம்பந்தமாகவும் அவர் ஈடுபட்டிருந்தார். 1909-க்குரிய வரவு செலவுத் திட்டத்தை வகுத்தபோது பிரபுக்களுக்கு எதிரிடையாகச் சனங்களை ஆதரிக்கிற முற்போக்காளர்

1. War Memoirs.

என்று அவரைப் பொதுமக்கள் எண்ணினார்கள். லைம் ஹவுஸ்[1] என்னும் இடத்தில் அவர் பேசிய பேச்சுக்கள் பெரிய பிரபுக்களைப் பால்பருடைய[2] பிரிய நாய்கள் என்று தாக்கின. சமுதாயத்துக்கு நயமான இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களை அவர் வகுத்தார். உழவை விருத்தி செய்யும் அரசியல் முறையை அவர் போற்றினர். ஆப்பிரிக்காவில் குடியேறிய டச்சுக்காரராகிய போயர்களுக்கு ஒரு காலத்தில் அனுகூலமாய் இருந்த உணர்ச்சியானது 1914-ல் அவர் பெல்ஜியத்தை ஆதரிக்கும்படி தூண்டியது. பலர் சமாதானத்தை விரும்பியதுபோலவே அவரும் விரும்பினர். அவர் வேலையை விட்டுவிடுவார் என்ற பிரஸ்தாபம் ஆதரவற்றது. போரில் வெற்றி பெறலாம் என்ற ஒரே நோக்கத்துடன் முற்பட்ட எண்ணங்களை யெல்லாம் தவிர்த்துப் போரில் எண்ணம் வைத்தார் "ஒன்றிற் புகுதல் கூடாது: புகுந்தால் வெற்றியுடன் மீளவேண்டும்" என்பது அவர் கொள்கை. அவருக்குத் தத்துவ ஆராய்ச்சிகளிற் பிரியமில்லை. எடுத்துக்கொண்ட வேலையில் முற்றிலும் அழுந்தும் மனப்பான்மை அவருடையது. அவருடைய நூலை வாசித்துப் பார்த்தால் உலகமெங்கும் மரணமும் துன்பமும் உண்டாமோ என்ற அச்சம் அவரைத் துன்புறுத்தவும் இல்லை; அவர் தூக்கத்தைப் பாதிக்கவும் இல்லை என்பது புலனும். அறிவும் உணர்ச்சியும் அதில் வேலை செய்து பாழடைகின்றனவென்பதையும் அவர் எண்ணவில்லை. அவருக்கு இரக்கமில்லை என்பது கருத்தன்று; அவர் செய்யக் கருதியது வேறொன்று; அதிலேயே அவரது மனம் முற்றும் நிலைத்தது என்பதே கருத்து.

போரின் தொடக்கத்துக்கு அவருடைய பொறுப்பு மிகக் குறைவாக இருந்தாலும் அதன் நீட்டிப்பிற்கும் கேட்டிற்கும் அவர் பொறுப்பு அதிகம். சமாதானம் வேண்டும என்பதற்கு மாறான இரகசிய உடன்படிக்கைகளை அவர் ஆதரித்துச் சமாதான தருணங்களைப் பயன்படுத்தாதுவிட்டார். 1916-ல் வர்சேல்சை[3] எதிரிகள்

---

1. Lime House. 2. Mr. Balfour. 1. Versailles.

தாக்கக் கருதுமுன் சமாதானம் பேசியபோது சமாதானம் என்பது தெய்வக் கடமைத் தவறு என்று அவர் கூறினார். போரை முடிக்கக்கூடாது என்று எண்ணியவர்களுக்கு அவர் ஒரு வீரரானார். ஆஸ்குவித்துக்கு[1] மாறான எதிர்ப்பு அது. பொறுமையும் தைரியமும் சமயம் வரும்போது தமக்கு நிலைத்திருப்பதுபற்றி அவர் தம்மை வியந்து பேசுவதுண்டு. அவருடைய தைரியம் ஓர் அளவுக்குட்பட்டது. தன்னலங் கருதாத உயர்ந்த தைரியம் அவரிடத்தில் இல்லை. பிரிட்டனுடைய நோக்கம் எதுவாக இருக்க வேண்டும என்பது அவர் மனததில் தெளிவாக அமையவில்லை. கர்னல் ரெப்பிங்டன் என்பவர் ஆஸ்குவித்தைக் கீழ்ப்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தில் இரண்டாவது போர் அமைச்சுக்குமுன் குற்றங்கூறினர். சந்தர்ப்பத்தை நன்ருக அறியாது காரியம் நடத்தல், நேரில் அறிந்து செய்வன மறுத்தல்; அனுபவமில்லாத யுத்த தந்திரம் என்பன அவர் கூறிய குற்றங்கள். துருக்கிக்காரர்களைக் கொன்று போரை வெல்ல வேண்டுமென்பது பைத்தியக் கருத்து என்று ரெப்பிங்டன் கூறினார். பழக்கமில்லாத போர்ச் சூழ்ச்சியாளருள் லாயிட் ஜியார்ஜ் தலைமையாயினார். ரெப்பிங்டன் கூறிய பைத்தியக் கருத்து அவருக்கும் உண்டு. ஓர் அயல்நாட்டுக் கூரிய அறிவாளி போரினைப் பற்றிக் கூறியதாவது: “எதிரிகள் நாலு வருடஙகளாகப் போரில் வெற்றிபெறவேண்டும் என்று த்ங்களாலானவரை முயன்ருர்கள்; முயன்றுந் தவறினார்கள். போரை எதிர்த்த கூட்டுக்காரர்கள் போரை இழக்கத் தஙகளாலானமட்டும் முயன்ருர்கள். அவர்களும் தவறினார்கள்” என்ருர். முடிவாகப் போர் என்ற பெரிய இயந்திரம தானே சலித்துக் கீழ்நோக்கி ஓடிற்று. அரசியல் தலைவர்கள் வெற்றி என்பதன் பொருளே இன்னது என்று அறியாது மறுபடியும் ஒருநாளும் போர் கூடாது என்று கூவிக் கொண்டு நிபந்தனைகள் பலவற்றை ஏற்படுத்தினர். லாயிட் ஜியார்ஜ் தாம் ஒரு காலத்திற் கூறிய உயர்ந்த அறிவான

1. Asquith.

கருத்துக்களுக்கெல்லாம் மாறுசெய்தார். அவரே பதிஞன்கு நிபந்தனைகளை ஒழுங்காக நிறைவேற்றுபவர் என்று பலர் நம்பினர். அவருக்கு மாருகவும் உலகுக்குக் கேடாகவும் 1918 டிசம்பரில் பொதுத்தேர்தல் வைத்ததும் அதைத் தாமே நடத்தியதும் அவரது நன்மைக்கு முற்றிலுந் தடையையே ஏற்படுத்தின.

1918-ஆம் ஆண்டில் சமாதான நாளிலும் அதனைத் தொடர்ந்த வாரங்களிலும் எல்லாருடைய உள்ளத்திலும் துன்பத்திலிருந்து விடுதலையான ஆரவமிக்க நன்றி யுணர்ச்சியே ததும்பி நின்றது. வெற்றியினுல் வந்த மகிழ்ச்சியன்று; நாலு ஆண்டுகளாகத் தொந்தரவு செய்து கொண்டிருந்த நஞ்சின் அச்ச நீக்கமாகிய சமாதான முடிவே இயற்கையாகப் போர் முடிவில் எல்லா இடத்திலும் காணப்பட்டது. தலைவர் வில்சன்[1] இங்கிலாந்துக்கு வந்தபோது அவர் வெற்றி பெற்றவராக அல்லாமல் சமாதான ஒற்றுமை உண்டாக்கிய தேவதூதனுகவே லண்டனில் வரவேற்கப்பட்டார். அவர் அளவுக்கு மிஞ்சிய ஆர்வத்தை உண்டுபண்ணினுர். அவரைப் பார்க்கக்கூடிய கூட்டத்திற்கு அளவு இல்லை. வில்சன் வகுத்த முறையில் சமாதானம் வேண்டுமென்பது தேர்தலுக்கு முன்னமே சனங்களது மனப்போக்கில் அமைந்து விட்டது. தேர்தல் அநாவசியமே. அது நீக்கமுடியாதபடி அபாயகரமாய் இருந்தது. அஃது எவ்வளவு அபாயகரமாக இருந்தது என்பதைப் பத்திரிகைகள் போதுமானபடி விளக்கியுள்ளன. ஆனுல் லாயிட் ஜியார்ஜ் எதிர்கால அரசியலில் தமக்கு நன்மை வருவதையே எண்ணிக்கொண்டிருந்தார். அதைக் கருதினுல் தேர்தல் வேண்டியதாயுமிருந்தது. தாராளக் கட்சியார் அவரை நேசிக்கவில்லை. பழைய கொள்கையினிடமிருந்து அவருடைய துணைவர்கள் அதிகப்பேர் வந்தாலும் அவர்களை மட்டும் அவர் நம்பி நிற்கமுடியவில்லை. காரியங்கள் தெளிவடைந்து படையைக் கலைத்தல், வாக்குத்தத்தங்களை

1. President Wilson.

நிறைவேற்றுதல் முதலியவற்றைப்பற்றி விவகாரம் வருவதற்கு முன்னே, வெற்றிபெற்றவர்க்கு அந்நிலைமையில் தேடக்கூடிய நயங்களை அவர் நாடினர். சமாதானக் கூட்டத்துக்குப் போதுமான ஆதரவு இருந்தது. தன்னளவில் முதல் மந்திரியாருக்குப் போதுமான பாதுகாப்பு இல்லை. தேர்தல் காலத்தில் அடங்கிக்கிடந்த உணர்ச்சிகளும் தலையெடுத்து அபாயகரமான நிலையை ஏற்படுத்திக் காரியங்களை நன்றாக முடிப்பதற்கு முற்றிலும் விரோதமாயின.

சாதாரண மக்கள் மனத்தில் உள்ள கலப்புணர்ச்சிகள் அவர் மனத்தில் இகலிக்கொண்டிருந்தன. அவைகளை எல்லாம் அவர் அறிந்து எந்தவிதமான உணர்ச்சியை விரைவாகவும் எளிதாகவும் எழுப்பலாம் என்று தெரிந்தவரே. அவர் அறிவுக்குத் தக்கதென்று தோன்றிய கொள்கைக்கு மிகுதிப்பேர் இணங்கி யிருக்கவும் கூடும். ஆனால் சண்டை முடிவில் ஒற்றுமைப்படுத்தும் உணர்ச்சியும் இடையூறுகளை மறக்கவைக்கும் உணர்ச்சியும் ஏற்படாமல் வேறுவிதமான ஆர்வக் கருத்துக்கள் தலையெடுத்தன. நார்த் கிளிப் பத்திரிகை[1]ப் பகுதிகளில் பகைமைப் பாட்டும், பழிக்குபபழி வாங்குதல் என்னும் உணர்ச்சி யெழுப்பும் முறையீடும் நிறைந்திருந்தன. ஹியூகஸ்[2] என்பவர் தக்க பக்கப்பாட்டுப் பாடிக்கொண்டு இருந்தார். சீட்டு மூலமாய் ஓட்டு வாங்குஞ் செய்திகள் விரிவாய்த் தாக்கப்பட்டன. செர்மன் பணத்தைக் கொண்டு வாக்குரிமை தேடப்படும் என்ற கருத்து பரவலாயிற்று. இவற்றையெல்லாம் எதிர்த்து லாயிட் ஜியார்ஜ் செய்த தேர்தற் பிரசங்கம் தன்னளவில் குற்றமற்றதாயிருந்தது. பதினலு நிபந்தனைகளையும் பற்றி அது சொல்லாமற்போனலும் தவறுக்குக் கொடுக்கும் ஈட்டுப் பணங்களைப்பற்றி அது பேசவில்லை. மிக விரைவாகத் தேர்தல் வெறி அதிகமாயிற்று. அவர் அவருடைய துணைவர்கள் தண்டித்தல், வாக்குத் தத்தங்கள் செய்தல்

1. Northcliffe Press. 2. Mr. H. S. Hughes.

என்னும் முறைகளை அளவுக்கு மிஞ்சிக் கையாளும்படி விட்டுவிட்டார். தமது கடைசி விளம்பரத்தில் படை கலைப்பு, அகில தேச சங்கம் முதலியவைகளைப்பற்றி ஒன்றும் அவர் பேசவில்லை. தோற்றவர்கள் செலவில் நாடு நன்மை யடைவதைப்பற்றிப் பேசினார். கொடுமைகளைத் தண்டிப்பதைப்பற்றியும் கெய்சரை விசாரிப்பதைப்பற்றியும் செலவு முழுவதையும் ஜெர்மனி பொறுப்பதைப்பற்றியும் பேச்சு நிகழ்ந்தது. ஜெர்மனியிடத்திற் பணம் பெறுவது என்பதனுள் எதுவும் அடக்கிப் பேசப்பட்டது. பிரிஸ்டலில் தேர்தலுக்கு நாலுநாளைக்குமுன் செர்மனி சண்டைச் செலவு முழுவதையும் கொடுக்க வேண்டு மென்றும், பாங்கர்களின் உட்கழகம் அது செய்ய முடியுமென்று சொன்னதாகவும், தாம் அதை முடியும்படி செய்யக்கூடும் என்றும் அவர் தெளிவாய்ப் பேசினார்.

260 பேருக்குமேல் அவர் பக்கம் அங்கத்தினர் தெரிந்தெடுக்கப்பட்டமையால் அவருக்கு மிகுந்த எண் கிடைத்தது. சமாதான உடன்படிக்கைப்படி நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்று பேசிய அபேட்சகர் ஒவ்வொருவரையும் அதைரியப்படுத்திக் கெய்சரைத் தூக்க வேண்டும், தேசக் கடன் முழுவதும் செர்மனி கொடுக்க வேண்டுமென்று பேசியவர்களுக்கு முழு ஆதரவு கொடுத்தார். இவ்வகையாக இருவகையிலும் அவர் தேர்தலுக்காகத் தன்னறிவின் உரிமையைப் பண்டமாற்றுப் பண்ணினார். வெற்றி அவருக்காயினும், அவர் பேசியதில் சமாதானம் இல்லை என்று தோன்றியது. வாக்குத் தத்தங்களும் நிபந்தனைகளும் ஒருபுறமிக்க, செர்மனி பணம் கொடுப்பதானால் தங்கம் அல்லது சாமான்கள்தான் அது கொடுக்க முடியும். சாமான்களைக் கொடுப்பதானால் பிரிட்டிஷ் வேலைக்காரர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தொழில் இராது; இந்த இடர்ப்பாட்டை அவர் உணர்ந்தார். அப்போது எதிரிக்குப் போட்ட முடிச்சுத் தம் கழுத்துக்கு நெருங்குவதைக் கண்டார். 1919 பிப்ர

வரியில் தம்முடைய நெருங்கிய நண்பர் ஒருவருக்கு அவர் சொன்னதாவது, "என்னுடைய மதிப்பையும் நன்மையையும் நான் கருதியிருந்தால் சமாதானம் கையெழுத்தானவுடனே நான் வேலையை விட்டு விலகி இருக்கவேண்டும். அது நான் செய்யக்கூடவில்லை" என்றார். அவர் வேலையை விட்டு நீங்க முடியவில்லை என்பது வெளி நிர்ப்பந்தத்தினால் அன்று. தான் விரும்பிய அதிகாரத்தை விட்டுவிட முடியவில்லை. அந்த அதிகாரத்தைத் தக்க காரியத்துக்குப் பயன்படுத்த முடியாதபடி தாமே செய்துகொண்டார். அவருடைய வாழ்க்கையில் 1918-வது வருடத் தேர்தலே அவர் கீழ் இறங்குவதற்கு மாற்று நிலையமாய் விட்டது.

தம்முடைய இரத்தத்திலும் தசையிலுமிருந்து ஒரு கொடிய விலங்கை அவர் படைத்துவிட்டார். அது சமாதான மகாநாட்டுக் காலங்களில் அவருக்கு அனுகூலமாயிருப்பது போலத் தோன்றிற்று. இன்றைக்கு அவர் கிளெமென் சோவைக் குற்றஞ் சொல்லுகிறார். அவரும் வில்சனும் ஒன்று சேர்ந்திருந்தால் புலியை முன்னமே கூட்டில் அடைத்திருக்கலாம். பாரிசிலும் வர்சேல்சிலும் நடந்த நடவடிக்கைகளில் இடையிடையே அவருடைய சுயாதீனமான அறிவின் ஒளி வீசிற்று. ஆனால் அவர் உண்டாக்கிய விலங்குப் பிடியில் அகப்பட்டு அஞ்சி அது தலைமடக்கிக்கொண்டது. ருஷ்யாவுக்குப் புலிற்று என்பவரை அனுப்பிவிட்டு அவரைப்பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாது என்று அவர் மறுத்தமை அவர் உறுதியில் நம்பிக்கை கொண்டவர்களுக்குத் திகில் உண்டாக்கியது. 1918 முதல் 1922 வரை இருந்த கூட்டு ஆதிக்கத்தின் இழிந்த நடவடிக்கைகளில் அவர் கலந்துகொண்டது, ரிடல் பிரபுபோல அவர் தப்பினைப் பொருட்படுத்தாது அவரைச் சார்ந்திருந்தவர்களையும் வேற்றுமைப்படுத்திற்று. 1922 செப்டம்பரில் அவ்வாதிக்கத்தின் வீழ்ச்சி பெரிய காரியமன்று; அரசியல் வல்லாரின் உறுதியால் நம்பிக்கை ஏற்பட்டதே கவனிக்கத்தக்கது.

அப்பொழுது நிகழ்ந்த வீழ்ச்சியிலிருந்து மீட்சி இல்லாமற்போனது வியப்பே. எப்படி விரைவில் அவர் அவ்வளவு தூரம் வீழ்ந்து விட்டார்? அரசியல் வன்மையில் அவருக்கு ஒப்பாரில்லை. ஆஸ்குவித்தினுடைய வேற்றுமையற்ற விசுவாசமும் சர்ச்சிலின் தெளிவான துணிவுத் தவறும் அவருக்கு யாதொரு தடையும் விளைவிக்கவில்லை மனிதர்களிடத்துள்ள நன்மையைத் தம் காரியத்துக்குப் பயன்படுததிக் கொள்வதில் அவரைப் பார்க்கிலும் தக்க சாமர்த்தியம் உடையவர்கள் இல்லை. அவருடைய காந்தசத்தி மிகவும பெயர் பெற்றது. அரசியல் ஆயுதங்களில் எதுவும் அவர் கையாளத்தக்கதே. எவ்வகை உபாயஞ் செய்தாலும் அந்தக் காலத்தில் அதனைப்பற்றிக் குறைகள் கூறுபவர் ஒருவரும் இல்லை.

1909-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் அவர் தயாரித்தபோது கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக ஒரு விபரத்தை பாங்கர் ஒருவரிடம தெளிவாக விசாரிக்க விரும்பினர். அபபொழுது பாங்கர் ஒருவரைக் காலை உணவுக்கு வரவழைத்து அவரிடம் பொருளாட்சி நுட்பங்களை எல்லாம் பள்ளிக்கூடத்துப் பையன்போலப் பாடங் கேட்டுத் தெரிந்துகொண்டார். அவர் அந்த விபரத்தைச் சபையில் விளக்கியபோது எல்லோரும் அவருடைய நுட்ப அறிவைக் கண்டு வியந்தார்கள்.

ஆனல் பிற்காலத்தில் விபரங்களைப்பற்றி அவ்வளவு நுட்பமாக ஆராய்ச்சி செய்வதை விடுத்துச் சொல்வன்மைக்கு வேண்டியவற்றையே அவர் மிகவும் நாடினர். கேட்பவர் மனத்தைப பிணிக்கும் பொருட்டுத் திட்பக் குறை, சொல் மாற்றம் முதலியவற்றை அவர் கையாளத் தொடங்கினர். ரிடல் பிரபுவினிடம் அவர் பேசியபோது அவர் சொல்வன்மையைப்பற்றிச் சொல்லியதாவது, "சில வேளை விவகாரம் தக்க ஆயுதமாய் இருக்கும். சில வேளைகளில் மனத்தில் உள்ள முன் எண்ணத்தை உறுதிப் படுத்த வேண்டியதாயிருக்கும். சில வேளை மக்களைச் செயலுக்கு இழுக்க வேண்டியதாயிருக்கும். சிசரோ

என்பவர் ஒரு கட்சிக்காரனைத் தாக்கினாலும் தாங்கினாலும் அவருடைய பேச்சு சரித்திரத்தில் சொல்வன்மைக்கு அலங்காரமாக இருக்கவேண்டும் என்று கருதவில்லை. அவருடைய நோக்கம் தாக்கப்பட்டவனைத் தண்டனைக் குள்ளாக்குதலும் தாக்கவேண்டியவனை விடுதலை செய்வித்தலுமேயாம். இந்த விதி பொதுமக்களிடம் பேசுவதற்கு மாத்திரமன்று; தனி உரையாடலுக்கும் பொருந்தும்" என்றார். இந்த விதிப்படியே அவர் எப்போதும் வழக்கறிஞர்போல நடந்துகொண்டதாய்த் தெரிகிறது. 1924-ல் ஹவுஸ்மன் என்பவர் அவரை மந்திரத்தால் மனத்தைப் பிணிக்குஞ் சமயபோதகர் போலப் படம் பிடித்துக் காட்டினார். அவர் சமயபோதனை செய்வதற்கு ஒப்பற்ற ஆற்றல் உடையவராக இருந்தாலும் வழக்கறிஞர் தொழிலையே அவர் தழுவிக்கொண்டார்.

அதற்குக் காரணம் ஒவ்வொரு கொள்கையையும் தனித் தனியே பரிசீலனை செய்து வெற்றி யடையும் இயற்கைப்போக்கு மாத்திரமன்று. இலாப நட்டத்தில் அவர் மனம் ஊக்கமாய்ச் சென்றமையே யென்க. அவர் இன்ஷ்யூரன்ஸ் சட்ட சம்பந்தமாகக் கூறிய "நாலணுவுக்கு ஒன்பதணு" என்ற பழமொழி அவருடைய மனப்பாங்கைக் காட்டுவது. சமாதான மாநாட்டில் மற்றவர்களைப் பார்க்கிலும் பிரிட்டனுக்கு அதிக இலாபம் உண்டாக்கியதே அவருக்கு அதிக உவப்பாய் இருந்தது. ஆனாலும் அவர் நாட்டுப்பற்றில் குறைவுடையவரல்லர். நாட்டுப்பற்றிலும் இலாப நோக்கமே அவருக்கு அதிகம்.

வழக்கறிஞருக்குத் துணைசெய்யுந் தொழிலை அவர் பார்த்தபோது நியாயமன்றத்துக்கு வெளியே வழக்குகளைச் சமாதானம் பண்ணுவதில் மிகச் சாமர்த்தியமுடையவராய் விளங்கினார். அவர் சமாதானம் செய்யும் முறையாவது கட்சிக்காரர்களை வெவ்வேறு அறைகளில் வைத்துவிட்டுத் தாம் இடைநடுவே சென்று ஒருவகையார் பேசியதை மற்றொரு வகையாருக்குக் கூறுவதே. அவர் சொல்லுகிற சொல்லில் ஒரு சிறிது இந்தப் பக்கமோ

அந்தப் பக்கமோ மாற்றுவதிலிருந்து நாளடைவில் சமாதானம் உலேதலுங் கூடும் அதேபோலத்தான் அவருடைய மந்திரித் தொழிலிலும் அவருடைய சொல்மாற்றம் அவர் செய்த வேலேக்கு ஊறு செய்தது. குறிப்பிட்ட நேரத்தில் எடுத்த காரியத்தை முற்றுவித்தற்கு அவருடைய திறமைமிக்க அறிவும் கடைப்பிடியும் பயன்பட்டன. காரியம் முடிந்ததும் தாம் பேசியவற்றை மறந்துவிடுவார் ஆக்ஸ்போர்டு மாது அவரைப்பற்றி எழுதிய நூலில் களங்கமின்றிச் சொல்லியிருபபதாவது, "பாதரசம் போன்ற அவருடைய மனம் எப்பொழுதும் ஓடிக்கொண்டே யிருக்கும். சென்றதை நினேக்கவாவது எதிர் காலத்தை எண்ணிப் பார்க்கவாவது அவாககு நேரம் கிடையாது. புதிதாய்ச் சாவிகொடுத்த கடிகாரம் போல அது குறித்த நேரத்தில் ஒழுங்காய் ஓடிக்கொண்டிருக்கும்" என்பதே.

"போர் நினேவுகள்" என்ற அவருடைய நூல் இந்தக் கருத்தையே வாசிப்பவர்களுக்கு உதிப்பிக்கும். அது சொல்லவேண்டியவைகளுக்கு முன்னும் பின்னும் அதிகமாகச் சொல்லி முடிவான மனவெழுச்சியை உண்டாக்குவதில்லே. உவகை உண்டாக்குஞ் செய்திகள் கூறப்படுவதுண்டு. உதாரணமாக், ஜெர்மனியில் பிஸ்மார்க்கும், பிரிட்டனில் டிஸ்ரேலியும், அமெரிக்காவில் ரூஸ்வெல்ட்டும், பாரிசில் கிளமென்சோவும் அதிகாரத்தில் இருந்திருந்தால் இந்த அபாயம் நேர்நதிராது; ஆனல் தற்சமயம் பெரிய அரசுகளிலே அத்தகைய தன்மை வாய்ந்த பெரியார் ஒருவரும் இல்லே என்பதைப்போன்ற பகுதிகள் உவகை தருவனவே. முக்கியமாக அவர் காட்டியிருக்கின்ற உலகத்தில் அழிக்கும் அபாயம் வரும்போது கூடப் பெருமிதமாய் வியக்கத்தக்கதொன்று அழிவதாக அவர் காட்டுவதில்லே. அவருடைய உலகம் சிறுமையுடையதாயும் ஒரே பரிமாணம் உடையதாயும் தோன்றும். கூறுவது சரி. என்று காட்டும் நோக்கமே தவிர அவர் நூலிற் பொருள் நுட்பமாவது நடையழகாவது இல்லே.

அவர் காட்டும் உலகில் அரசியல் தவிர வேறொன்றும் கிடையாது. அரசியற் பகுதிக்கு வெளியே அறிவு, முயற்சி, கருத்து என்பன கலந்து நடத்தும் வாழ்க்கை நடன ஓசை அவர் காதிற் படுவதில்லை அவருடைய ஆளுந்திறன் பலமாக இருப்பதால் அவருடைய சொல்லில் இன்னிசை இருக்கின்றதோ, அது பொய்த் தோற்றமோ என்பது தோன்றும். சொல்லழகை விட்டுவிட்டுக் கருத்திற் சென்றால் உயர்ந்த அறிவுப்பகுதிகள் தெளிவாய் இல்லை என்பது விளங்கும். எதிர்காலத்தில் இவர் சரித்திரம் எழுதுவோருக்கு உயர்ந்த மனோதத்துவ ஆராய்ச்சிக்குரிய சரக்குகள் இவரது பெரும புத்தகங்களிற் காணப்படும். நமக்கு வியப்பாகத் தோன்றுஞ் செய்தியாதெனில், நமக்கு இப்புத்தகங்களைப் பார்க்கும்போது அவை லாயிட் ஜியார்ஜ் உலகைக் கவரக்கூடிய மனிதரல்லர் என்பதைக் காட்டுகின்றன என்பதே.

ஆனால் அவைகள் பெரிய குற்றம் ஒன்றையும் காட்டுகின்றன இக்காலத்தில் ஐரோப்பிய அறிவு வாழ்க்கைக்கு நோய்போன்று இருப்பனவாகிய பெருமித நோக்கக்குறை, பெருங் கலைத் தொழிலில் அடிப்படையான அவநம்பிக்கை என்பவற்றிற்குத் தலைவர் வில்சன் காரணமாவார் என்று பேசும வழக்கம் உண்டு. அப்பொறுப்பில் ஒரு பகுதி அவருக்குரியதே. அதற்குக் காரணம் வர்சேல்சில் சொல் மயக்கத்தில் வல்ல வேல்ஸ் நாட்டினராகிய லாயிட் ஜியார்ஜ், வில்சனுடைய புத்தியைக் குழப்பிவிட்டார். இதில் லாயிட் ஜியார்ஜ் தமக்குப்பின் நீடித்துப் பிற்காலத்தவருக்குத் தம்மை நினைவூட்டக் கூடிய தீமையை ஏற்படுத்திவிட்டார். பொதுவாழ்க்கை பொது நினைவென்னும் பெரிய ஆற்றிற்குக் கிளாஸ்டன் துணைசெய்தது போன்று உதவிய முக்கிய கருத்து யாதெனில் அரசியற் றலைமை என்பது ஒரு பெரிய முக்கியமான தொழில்; அது சில உயர்ந்த அவசியமான முக்கியக் கொள்கைகளோடு சம்பந்தப்பட்டது; அக் கொள்கைகள் வடிவம் மாறினாலும் தன்மை மாறுவதில்லை.

என்ற உண்மைக் கருத்தே யாகும்: அதுபோல இந்தப் பெரிய அரசியல் வாழ்க்கையினர் செய்த முக்கிய உதவி யாதெனில், அரசியல் வல்லார்களுடைய தெளிவான யோக்கிய மதிப்பில் திடமான நமபிக்கையை ஊடறுத்ததும், அரசாங்கம் என்பது ஒரு சூதுவிளையாட்டு; அதில் வெற்றிபெற விரும்புவோர் வஞ்சகம், பொய்யுபசாரம், சாமர்த்தியம் என்பவற்றைத் தமது சுய முன்னேற்றத்திற்குக் கருவிகளாகக் கொள்ளவேணடும என்னுங் கொள்கையைப் பரப்பியதுமேயாம.

குணத்தாலும் உணர்ச்சியாலும் குடியரசுவாதியாய் இருந்த இவர், செய்கையில் குடியரசைக் கலைப்பவராயினர். ஒழுங்கான முன்னேற்றத்துக்கு உரிய பொது வாழ்க்கையை உலைப்பவராக இவர் நடநதிருக்கிறுர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒத்துழைப்பு என்பது நன்னம்பிக்கையைப் பொறுத்துள்ளது. இந்த நாட்டில் தன்னரசின் வளர்ச்சி நாம் நம்முடைய அயலாரிடம் வைத்துள்ள நமபிக்கையைப பொறுத்திருக்கிறது. அந்த அடிப்படையின் மீதுதான் நம்முடைய சுயாதீன உரிமைகள் கட்டப் பட்டிருக்கின்றன. போர் என்பது ஒழுங்கான நடத்தைக் குரிய விதிகளை நிறுத்திவைத்துப் பிறரைத் துன்புறுத்துவதற்கும் பிறர் பொருளை எடுப்பதற்கும் பொய் சொல்வதற்கும் தீத்தொழிலை மிகுதிப்படுத்தற்கும் இடங் கொடுத்து உரிமைகளின் அடிபபடையை அசைத்து விடுகின்றது. அடிப்படையைப பலப்படுத்துவதே போர்க் குப்பின் செய்யும ஆக்கவேலையில் முதற்கடமையாகும். அவ்வேலைக்கு லாயிட் ஜியார்ஜ் தகுதியற்றவர். தற்செயலாய்ப் போரில் அவர் சிறந்தவருமல்லர். தம் காரியசித்திக்குப் போரின் போக்கு எளிதாயும் ஒத்ததாயும் இருப்பதைக் கண்டு சமாதானத்திலும் அதைத் தழுவிக் கொண்டவர். அவருடைய செயலின் பலம் ஐரோப்பிய வாழ்க்கை நிலையிற் காணப்படும். அவர் செயலையும் அவர் அரசியல் நோக்கையும் பார்த்து அவரைப் பெரிய மனிதரென்றும் வெற்றிபெற்ற அரசியல் தலைவர் என்றும்

எண்ணிய தலைமுறையாரின் மனத்திலும் செயலிலும் அவை புகுந்தமை அதைவிடப் பரிதவிக்கத்தக்கதே. அவரைப் பிறர் பின்பற்றுவதற்குக் காரணம் ஊக்கமும் கவர்ச்சியும் அளிக்கும் அவருடைய ஆளுந் திறனே. அவருடைய எதிரிகள், அவருக்கு விரோதமாக எளிதாகக் கோபம் கொள்ளாதபடி, எதிரிகளின் தன்மையைப் பொருத்தமற்றதாயும் பரிகசிக்கத்தக்கதாயும் காட்டக் கூடிய, எளிதாய்க் கண்டிக்கும் ஆற்றல் அவரிடமிருந்தது. ஆனால் எவ்வளவு உற்சாகம் இருந்தாலும கவர்ச்சி இருந் தாலும் எவ்வளவுதூரம் சனங்களைப் பிணிக்கக்கூடிய ஆற்றல் இருந்தாலும வரலாற்றில் அவருக்கு உண்டான விசனிக்கததக்க பேறை அவை மாற்ற முடியா. சேர்ந்தவர் களிடத்தில் உண்மையான பற்றும் போலித்தன மில்லாத சுயாதீனமும் உடைய அவர், உண்மையான குடியரசு வாதியும் பொதுசனப் பிரசாரகராயும் இருந்தும், அவர் எதிர்காலத்துக்கு வைத்துவிட்டுப்போன கருத்துநிதி யாதெனில், குடியரசில் நம்பிக்கைக் குறைவும் தனித் தலைமையாகிய யதேச்சாதிகாரத்துக்குக் கண் மூடிச் சாய்தலுமேயாம்.

# ஃஈ. ராம்சே மாக்டனல்ட்[1]

1895-ல் சௌதாம்டனுக்குத் தொழிற்கட்சி அபேட்சகராக ராம்சே மாக்டனல்ட் நின்றபோது அவருக்கு 866 உரிமைச் சீட்டுகள் கிடைத்தன. 1931-ல் அவர் தொழிற்கட்சியை விட்டபோது பொதுப்பிரதிநிதி சபையில் அக் கட்சிக்கு 288 இடங்கள் கிடைததிருந்தன. இருமுறை அக் கட்சி உத்தியோகத்திலும இருந்தாய்விட்டது. அவர் செய்த வேலையின் உண்மையளவு அதுவாகும். எதிர்காலத்தில் அவர் யாது செய்தபோதிலும் அவர் அதற்குச் சமானமாக யாதொன்றுஞ் செய்ய முடியாது. கலகக் கட்சிக்காரரோடு தம் தொடர்பை ஒழித்த அன்றைக்கே அவர் திரும்பப் பற்றமுடியாததொன்று அவரை விட்டுப்போய்விட்டது. அஃது அவருடைய மேடைப் பிரசங்க முறையீடுகளிலெல்லாம தோன்றும. நாட்டிலுள்ள பேச்சாளிகளில் மிகச் சிறந்த சொற்பொழிவாளராய் அவர் ஒரு காலத்தில் இருந்தார். தொழிற்கட்சி 1929-ல் வெற்றி பெறுவதற்குமுன் வட இஙகிலாநதில் பெரிய கூட்டங்களில் அவருடைய முழக்கத்தைக் கேட்கலாம். மற்போர் வட்டத்தைச் சுற்றி வேடிக்கை பார்க்க வருகின்றவர்கள் நெருங்கிக் கூடுவது போன்ற தேர்தலுக்கு முற்பட்ட கூட்டஙகளில் அவருடைய பெரிய முழக்கத்தைக் காணலாம். பழைய முறையைப் போற்றும் அரசாங்கததையும் அதன் வேலைகளையும் அவர் கண்டிக்கும் போது கயிறு கட்டபபட்ட மேடைக் குள்ளிருந்து ஆத்திரத்தோடு மேலும் கீழுஞ் சென்று ஒலி பெருக்குங் கருவியை இகழ்ந்தொதுக்கித தம்முடைய ஓசை மிகுந்த குரல் பெரிய மண்டபத்தின் மிகத் தூரமான மூலைவரை கேட்கும்படி அவர் முழங்குவார். அக் காலத்தில் அவருடைய முடிப்புரைகள் மிகவும கம்பீரமாய்த் தேர்தலுக்கு வாக்குரிமை கேட்கு

---

1. Ramsay Macdonald

முறையில் இருக்கும். "நாளைக்கு உங்களுக்கு ஒரு பெரிய சமயம் கிடைத்திருக்கிறது. அப்போது நீங்கள் அடிக்கிற அடி இங்கிலாந்து முழுவது மாத்திரமல்லாமல் ஐரோப்பாக் கண்டம் முழுவதும் எதிரொலி கிளப்பும். தேர்தலுக்கு மறுநாள் நீங்கள் வேலைக்குப் போகும்போது தொழிற்கட்சியின் இன்னொரு பெரிய வெற்றியின் இன்னிசைக்குத் தக்கபடி உங்கள் பாதங்களினால் தாளம்போட்டு மகிழுந் திறமையுடையவர்களாவீர்கள். அதற்கு வழிபாருங்கள்!" என்ற சொற்களில் அளவுக்கு மிஞ்சிய வாக்குத்தத்தங்களாவது, ஆக்கவேலை முறைகளாவது காணப்படாமற் போயினும், அவற்றால் ஏதோ ஒருவழியில் உழைக்கிற திரளான மக்கள்பக்கம் தாம் இருப்பதான உணர்ச்சியை அவர் உண்டாக்கிக்கொண்டு வந்தார்.



ராம்சே மாக்டனல்ட்

அவருடைய தோற்றமே மக்களைத் தம் கட்சிக்கு இழுக்கும் விளம்பரம்போல் இருந்தது. அவருடைய குரல் ஆன்ம லாபமான தூது கொண்டுவந்தாற்போலிருந்தது. அவர் நடத்தியது வெறுங்கட்சியல்ல. அஃது ஒரு சமய இயக்கமே. அதன் தேர்தல்களில் தொழிற்கட்சியானது ஒரு விளம்பரத்தையே ஆதரவாகப் பற்றி நின்றது. அவ் விளம்பரத்தில் ராம்சே மாக்டனல்ட் படம் வரைந்து அதன்கீழ் அவரை மறுபடியும் முதன்மந்திரியாக்குங்கள் என்று எழுதியிருந்தது. அஃது ஒன்றே அவர்களுக்குப் போதுமான ஊக்கந் தந்தது.

இப்போது தேசிய அரசாங்கத்தின் மேடைகளிலே ஐய வுணர்ச்சியோடும், வசதிக்குறைவோடும் சொன்மிகுதி

யோடும் சிலவேளை விளங்காமலும் அவர் பேச்சு இருக்கின்றது; நம்பிக்கை போய்விட்டது; முறையீட்டுக்கு ஓசை நயம் இல்லை; தூதின் மதிப்பும் இல்லை.

•

1931 ஆகஸ்டில் தம்முடைய பழைய நண்பர்களை அவர் கைவிட்டது தப்பென்பதன்று; அவர் வேறெதுவுஞ் செய்யமுடியாத நிலையிலிருந்தார். கடுமையான திட்டக் குறைவுகள் செய்தாலொழிய அபாயம் நேரிடும் என்று நம்பினார். அவரோடு ஒத்துழைத்தவர்கள் அவருடைய செட்டு முறையில் பத்தில் ஒன்பது பகுதியை ஒப்புக்கொள்ள விரும்பினர். வேலை யில்லாதவர்களுக்குரிய கொடைத் தொகையில் திட்டக்குறைவு செய்வதை அவர்கள் மறுத்துவிட்டார்கள் ஆனால் அதுதான் முக்கியமான கட்சி வேலையாயிருநதது. வேலை யில்லாதவர்களுடைய குறைகளை நிறைவு செய்வதற்கு ஓர் அரசாங்கத்திற்கும் முடியாது என்று நம்பும்வரையிற் பொதுசனங்களுக்குள் நம்பிக்கை பிறத்தற்கு இடமில்லை. அவர் அப்போது இராசினாமாச் செய்துவிட்டார். மாட்சிமை தங்கிய அரசா தொழிற்கட்சி யரசாங்கம் செய்ய மறுத்ததைச் செய்து முடிக்கக்கூடிய தேசீய அரசாங்கம் அமைக்கும்படி அவரைக் கட்டாயப் படுத்தினர். அவர் அதற்கு இணங்கினர். அத் தருணத்தில் வேறு யாது அவர் செய்யக் கூடும்? ஆனல் எந்த அரசாங்கமும் எதிர்மறைக் கொள்கைகளின்மீது ஐந்து ஆண்டுகள் நிலைக்கமுடியாது. அதற்கு உடன்பாட்டுக் கொள்கை ஒன்று வேண்டும். இது சம்பந்தமாக மாக்டனல்ட் தாம் எநத வேலையை ஆயுள் முழுவதும் எதிர்த்தாரோ, எதற்குத் தம் குண இயற்கையினல் அவர் தகுதியற்றவரோ அந்த வேலையை அவர் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டி யிருந்தது. தம்முடைய அரசியல் வாழ்க்கை முழுவதும் எந்தச் சமுதாய அமைப்பை அழிக்க முயன்றாரோ அதனைப் பாதுகாக்கும் நிலைக்கு அவர் தந்திரமாகக் கொண்டுவரப்பட்டார். அதை எப்படிச் செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை 1934 தொடக்கத்தில் சீகாம் துறைமுகத்தில் சுரங்கக்காரர்

மனைவியர் வேலையில்லாத் திண்டாட்டத்தின் பணக் குறைவைப்பற்றி அவரைக் கேலி பண்ணியபோது "எனக்கே குறைவுகளை நான் ஏற்படுத்திக்கொண்டதுண்டு," என்றார். அவரோடு ஒத்துழைத்த பழங் கொள்கைவாதிகள்கூட நடுங்கினார்கள். பிரசங்க மேடையில் வேலையில்லாத் திண்டாட்ட முடையவர்களுக்குச் செம்புக்காசு குறைந்தது என்றால், அதற்குப் பதிலாக மேல்வரி கொடுப்பவரின் துன்பத்தை எடுத்துப் பேசுவது பொருத்தமாகாது ஒரு வாரத்திற்கு 15-ஷில்லிங் பெறுகிற வேலையில்லாதவனது தியாகத்தை ஒரு வருடத்திற்கு 5,000 பவுன் வரும்படி உடையவனாயிருந்து அது 3,000-த்திற் குறைக்கப்பட்டவனது தியாகத்தோடு ஒப்பிட முடியாது அந்த முறையில் முதலாளி அமைப்பைத் தாங்கிப் பேசமுடியாது. பழைய வாதிகளில் உண்மையை உணர்ந்தவர்கள் அவ்வாறு செய்ய முயலுவதில்லை.

தங்கள் கட்சியை மாற்றுகின்ற எல்லா மனிதர்களுடைய பரிதாப நிலைக்கும் ராம்சே மாக்டனால்ட் ஒரு பிரதிநிதி போல்பவர். ஒருவகையான தேர்தல் முறையிற் பழகினவர்கள் இன்னொரு முறைக்குத் தங்களைத் தகுதியாக்கிக்கொள்ள இயலாதவர்களே. தொழிற்கட்சியின் சார்பாக எதிரியைத் தாக்கவல்ல ஈட்டி முனைபோன்ற ராம்சே மாக்டனால்ட் தேசிய அரசாங்கத்தைத் தாங்கிப் பேசுவதற்கு மிகவும் தகுதியற்றவர் என்பதே தெளிவான செய்தியாகும். தேசீய அரசாங்கத்தின் வேடிக்கை என்னவென்றால் மேடைமீது அதன் தலைவர் அதற்குள்ள கடன்களில் ஒன்றாயிருப்பதே; பொதுப் பிரதிநிதி சபையிலும் இந்த நிலையே அமைந்தது. ராம்சே மாக்டனால்ட் தமக்குரிய இயற்கை நிலையில் அங்கே இல்லை. காலஞ்சென்ற எட்வார்டு மார்ஷ் பாங்கு சொன்னபடி அரசர் சார்பான சட்டமன்றம் மாக்டனால்டுக்கு மிகவும் ஒவ்வாததாகும். ஆயினும் தொழிற்கட்சிக் கூட்டங்களிலும் சகோதரக் குழுவுகளிலும் பழகிய ராம்சே மாக்டனால்டுக்கும், மரியாதையாய் நல்ல ஆடை அணிந்து உபசார முறைப்படி

ஈட்டன் பள்ளிக்கூடத்திலும், அரசப் பாதுகாப்புப் படையிலும் பழகினவர்களுக்கும் உண்மையான தொடர்பு ஏற்படவில்லை. அவர் தேசீய மந்திரியானபின் சட்ட மன்றத்தின் முதல்நாள் தொட்டே புதுச் சபையைக் கவர்வதற்கு அவர் தவறினார். அவருக்கு ஒத்த காற்றுவாடை அங்கே இல்லை. இப்போது அவர் பேசுவது ஏகதேசமே. அவர் அடிக்கடி அங்கே இருப்பதுமில்லை. அங்கேயுள்ள கீழ் அமைச்சர்களில் ஓர் அறிவாளி சொன்னதாவது, 'நான் மன்றத்தில் பேசுவதை ஒருமுறைகூட ராம்சே கேட்கவில்லை' என்பது. மந்திரிக் குழுவிலுள்ள எல்லோரிலும் மிகக் குறைவான வருகைப்பட்டி முதல் மந்திரிக்கே ஏற்பட்டுள்ளது. சுறுசுறுப்பான அரசியல் வேலைகளிலிருந்து விலகிச சபை விவகாரங்களை ஏகதேசம் பார்க்க வருகின்ற நற்பார்வையாளர்போல அவர் சட்ட மன்றத்திற்குப் போகிறார். ஒருநாள் ஜே. எச் தாமஸ் என்பவர் ஏதோ ஒன்றைத தவறாகச் சொன்னதற்காக எதிர்கட்சியார் சட்ட மன்றத்தில் மததியானம் மணி 2-45 முதற்கொண்டு மறுநாள் மணி 1-25 வரை கூட்டம் நடைபெறும்படி செய்தபோது காலை யுணவு நேரத்தில் முதல் மந்திரி எட்டிப் பார்த்தார். எல்லோரும் பசியோடிருந்து வெளியே போகுங் காலத்தில், சிலரிடத்தில் ஓர் அன்பு வார்த்தை சொல்லி எப்படி இருந்தது விவகாரம் என்று [illegible] போய்விட்டார். நகரச் சோலையிலே போய்த் தாம் சற்று உலாவியதாகவும் அஙகே கொஞ்சம் குளிர் தட்டியதாகவும் அவர் சொனனார். சட்ட மன்றத்தில அவர் வரவு அரசிளங் குமரனொருவன் இரவு வெளியே உலாவி மீளும்போது நள்ளிரவில் ரொட்டி சுடுகிற இடததை எட்டிப் பார்த்தது போல இருந்தது. ஓர் அரசமைப்பில் அரசன் இருக்கும் முறையில் மாக்டனால்ட் இப்போது இருநது வருகிறார்; சட்டசபை அங்கததினர் தங்குமிடத்திற்கு அவர் வரும போது யாரும் அவருக்கு இயற்கையாகத தலை குனிவதுண்டு. அவர் மதிப்பான விசேடங்களைச் செவ்வையாகச் செய்கின்றார். ஒரு காட்சிச் சாலையைத் திறந்து வைப்பதில் ஒரு பாவலர் நினைவுக்காகச் செய்யும் விருந்தில் தலைமை

ஙிப்பதில், ஒருவரும் அவரைப் பார்க்கிலுஞ் சிறப்பாகக் டமை செய்ய முடியாது. தேர்தல்களிலெல்லாம் எதேச் ாதிகாரம் போன்ற அதிகாரப்பதவி கொடுக்கப்பட்ட ூவர், இன்னும் அதிகமாக நன்மை செய்யவேண்டுமென்று ாடு எதிர்பார்க்கிறது. அந்நிய அரசுகளோடு காரியங்கள் டத்துவதில் அவர் சிறந்து விளங்குகின்றார். ஐரோப்பா விலும், 1929-ல் அமெரிக்காவுக்குப் போய் வந்தபின் ஐக்கிய மாகாணத்திலும் அவருடைய கீர்த்தி அளவற் றிருக்கிறது ஒரு மகாநாட்டில் தலைமை வகிப்பதில் அவர் மிகச் சிறந்தவர். அதில் இனிய உணர்ச்சி உண்டாக்கவும் எதிர்ப்பட்ட அபிப்பிராயங்களை ஒன்றுபடுத்தவும் செய்யக் கூடிய ஒப்பற்ற ஆற்றலுடையவர். அவரை இப்பொழுது இருக்கிற நிலையை வைத்து நாம் தீர்மானிப்பது நியாய மன்று

திரு. மாக்டனல்ட் குறிப்பிடத்தக்க வாழ்க்கை நடத் தினர். 18-வயதில் லாசிமவுத்[1] என்னும் இடத்திலுள்ள தம் வீட்டை விட்டுக் காசில்லாமலும் நண்பர் ஒருவரும் இல்லாமலும் பிழைப்பதற்கு வழிதேட இலண்டனுக்குச் சென்றார். அங்கே அவர் முதலில் கிரே சத்திரப்பாதைக் கருகிலுள்ள டங்கன் கட்டிடமென்னும் வீடுகளில் இருந்தார். அவர் முதலில் இலண்டன் கிடங்கு ஒன்றில் வாரத்திற்கு 15-ஷில்லிங் சம்பளம் வாங்கிக்கொண்டு எழுத்தாளர் வேலையிலமர்ந்தார் பின்னர் அவர் பள்ளிக் கூட ஆசிரியரானார். பிர்க்பெக் நிலையத்தில் இரவு வகுப்புகளுக்கு உபாத்தியாயரா யிருந்து அறிவுநூல் கற் றார். நீண்டநாள் நோய கண்டு வருந்தியபின் அவர் அரசி யல் வழிக்குத் திரும்பினா. பததிரிகைகளுக்கு எழுதும் வழக்கமுடையவரானார். மேற்போவதற்கு அரசியலும், பத்திரிகையும பிரான்சில் தக்க வழியாக விருந்தாலும் இங்கிலாந்தில் உயர்ந்த பதவிக்கு அப்போது அவை வழி யாக இல்லை. இஸ்லிங்டன் பிரதிநிதியாக வந்த தாரா ளக்கட்சி அங்கத்தினா தாமஸ் லௌ என்பவருககு அவர்

1. Lossimouth.

தனி அமைச்சரானார். அக்காலத்தில் தாராளகட்சி ஒன்றே முற்போக்கான முறையிற் சென்றுகொண்டிருந்தது. அதிலிருந்து பிரிந்து சமுதாயகட்சி[1] ஒன்று உண்டாக்க முயன்றார். அதற்கு மிகவும் தைரியம் வேண்டும். அஃது அவரிடமிருந்தது. சண்டைச் சமயமும் வந்து சேர்ந்தது. 1914 ஆகஸ்டு 3-ஆம் தேதியில் பொதுச்சட்ட மன்றத்தில் அபரிமிதமான கட்சி ஏற்பட்டிருந்தது. எட்வர்டு கிரே என்பவர் அளந்து பேசிய பேச்சில் "தற்கால நிலையில் ஐரோப்பிய சமாதானத்தைப் பாதுகாத்தல் இயலாமற் போகிறது; இந்தச் சோதனைச் சமயத்தில் பெல்ஜிய உடன்படிக்கையின்படி மதிப்பையும் உரிமையையும் காவாமற் போவோமென்றால் எவ்வளவு ஆற்றல் இருந்தாலும் மதிப்பிழந்தபின் அஃது அதிகப் பயன் தராது" என்றார். அவர் உட்காருவதற்குமுன் சண்டை வேண்டுமென்ற பரபரப்புச் சபையெங்கும் பரவிற்று. பழைய முறையில் எதிர்த்தவர்களை ஒருபுறம் அஃது ஒதுக்கிறது. அது தாராளக் கட்சியாரையும் தொழிற்கட்சியாரையும் பற்றிக்கொண்டது. தொழிற்கட்சியில் அப்போது 50-அங்கத்தினருக்குக் குறையாமல் இருந்தனர். சபை முழுவதும் அரசாங்கத்தை அனுசரித்தது. மாக்டனல்டு மாத்திரம் அசையாதிருந்தார். அவரை அந்த வேகம் பாதிக்கவில்லை. அவர் பேசவேண்டிய நேரம் வந்ததும் எழுந்து சொன்னதாவது: "இம்மாலையில் நான் பேசாதிருக்க விரும்புவேன், ஆனால் சந்தர்ப்பங்கள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. நாம் கேட்ட இரண்டு பேச்சுக்களின் சார்பாகச் சுருக்கமாக நான் சில கூறுவேன்: இச்சபையிலிருந்த எண் தனக்கு இருக்கப்பெற்றுப் பேசிய கனவானுடைய பேச்சின் எதிரொலிகள் சரித்திரத்தில் பரம்பரையாகச் செல்லக்கூடியவைகள். பேச்சு மிகவும் பிணிப்பாயிருந்தது. அவர் கூறிய முடிவை நாம் எவ்வளவு எதிர்க்கக்கூடுமானாலும் அவர் முறையீட்டின் இயக்க ஆற்றலை நாம் எதிர்க்க முடியவில்லை. அவர் பேசியது தப்பென்று நான் நினைக்கிறேன். அவர் எந்த அரசாங்கத்திற்குப் பிரதிநிதி

1. Socialist Party.

யாகப் பேசினுரோ அந்த அரசாங்கமும் தவருக இருக்கிறது. சரித்திரத்தின் முடிவான தீர்ப்பு அவர் கூறுவது தவறென்பதேயாகும. நாம் பார்ப்போம். சபையின் உணர்ச்சி நமககு விரோதமா யிருப்பதாக நான் உணர்கின்றேன். அஃது இப்போது தெரியவில்லை. இதேநிலையில் நான முன்னே இருந்திருக்கிறேன். 1906-ல் இத்தகைய நிலை ஏற்பட்டது. மறுபடியும் அது வரும். நாமெல்லோரும் அதை அனுபவிக்கப போகிருேம்; அனுபவிபபோம்'' என்றனர்.

சண்டை வேணடாமென்ற கொள்கையில் அவர் தனியே நின்ருர். அவருடைய கட்சியின் முக்கியப் பகுதி அவரைக் கைவிட்டது. அந்தக் காலஙகளில் அவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கவேண்டும்! ஏதாவது கூட்டத்தில் பேசினல் தணடிககபபட்ட குற்றவாளியைப் போலப் போலீஸ் பாதுகாப்போடு பினவாசல் வழியாக ஓடி வர வேண்டியிருந்தது. ஸ்டாக்ஹோமில் நடநத சமாதான மகாநாட்டுக்கு அவர் போக முயன்ருர். அவர் ஏறிய கப்பலைச் செலுத்துவதற்குரிய மாலுமிகள் அதனைச் செலுத்த மறுத்தார்கள். சமாதானம் வந்தபின்னுங்கூட சனங்களின் அதிருப்தி நீஙகவில்லை. 1918-ல் நடந்த கட்சித் தேர்தலில் லெய்ஸ்டரிலிருந்து 14,000 மிகுந்த எண்களால் ஓட்டுப் பெறருர். 1921-ல் தொழிற்கட்சிக்குப் பாதுகாப்பாயிருந்த இடம் என்று நினைத்த உல்விச் என்னுமிடத்தில் அவர் தேர்தலுக்கு முயன்ருர்; அந்த இடம் 1918-முதல் வில்குரூஸ் என்பவரால் வகிக்கப்பட்டிருநதது. அங்கேயும் போர் மனப்பான்மை இன்னும் இருந்துகொண்டிருந்தது. ருஷ்யாவுக்கு எதிரிடையான பத்திரிகைக்காரர் (ஜிஙகோ பிரஸகாரர்) அம் மனப்பான்மையை மூட்டினர். பாட்டம்லி என்பவர் நியமித்த கூலிகளால் மாக்டனல்ட் வீட்டுக்குப் பின்னுள்ள தோட்டங்கள் வழியாகத் துரத்தப்பட்டார். அங்கேயும் தேர்தல் முடிவில் 638-ஓட்டுகள் எதிரிக்கு அதிகமாகக் கிடைத்தன. இப்போது அவர் மிகவும் மனம நொறுங்கிப்போய் நண்பர்

ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் ‘ என்னுடைய பொதுசன வாழ்க்கை முடிந்துவிட்டது என்று நினைக்கிறேன், ஆங்கில அரசியலைப்பற்றித் திட்டமாகக் கூறக்கூடியது யாதெனில் ஒன்றும் நிச்சயமில்லை என்பதே!’ என்றெழுதினார். இப்படிச் சொல்லி இரண்டு ஆண்டுகள் ஆவதற்குள் அவர் அபரெவான் பிரதிநிதியாகச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது மாத்திரமல்லால் தொழிற்கட்சி அரசாங்கத்தின் முதன் மந்திரியுமானார்.

துரதிர்ஷ்டத்தை எதிர்த்துப் பிடிவாதமாய் இவர் பிடித்த சண்டை அவருடைய வாழ்க்கையிலும் நோக்கததிலும் மிகுதியான பகுதியை நன்றாக விளக்கும். எளிமையும், மதிப்பின்மையும் பெருநோக்கமுடையவர்களுக்கு எத்தன்மையனவாய் இருக்குமென்று அவர் அறிந்தவர். அரசியலில் மதிப்பற்றவர்களின் கடுமையான கதியையும் அவர் தெரிந்தவர். அஃது அவரை மூர்க்கமான உற்சாக மற்ற கடின வடிவமாக்கிற்று. அவர் குற்றங்களை மன்னிக்கலாம்; ஆனால் உடனே மறப்பதில்லை. ஒருவன் தம்மை எதிர்த்துப் பேசினால் அப்பேச்சைப் பேசியவன் மறந்து நெடுநாட்கழித்தும் அவர் மறபபதில்லை என்று அவரை நன்கறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். லாசிமவுத் கோல்ப் விளையாட்டுச் சங்கத்திலிருந்து அவர் ஒருகாலத்தில் கட்டாயப்படுத்தப்பட்டு விலகினார். அதற்குப்பின் பல ஆண்டுகள் கழித்து அவரை அதில் அங்கத்தினராகும்படி கட்டாய அழைப்புகள் மிகுதியாக வந்தும் அவர் அதில் மறுபடியுஞ் சேரவில்லை. வீட்டிற்கருகே யிருநத அந்த இடத்தை விட்டுவிட்டு 15 மைல் மோட்டாரில் போய்த் தம் விடுமுறை நாட்சுற்றினை முடிபபார்.

இவருடைய வாழ்க்கையில் மிகவும பரிதாபமான செய்தி யாதெனில் தீவினைத் தாக்குகளை மென்மைப்படுத்தக்கூடிய அவர் மனைவி இறந்தமையேயாகும். அவர் மார்கரெட் கிளாட்ஸ்டன் என்பவளை மணந்து அவளது பூரண நல்லிணக்கத்தை அனுபவித்தார். அழகான ஆங்கில மொழிகளில் அவளைப்பற்றி அவர் கூறியிருப்பதாவது:

நெருக்கடியிலும் புயலிலும் அவளிடம் போய்ச்சேர்தல் தண்ணீர் அமைதியாயும் வானைப்பார்ததுப் புன்னகை செய்துகொண்டு மிருக்கின்ற பாதுகாப்புத் துறைமுகத் துள் போவதுபோன்றிருக்கும. தேய்ந்து, மாய்ந்து, அடிபட்டு, அதைரியப்பட்டுப பயனற்ற சண்டையை விடுத்துக் குழந்தைகளையும் மீட்டுத் தெய்வங்களையும் பார்க்கத் திரும்பிப்போக நினைத்து பக்கிங்காம்ஷயரில் உள்ள என் வீட்டுக்கு நான் அவளோடு ஒடிபபோவதுண்டு. அவள் அப்போது அவளுடைய ஊக்கமான நம்பிக்கையாலும் திடமான உணர்ச்சியாலும் என்னைக் குணப்படுத்தி மென்மைப்படுத்தி மறுபடியும் அடிக்கவும் அடிபடவும் அனுப்பி விடுவாள். தொழிலாளர் இயக்கத்தில் நான் திடமாய் இருப்பதற்கு எவ்வளவு தூரம் அவள் காரணமெனபதை நான்கூடத் திடமாகச் சொல்ல முடியாது,'' என்றார். 1911-ல் அவள் இறநதது மிகவும் கடுமையான துரதிர்ஷ்டமாய் முடிந்தது. அவரது தனிப்போக்கை அது விளக்குவதாகும். அவரைப்போலத் தன்னந்தனியே இருந்து தனி உணர்ச்சியோடு அவ்வளவு உயர்ந்த நிலையை ஒருவரும் அடையவில்லை. கேட்போரைத் தழுவிப் பேசுவதில் ஒருவரும் அவரைப்போல நன்றாகப் பேசமுடியாதெனினும், சனங்களோடு கலவாதிருப்பதில் அவரைப்போல ஒருவரும் கிடையாது. பொதுப் பிரதிநிதி சபை ஐரோப்பாவிலே மிக நல்ல சங்கமென்று பேசப்படுவது அங்கத்தினருக்கு வேண்டிய வசதிகளினால் மாத்திரமன்று; அவர்களுக்குள்ள ஒப்பற்ற நட்புரிமை காரணமாகவே அவ்வாறு அது பேசப் படுகிறது. மாக்டனல்ட் அந்த உணர்ச்சியைப் பெறவில்லை. தாம் வென்ற உலகத்தில் சுகமாக அவர் இருக்கவில்லை. லாயிட் ஜார்ஜின் பிணிப்பான மகிழ்ச்சியும், பால்டுவினின் அமைதியான கலைநயமும், தாமசின் வேடிக்கையான செருக்குரையும, மாக்டனல்டினிடம் கிடையாது. சட்ட மன்றத்தில் யாராவது எதிர்த்துத் தடை சொன்னால் உடனே கோபித்துக் கொள்வார்; அதை அசட்டை செய்வதும் இல்லை; பலமாகத் தாக்குவதும் இல்லை; விளையாட்டாக எதிர்ப்பதுமில்லை. பயனற்ற குறிப்பு மாத்திரம்

காட்டுவார். அவர் தம்முடைய கட்சியாரோடுகூடச் சொந்தம் பாராட்டிப் பழகவில்லை என்று தெரிகிறது. சமுதாயக் கட்சியார், மேடையின்மீது கண்ணியமாய் வாய் திறவாமலும் பதில் கூறுமலுமிருந்தாலும் வெளியே வந்தபோது உற்சாகமாயும் நட்பாயுமிருப்பார்கள். மாக்டனலட் ஒருபோதும சாய்ந்து கொடுப்பதில்லை. சட்ட மன்றத்தில் பழைய கொள்கையார் அதிகாரத்திலிருந்தபோது ஒரு பலத்த விவகாரம் நடந்து கொண்டிருந்தது. மேடையின் ஒரு பக்கத்தில் தொழிற் கட்சி அங்கத்தினர் ஒருசாரார் மிகுந்த ஊக்கத்தோடு சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள். மற்றொரு முனையில் ராம்சே மாக்டனல்ட் தனியேயிருந்து ஆலோசனை செய்துகொண்டிருந்தார். சில நிமிடங்களுக்குமுன் அவர் யாருக்காக முனைப்புசசண்டை போட்டாரோ அவர்களுக்கும் அவருக்கும அப்போது தொடர்பில்லை. இத்தகைய தனிநிலை வரவர அவருக்கு அதிகரித்தது. அவரோடு ஒத்துழைக்குந் தொழிற் கட்சியார் அவர் தங்களோடு அளவளாவாமல் தனிமைத் தற்பெருமை பாராட்டும் வழக்கமுடையவரென்று அவரைப்பற்றிக் குறைகூறினா. தற்காலத்தில் ஒரு முதல்மந்திரிக்கும் அமைச்சர் குழுவில் உள்ளாருக்கும் இவ்வாறு பிரிவு ஏற்பட்டிராது. தொழிற்கட்சி அரசாங்கத்தின் கடைசிச் சில மாதங்களில் மாக்டனல்ட் தமக்கு அடுத்த அதிகாரத்திலிருந்த ஆர்தர் ஹெண்டர்ஸனேடு அமைச்சா கூட்ட அறைக்கு வெளியே பேசவில்லை. தம் யோசனையைத் தமக்குத்தாமே வைத்துக்கொள்ளும் வழக்கத்தால் ஏதாவதொரு தெளிவாகக் கூறும் திறமும, ஒரு கொள்கையை விளக்கமாய் எடுத்துப் பேசுந் தன்மையும குறைவுபட்டன. அதனால் பயங்கரமான தவறுகள் ஏற்பட்டன.

1924-ல் தம்முடைய அரசாங்கம் ஒழிநதது. அந்தச் சட்ட மன்றத்தில் தாராளக் கட்சியாரும், தொழிற்கட்சியாரும் ஒததுழைப்பதற்குச் சமயம் வாய்ந்திருந்தது. அப்போது அவ்விரு கட்சியாரையும் சரியாக ஒன்றுபடுத்தினல் பழங்கொள்கையாளருக்குப் பதில் கூறக்கூடிய

பொறுப்பான சீர்திருத்த அரசு ஏற்பட்டிருக்கும். அஃது ஏற்படவில்லையே என்று அறிவாளிகள் பலரும் வருந்தினார்கள். பழங்கொள்கையருங்கூட அதைப்பற்றி வருத்தப் பட்டார்கள். ஆனால் ராமசே மாக்டனல்ட் தங்களாதரவைத் தாம் நாடும்படி செய்ததற்காகத் தாராளக்கட்சியாரை மன்னிக்கவில்லை. முதல் தொழிற்கட்சி அரசாங்கத்தின் வசந்தகாலத்திலும் கோடைகாலத்திலும் தம் வெற்றியை நிகழும்படி செய்த கட்சியை அழிக்கச் சமயம் பார்த்திருந்தார். பொதுவுடைமைக் கட்சியாராகிய கேம்பலமீது தொடுத்த வழக்கை மேல்நடத்தாது நிறுத்தியதற்காகப் பழங்கொள்கையாளர் ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தார்கள். தாராளக்கட்சியாளர் ஓர் உட்கழகம தெரிநதெடுத்து நியமிக்கவேண்டு மென்றார்கள். அது சமாதானததுக்கு வழிகாட்டியதாகும. அதன் நன்மை உணராது மாக்டனல்ட் அதை நிநதித்துத் தள்ளினார். தாராளக் கட்சியினரைப்பற்றி அவர் சொன்னதாவது: "அவர்கள நம்மை விசாரணைச் சிறைக்குள் தள்ள முயலுகின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய வழக்கறிஞர்களும், தண்டனை புரிவோர்களும் சாவதானமாக ஒருதலைச் சார்பான குற்றச்சாட்டுகளும் தண்டனைக் கருவிகளும் தயார் செய்கின்றார்கள் இஃதென்ன ஆடம்பர விளையாட்டு? தேர்தல வருவதனால் பொறுப்பு நம்முடையதன்று. சட்டசபை வாக்குரிமையைக் கட்சிபற்றித் தவறாக உபயோகித்ததால் அது நேர்வதாகும். இந்த ஆட்சியை வெறுக்குஞ் சினம் நாட்டில் உள்ள ஒவ்வொரு தொழிற் கட்சி ஆதரவாளர் நெஞ்சிலும் இருக்க வேண்டும். நாடு நம்முடைய வேலையைப்பற்றித் தீர்மானிக்கும்பொழுது நமககு வெற்றிகள் அதிகமாகக் கிடைக்கும். தேர்தல் தொகுதிகளில் தெளிவாகவும் நேர்மையாகவும் நாம் போர் புரிந்தால் அது குழப்பங்களை ஒழித்து நமக்குப் பலங் கொடுக்கும். பொதுப் பிரதிநிதி சபையில் நமக்கு ஏற்படும் பலத்தால் நாம் பிற கட்சிகளோடு சார்ந்து நிற்க வேண்டியதில்லை," என்பதே.

அவர் நினைத்தபடி காரியங்கள் நடக்கவில்லை. அவ கோயில் தூண்களைக் கீழே தள்ளித் தமக்கு ஆதரவாய் இருந்த தாராளக்கட்சியாளரை நசுக்கியது மாத்திரமல்லா மல் தொழிற்கட்சி அரசாங்கத்தையுமே தொலைத்தார். நடந்த தேர்தலில் தாரளக்கட்சிக்கு 40 அங்கத்தினர்களே கிடைத்தனர். பழங்கொள்கையாளருக்கு 200 மிகுந்த எண் கிடைத்தன. மெதுவாயும் கஷ்டப்பட்டும் தாராளக் கட்சி மீளவும் தன் பலத்தை உண்டாக்கிக் கொண்டது. 1924 தேர்தலுக்குப்பின் அதற்கு 59 பேர்தான் இருந் தார்கள். 1929-ல் அவர்களுக்கு 158 பேர்கள் இருந்தார்கள்: அது மறுபடியும் மாக்டனுல்டை முதல் மந்திரியாக்கிற்று. தொழிற்கட்சியும தாராளக்கட்சியும் மறுபடி நன்கு கலப் பதை அவர் கடினமாக்கினார். முதலிலிருந்து தம் துணைவர் களுக்கு அவர் நட்பில்லாதும் மரியாதைக் குறைவாகவும் நடநதார். தேர்தலான முதல் வாரததில் "அரசியலமைப் போடு குரஙகுவிளையாட்டுச் செய்யக்கூடாது," என்று சொன்னார். அவர்கள் கலப்பு மறுபடியும் உடைந்து பழங் கொள்கை மிகுந்த எண்ணேடு மேற்போயிற்று. இப்போது அவர் அதற்குக் கைதியானா. அதன் பயன் விசனிக்கத் தக்கது எதிர்காலக் குடியரசு மிகப பரிதாபமான நிலையை அடையலாம். சீர்திருத்தக் கட்சி போா புரிய முடியா திருப்பதற்குக் காரணம் தேசீய அரசாங்கத் தலைவராகிய மாக்டனுல்டே.

மாக்டனுல்ட் பெரிய மனிதரல்லர்; என்றுலும் அவ ரிடத்தில் சில பெரிய தன்மைகள் இருக்கின்றன. அவை யில்லாமல் தொழிற்கட்சியைப் பள்ளிக்கூடப் பிரசங்க சபை நிலையிலிருநது இனிய குரலும அழகிய தோற்றமும் மாத்திரம் வைத்துக்கொண்டு மந்திரிப் பதவிக்குக் கொண்டு சேர்த்திருக்கமுடியாது தொழிற்கட்சியாளர் எல்லாரினும் அவர் ஒழுக்க உயர்விலும அறிவின் உயர் விலும் மிக மேம்பட்டவர். அவரைக் கண்டால் தொடங்கிய கலகம் நின்றுவிடும். ஆஸ்குவித்துக்குச் சிறபபாக இருக் கும் ஆற்றல் மாக்டனுல்டினிடமும் உண்டு; அஃதாவது

கட்சியின் வலக்கையும் இடக்கையும் ஒன்ருய் உழைக்கும்படி செய்வது. பல ஆண்டுகளாக அவர் சமுதாயக் கட்சியில் மிகுந்த அறிவாளிகளைத் தன்பக்கம் இழுத்துக் கொள்வதோடு தெருமூலையில் நிற்கும் கட்சிக்காரனையும் தள்ளிவிடுவதில்லை. முதல் தொழில்கட்சி அரசாங்கத்தில் அவருடைய ஆற்றல் நன்ருக விளங்கிற்று. அதில் பல வகை ஆற்றல் உடையவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இந்தியாவின் அரசப்பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபு பழங்கொள்கையினர். காலஞ்சென்ற வீட்லீ என்பவர் இடக்கையின் கோடியில் உழைத்த திறமையானவருள் ஒருவர். ஸ்டீபன் வால்ஷ் என்பவர் தொழில் ஒற்றுமைக் கூட்டங்களின் தக்க பிரதிநிதி. சிட்னிவெல் என்பவர் ருஷ்ய எதிர்ப்புச் சங்கமமைத்து ஆர்வம் உண்டாக்கியவர். இவர்களெல்லாரும் ஓர் அமைச்சர் குழுவில் ஒன்று சேர்ந்தனர். இவர்களை ஒன்று சேர்க்குஞ் சாந்துபோல் மாக்டனல்ட் விளங்கினர். 1880 முதல 1890 வரை உள்ள காலங்களில் தாராள அமைச்சர் குழுவைக் கிளாட்ஸ்டன் அடக்கி யாண்டதுபோலத் தொழிற்கட்சி அமைச்சர் குழுவை மாக்டனல்ட் அடக்கியாண்டனர்.

தொழிற்கட்சி இயக்கத்தில் பொதுசன மேடையில் முறையிடுவதற்கு ஆர்வங் கொடுத்தவர் அவரே. அவரைப் போல முன்னும பின்னும் இல்லை. அவர் மத்தியதர வகுப்பார்களை முற்றிலும் கவர்ந்தார். அவர்கள் உதவியில்லாமல் சட்ட மன்றத்தில் முழுவாக்குரிமை உள்ள எக்காலத்திலும் அதிகாரஞ் செலுத்தமுடியாது பொதுவேலை நிறுத்தம் வந்தபோது தொழிற்கட்சியாருக்கும் பிறர்க்கும் உள்ள கலப்பு உடைந்துபோனதுபோலத் தோன்றிற்று. பொதுவேலை நிறுத்தத்தை மாக்டனல்ட் விரும்பவில்லை. அதைப்பற்றி அவர் சொன்னதாவது: "தொழிற்காரியங்களுக்குப் பொதுவேலை நிறுத்தம் தக்க கருவியன்று. அஃது உருவற்றதும் பயனற்றதுமாகும். அது சேரக் கருதும் முடிவு வெற்றியாகாது. அது தொழில் ஒற்றுமையைக் கெடுக்கும். அரசாங்கத்தில் புரட்சி நிகழும்."

என்பதே

தொழிலாளர் இயக்க ஒற்றுமையை எவ்விதத்திலும் நிலைநிறுத்த வேண்டுமென்பதே அவர் நோக்கம். 1926-ல் தொழில் ஒற்றுமை மகாநாட்டின் பொதுச்சபை சண்டையிட வேண்டுமென்று தீர்மானித்தபோது, அவர் அவர்கள் வழிக்குக் குறுக்காய் நிற்கவில்லை. அவர் இலண்டனில் நடந்த அச் சபைக்கூட்டத்தில் சொன்னதாவது: "சரியானமுறை தவறினல் உங்களோடு சேர்ந்து நியாயம் கிடைக்கும் வரை சண்டையிடுவதில் நாங்கள் இணக்கமாகவே இருக்கிறோம்," என்பதாம். அவர் 1931-ல் ராசிநாமாச செய்யும் வரை மிகுந்த உறுதியோடு தம் கட்சிக்கு இணங்கியே நடந்தார். தொழிற்கட்சியும் தாராளக்கட்சியாரைப் பார்க்கிலும் பிரிவுபடத்தக்கதா யிருந்தாலும் அவருடைய கட்டளைபபடி திட்டமாக நடப்பதில் ஒற்றுமைபபட்டுழைத்தது. அவரிடத்தில் அன்பு தோன்ருவிட்டாலும் மரியாதை தோன்றியது அவர் செருக்கும் தன்மை உடையவராயினும் தாம் தோன்றிய வகுப்பை மறப்பதில்லை. அவருடைய மனைவி இலண்டனில் ஏழைப் பகுதியில் கால் நூற்ருண்டுக்கு முன்னே ஏற்படுத்திய தையற்காரச் சங்கம் டவுனிங் தெருவில் இன்றைக்குங் கூடி வருகிறது.

அவா ஆடமபரக்காரரைத தழுவி நடபபவா எனபது தவறு. பெரிய இலண்டன் மாளிகைகளில் அவர் விரும்பிப் போற்றபபடும் விருந்தாளியாயிருந்தாலும், தாழ்மையான வாசிமவுத்திலும் அவர் மிகத் திருப்தியாகவே இருக்கின்றவர். இலண்டன் கூட்டத்தை அவர் அனுபவித்தாலும் மற்றவர்களுக்குள்ள கவாச்சி அவருக்கு அதிலில்லை. அவர் தம சனங்களோடே வாழவிருப்பமுடையவர். அவருக்குச் சொந்த தைரியம் மிக அதிகம். அவர் தம் உடல் நிலையைப்பற்றிக் கவலைப்படுவது காரணமாக அவரைக் கூறுவதுண்டு. சோதனை வந்தபோது சோர்வடைவது போலத் தோன்றினும் அதை எதிர்ப்பவர். சட்ட மன்றம் நடக்கும்போது ஒருநாள் மாலை அவர் கண்ணில் ஏதோ பலமான சிகிச்சை செய்யவேண்டியதாய் இருந்தது.

அப்போது அதைப்பற்றி யாதுங் கவலை காட்டாது அமைச்சர்குழுக் கூட்டத்தில் தலைமை வகித்துக் கொண்டிருந்தார். சிகிச்சை தவறினால் அவருக்குக் குருட்டுத்தன்மை ஏற்படக்கூடுமென்பது அமைச்சர் குழுவில் ஒருவருக்குத்தான் தெரியும். 1931-ல்அவர் கட்சியை விட்டபோது எழுந்த 'துரோகி, துரோகி' என்ற சத்ததைப் பொருட்படுத்தி ஓடிப்போகாமல் பாதுகாப்பான தொழிற்கட்சி இடத்தைத் தேசீய கவர்ன்மெண்டுக்கு இலாபமாகத் திருப்பினர்.

இது புராண வீரர் காலமன்று. காரியங்கள் இக்காலத்தில் மனிதர்களுக்கு மேற்பட்டுச் செல்லக்கூடிய நிலையில் இருப்பன. நயாகரா அருவி வீழ்ச்சியின் பின்புறம் மனிதன் நிற்கமுடியாது. இந்தப் பயங்கரமான ஆண்டுகளில் குழப்பமும் முயற்சியும் அடங்கியபின்தான் அதிகாரம் வகித்த மக்களின் உண்மைநிலை தெரியவரும். அப்பொழுது ராம்சே மாக்டனல்டுக்குக் கண்ணியமான இடமே கிடைக்கும். தாம் செய்வது சரியென்று தெரிந்தால் எந்த நட்பையும் கட்சிச் சார்பையும் பொருட்படுத்தாது, கருதியதையே அவர் பின்பற்றுவார்.

லாயிட் ஜியார்ஜைப்போல எடுத்த காரியத்தில் மாத்திரம் கண்ணுடையரென்று மாக்டனல்டைச் சொல்ல முடியாது. புதுக்கட்சியில் சேர்ந்த பிற்பாடு அவருடைய பழைய ஆற்றல்கள் மறைந்தன. இப்போது அவருடைய பலம போய்விட்டாலும் அதனை, தாம தக்கதென்று கண்ட காரியத்துக்குத் தாராளமாகப் பயன்படுத்தினர் என்பதை நாம மறக்க முடியாது.

# ஏ. முசோலினி

பெனிட்டோ முசோலினி என்பவர் 1883 ஜூலை 29ஆம் ஞாயிற்றுக்கிழமையன்று ரோமாக்ஞ மாகாணத்தில் போர்லி என்பதற்குச் சமீபத்திலுள்ள வாராநோடி காண்டா என்னுஞ் சிறு கிராமத்திற் பிறந்தார். அவர் தகப்பனார் கிராமக் கொல்லன் வேலை பார்ப்பவர்; பலமான சீர்திருத்தக் கருத்துடையவர். அவர் தாயார் அவ்வூர்ப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் இருந்தவர். சக்கரவர்த்தி மிக்ஸ்மில்லியானைச் சுடும்படி செய்த மெக்சிகோ புரட்சிக்காரராகிய பெனிட்டோ ஜூவாரஸ் என்பவர் பேர் அவருக்கு இடப்பட்டது. முசோலினி இளமையில் எந்தக் கூட்டத்திற் பழகினரோ அதற்கு நல்ல அறிகுறியாய் அவர் பேர் அமைந்தது. அவருடைய பெற்றோர்கள் மிகவும் எளியவர்கள். அவர் வாழ்ந்த மாகாணம் சீர்திருத்த மாற்றத்திற்குப் பலமான நிலையமாய் இருந்தது. அவருடைய இளமையிற் பழகினவர்கள சமயத்திலும் அரசியலிலும ஏற்படுத்தப்பட்ட அதிகாரத்திறகு எதிர்க் கலகஞ் செய்பவர்களா யிருந்தனர். பெனிட்டோவின் தகபபனார் அலசாந்த்ரோ என்பவா தமது அரசியற்கொள் கைக்காகச் சிறை சென்றவர். அவரோடு சேர்ந்த சிலரும் சிறை சென்றார்கள். முசோலினி குடுமபத்தார் எப்போதும் கீழான நிலைமையில் இருந்தவர்களல்லர். பதின்மூன்றுவது நூற்றாண்டிலே அவர்களுள் ஒருவர், பொலோகநா[1], குற்றம விசாரிக்கும் நீதிபதியாக இருந்தார். அவர் பெயரிடப்பட்ட தெரு இன்னும் அங்கே இருக்கிறது. காலக் கழிவில் தொடர்ச்சியான உள்நாட்டுப் போர்களின் நிமித்தம அக் குடும்பம் சிதறுபட்டுத் தாழ்மை யடைந்தது. முசோலினி ஒருவர் இலண்டனுக்குச் சென்று அங்கே கவி கட்டுவதிற் சற்றுக் கீர்த்தி பெற்றிருந்தார். தம குடும்பம்

---

1. Bologna

எளிமையாய் இருந்தாலும் பெனிட்டோ இளமையிலேயே தம்முடைய முன்னோர்கள் இத்தாலியச் சரிதப் பெரு நாடகத்தில் தங்கள் கடமையைச் செய்தவர்களென்று உணர்ந்தவராயினர். அவர் எதிர்காலத்தை எவ்வளவு தூரம் நோக்கினாலும் பழமையின் தொடர்பை மறப்பதில்லை.

வீட்டில் அவர் வாழ்க்கை மிகவும் சுகமாகவே இருந் அதன் நினைவே குடும்பத்தின் முக்கியத்தை அவர் வற்புறுத்துவதற்குக் காரணமாயிற்று. அவர் தகப்பனருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களுள் இருவர் ஆண் மக்கள். மூவருள்ளும் பெனிட்டோதான் மூத்தவர். அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கு வறுமை தடையாயில்லை. பிள்ளைகள் பெற்றோர்களிடத்தில் அன்பும் மதிப்பும் உடையவர்கள். முசோலினி தமது இளமைக் காலத்தில் தாயாரிடம் தொடக்கக் கல்வி கற்றுவிட்டுப் பக்கத்துக் கிராமமாகிய பிரிட்டாபியோ என்னும் இடத்திலுள்ள



முசோலினி

பள்ளிக்கூடத்திற் சிலநாட் பயின்றபின், பெயன்ஸா என்னும் இடத்திலுள்ள ஒரு சாலோகியர் மடத்தில் தங்கிக் கல்வி கற்கும்படி அனுப்பப்பட்டார். அங்கேயுள்ள பாதிரிமார்களுக்கு அவர் திருப்திகரமானவராய்த் தெரியவில்லை. வகுப்பில் அவர் நன்றாக வேலை செய்தாலும் வகுப்புக்கு வெளியே அவருடைய நடத்தை திருப்தியாக இல்லை. அவர் கோயிலில் சமயப்பாடல்கள் பாடும் இடத்திற்குப் போவதில்லை; மெழுகுவத்தியின் நாற்றம் தமக்குப் பொறுக்க முடியாது என்றார்; அங்கேயுள்ள புனிதப் பாத்திரங்களின்

ஒளி கண்ணுக்குக் கெடுதியாய் இருந்தது என்றூர்; பேரிசைக் கருவியின் ஓசை தன்னுடைய தியானத்துக்கு இடைஞ்சலாய் இருந்தது என்றூர். அவர் தாயார் தாங்கிப் பேசாவிட்டால் இருமுறை அவர் தள்ளப்பட்டிருப்பார். பள்ளிக்கூடத்தின் கண்டிப்பான ஒழுங்குகள் அவரிடத்தும் அடையாளம காட்டிற்று. சில மனிதருக்கு இளமைக் கல்வி அழுத்தமாகப் பதிவதில்லை. ஆனால் முசோலினி அப்படிப்பட்டவரில்லை. நாடு, குடும்பம, ஒழுக்கம் என்பவற்றின் முக்கியம் இளமையிலேயே அவர் மனத்திற் பதியப்பெற்றது அவருடைய பிற்காலத்துக் கொள்கையில் அது முக்கிய அறிகுறியாய் இருந்தது. பதினைந்து வயதில் பெயன்சா பள்ளிக்கூடத்தை விட்டுப பொர்லிம் போப் பொலுயில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து அங்கே தகுதிப் பத்திரம் பெற்றூர்.

அவர் வேலைக்கு முயன்றபோது அவருடைய புரட்சிக் கருத்துக்கள் அவருக்கு இடைஞ்சலாய் இருந்தன. அது காரணமாகவே பரீடாபபியோவிலுள்ள நகர பரிபாலன சபையில் எழுத்தாளர் வேலை அவருக்குக் கிடையாமற் போய்விட்டது கடைசியாக எரக்கோனில் எமலியா என்பதற்கு அருகே யுள்ள குலால்டியரி என்னுஞ் சிறு பட்டணத்தில் மாதம் 56 ஷில்லிங் அளவு சம்பளத்தில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இந்த வேலையை அவர் ஒருவருடம் பார்த்து வந்தார். அங்கே யிருக்கும்போது ஒழிந்த நேரங்களில் மார்க்ஸ், லசாலே, பாப்போ, சார்ஜுஸ், சோரல் என்பவர்களுடைய நூல்களை அவர் வாசித்தார். அதனுல் குடியரசுக் கட்சியிலிருந்து சமுதாயக் கட்சிக்கு அவர் மாறினுர். ஆனுல் மதாபிமானமுள்ள இத்தாலியராய் அவர் எப்போதும் இருந்துவந்தார். இக்காலத்தில் அவர் செய்த பொதுசனப் பிரசங்கங்களொன்றில் காரிபால்டி என்னும் நாட்டு வீரனைப்பற்றிப் புகழ்ந்து பேசுகையில் தம்முடைய எதிர்காலக் கொள்கையின் அடிப்படையைக் குறிப்பித்தார். ஒரு வருடம் கழிதது வேறு இடத்திற் போய்ப் பிழைக்கக்

கருதினர். இரண்டேடயரைக்கால் ஷில்லிங்கொடு ஸ்விட்சர்லாந்துக்குப் போய் அங்கே சிலகாலம் கொத்துவேலை பார்த்துவந்தார். அதற்குப்பின் அவருடைய வாழ்க்கையில் பலவகையான அனுபவங்கள் ஏற்பட்டன. லாசினி என்னுமிடத்தில் ஒரு சமுதாயக்கட்சிப் பத்திரிகை நிலையத்தில் அவர் வேலைபார்த்தார்; சூரிக் என்னுமிடத்தில் ருஷ்யாவிலிருந்து நாட்டுக்குப் புறம்பே தள்ளப்பட்டவர்களோடு வசித்தார்; கடைசியாக ஸ்விட்சர்லாந்திலிருந்து அவருடைய புரட்சி முயற்சிகளின் நிமித்தம் தள்ளப்பட்டார்.

இத்தாலியின் முதல் மந்திரியாக கர்சன் பிரபுவைச் சந்திப்பதற்கு 1922-ல் லாசனிக்குப் போனபோதுதான் அந்தத் தேசததை மறுபடி போய்ப் பார்த்தார். மார்சேல்சுக்குப்போய் அங்கே வேலை நிறுத்தத்தில் ஆட்களைக் கிளப்பியதற்காகப் பிரான்சிலிருந்து தள்ளப்பட்டார். அவர் இத்தாலிக்குத் திரும்பி வெரோனுவில் உள்ள பெர்சாக்லியரின் 11-வது படையில் இராணுவ ஊழியஞ் செய்தார். அங்கிருக்கும்போது அவருடைய தாயார் இறந்துபோனுர். அதை அவள் பிள்ளைகளெல்லாம் உணர்ந்தார்கள். கொஞ்ச காலத்திற்கு முசோலினி மறுபடியும் ஆசிரியர் வேலை பார்த்தார். அஃது அவருடைய உள்ளத்துக்கு ஒவ்வாதிருந்தமையால் ஆஸ்திரிய ஆட்சிக்குக் கீழ் இருந்த இத்தாலியப் பகுதியாகிய டிரென்ட் என்னுமிடத்துக்குப்போய் செசாரே பெட்டிஸ் என்பவரோடு சேர்ந்து ஒரு பத்திரிகை பிரசுரஞ் செய்தார். அது கடுமையான போக்குடையது. 1866-ல் சண்டை நடந்தபோது ஆஸ்திரியாவுக்கும இத்தாலிக்கும் உள்ள எல்லை எப்படி இருநததோ அப்படித் தற்காலத்தில் இருக்கக் கூடாதென்று அவர் எழுதிய வியாசம் காரணமாக அவரை ஏகாதிபத்திய அரசாங்கத்தாரும் நாட்டு அரசாங்கத்தாரும் நாட்டை விட்டுத் தள்ளினர்.

இக்காலங்களில் அவர் நேரத்தை வீண் போக்காது பல நூல்களை வாசித்ததோடு பல மனிதர்களோடு பழகிப்

பலவற்றின் நிலைமைகளையும அறிந்தார். அவருடைய பிற்கால அரசியலுக்கு அவர் அனுபவம் மிகவும் துணை செய்தது. பிரெஞ்சு மொழியையும் ஜெர்மன் மொழியையும் நன்றாகக் கற்றுக்கொண்டார் நியட்சே என்பவருடைய தததுவக் கொள்கையை அழுத்தமாகப் பயின்றார். டிரெண்டில் இருநதபோது இரண்டு புததகங்கள் எழுத அவருக்கு நேரங் கிடைத்தது. ஒன்று சாண்வுஸ் என்பவருடைய வாழ்க்கைச் சரித்திரம். மற்றொன்று ஒரு நவகதை அஃது ஆஙகிலததில 'பாதிரி மனைவி' எனற பெயரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அவர் தத்துவ சரிதமொன்று எழுதக் கருதினர். அது குறிபபளவி லேயே நின்றுபோய்விட்டது. அவரை மதிக்கும் ஒரு பெண்பிள்ளை அதைப் பார்த்தபோது அதிலுள்ள தத்து வப் பேர்களை முசோலினியை நேசிக்கும் தன் எதிரிகளின் பேர் என்று தப்பாக எண்ணி அதனைத் தீயிற்போட்டு விட்டாள் என்று சொல்வதுண்டு.

முசோலினி ஆஸ்திரியாவிலிருந்து தள்ளப்பட்டு இத் தாலிக்குத் திரும்பியபோது அந்நாடு மிகவும் இடர்ப்பட்ட நிலையிலிருந்தது. இங்கிலாந்திலிருந்து கடன் வாங்கின சட்டமன்ற முறை வேறொன்றாது உடைபட்டுக் கொண்டிருந் தது. அடிப்படையான கொள்கைகள் அனுசரிககப்படா மல் அத் திட்டம் கையாளப்பட்டது. சபையில் சண்டை போடும் கூட்டங்களுக்குள் நீக்குப் போக்குச் செய்யும் முறையில் அரசாங்கம் அமைந்தது. தேர்தல்களில் அவ் விடத்திலுள்ள பெருந்தனக்காரர் தங்கள் சொநதச் சக்தி யால் வெற்றிபெற்றனர். தேர்தல்கள் போலியாகவே இருந்தன. முக்கியமாக நாட்டின் வடபக்கத்தில், தொழில் அபிவிருத்தி காரணமான சமுதாயப் பொருளாதார வகைகள் முக்கியமாகக் கவனித்தற் குரியனவாயின. அவ் வகைகளுக்குச் சரியான முடிவுகள் காண்பதற்கு அப் போது இருந்த அரசியல் யந்திரம் தகுதியற்றதாயிருந்தது. அதனல் எங்கும் கலகமும் சமுதாயக் கொள்கை வளர்ச்சி யும் புரட்சிச் சார்பான வேலை நிறுத்தமும் ஏற்பட்டன.

இந் நிலைமையில் போர்லி என்னுமிடத்தில் பிரசுரிக்கப்பட்ட சமுதாயப் பத்திரிகையாகிய லாலொட்டாடி கிளாசே என்பதின் பத்திராதிபராக முசோலினி நியமிக்கப்பட்டார். இது வேலையளவில் சிறியதாக விருந்தாலும் அவருடைய வாழ்க்கையில் உயர்வதற்கு ஒரு மாற்று நிலையமாயிற்று. ஏனென்றால் அவருக்குப் பொது மக்களிடம் பேச இடங்கிடைத்தது. 1912-ல் மிகவும் பிரசித்திபெற்று மிலானில் வெளியிடப்பட்ட முக்கியச் சமுதாயப் பத்திரிகையாகிய அவநதி என்பதற்கு அவர் பத்திராதிபராகத் தோநதெடுக்கப்பட்டார் இக் காலங்களில் பிரசங்க மேடையிலும் பத்திரிகை மூலமாகவும் இத்தாலியிலுள்ள சமுதாய உடைமைக் கொள்கையாரை நேர் செயல் செய்யவெண்டுமென்று தொடர்ச்சியாக வற்புறுத்திக் கொண்டிருந்தார். துருக்கிச் சண்டைகாலத்தில் அது கூடாது என்று எதிர்த்தவர்களுள் அவர் ஒருவர். கட்சித தலைவர்கள் தாட்சிணியமா யிருப்பதையும் மற்றக் கூட்டத்தாருக்கு விட்டுக் கொடுத்துச் சமாதானம் செய்ததையும் அவர் எதிர்ததார் அவர் இத்தாலியின் முன்னேற்றத்திற்குச் சமுதாயக் கொள்கையை ஒரு கருவியாகக் கருதினரே ஒழிய, அதனையே முடிவான நோக்கமாக எண்ணவில்லை. அக் கொள்கை பல நாடுகளிலும் பரவியிருப்பதையும அவர் பொருட்படுத்தவில்லை.

போர் வந்தது. முசோலினிக்கு வழிபிரித்து விட்டாற் போலாயிற்று. நேரில் ஒரு பக்கமுங் கலவாது நிற்பதால் தம் நாடு உயிரிழந்துவிடும் என்று அவர் எண்ணினர். டிரண்டில் அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தினல் ஆஸ்திரிய ஆட்சியிலிருந்த தம் நாட்டு மக்களிடத்தில் ஒத்த உணர்ச்சியோ டிருந்தார். உத்தியோகத்தில் இருந்த சமுதாயக் கொள்கையினர் சண்டையில் கலவாதிருக்க விரும்பினர். அது முசோலினிக்கு ஒவ்வாமையால் அவந்தி பத்திராதிபர் வேலையை விடுதது்ச் சொந்தத்தில் 'இத்தாலி சனங்கள்' என்ற ஒரு பத்திரிகைக்கு ஆசிரியரானர். 1914 நவம்பரில் சமுதாயக் கட்சியிலிருந்து அவர்

விலக்கப்பட்டார். சமுதாயக் கட்சிக் கூட்டத்துக்கு அவர் போனல் கேலிக் கூக்குரலே அதிகமாயிற்று. அவர் தீர்க்கதரிசியைப்போல அப்போது சொன்னதாவது: "இன்றிரவு நீங்கள் இத்தாலியின் பொதுவான இடங்களிலிருந்தும் தெருக்களிலிருந்தும் என்னை விலக்கியடிக்கப் போகின்றீர்கள். நல்லது; நான் தொடர்ச்சியாகப் பேசத்தான் போகின்றேன். சில ஆண்டுகளுக்குள் இத்தாலியின் பெருந்திரளான சனங்கள் என்னையே பின்பற்றிப் புகழ்ந்து பேசுவார்கள். உங்கள் ஒருவருக்கும் பேச இடமிராது பின்பற்றுவாரும் இலராவர் என்று பந்தயங் கட்டுகிறேன்," என்பதே. இரண்டு ஆண்டுகளுக்குமுன் சோரல் என்பவர் சொன்னதாவது, "நம்முடைய முசோலினி சாதாரணமாகச சமுதாயக் கட்சிக்காரரல்லர். ஒருநாள் ஒரு புனிதப்படைக்குத் தலைமையாக நின்று கையிற் கததியோடு இத்தாலியக் கொடியை உயர்த்தி வாழ்த்துவதை நீங்கள் பார்பபீர்கள்," என்பதாம். அவர் சொன்னது உண்மையாயிற்று.

அவர் தம்முடைய பத்திரிகையில் சண்டையிற் கலக்க வேண்டுமென்று வற்புறுத்தியதன் பயனுக 1917 மே யில் இத்தாலி கூட்டுக் கட்சியாரோடு சேர்ந்து சண்டையில் தலையிட்டனர். முசோலினி சண்டையின் முனணணியில் பல இடங்களில் உழைததார். 1917 பிப்ரவரியில் தப்பி விழுந்த ஒரு குண்டு வெடித்ததினல் அவருக்குப் பலமான காயம் ஏற்பட்டுச் சிலகாலம் மருத்துவச் சாலையில சிகிச்சைக்குள்ளாய்ப் போர்க்குத் தகுதியற்றவரானர். சண்டை முடிந்தபின் சமாதான நிபந்தனைகள் இத்தாலிக்குப் பொதுவாக அதிருப்தி விளைவித்ததாற் பலவிதமான எண்ணங்கள் கிளம்பின. அவற்றிற்குச் சரியான முடிவு சொல்ல அடிக்கடி மாறுகின்ற கூட்டு அரசாங்கங்களால் முடியாமற்போயிற்று பொதுஉடைமைக் கொள்கை மின்னல் விரைவோடு நெடுகப் பரவிற்று. புரட்சி வேலை நிறுத்தங்கள் வழக்கமாய் நடந்தன. வேலையாட்கள் கிட்டங்கிகளைப் பிடிக்கத தொடங்கினர்கள். அவர்கள் குழப்

பத்தை அடக்க அதிகாரிகளுக்கு முடியவில்லை. இத்தாலி ருஷ்யாவைப் பின்பற்றிவிடும் என்று எல்லாரும் பயந்தார்கள்.

செங்கொடி பிடித்த பொது உடைமைக்காரர்களின் ஆதிக்கம் வல்வந்தமாய் அடக்கப்படவேண்டுமென்பதை முசோலினி உணர்ந்தார். அரசாங்கத்தார் அது செய்ய முடியாமற்போனால் தனியாட்கள் கூடி அதைச் செய்ய முற்பட வேண்டுமென்பது அவர் கருத்து. அப்படியே 1919 மார்ச்சு 23-ந் தேதியன்று மிலானில் தம் பத்திரிகை நிலையத்தில் பொது உடைமைக்காரர்களுக்கும் சமுதாயக் கட்சிக்காரர்களுக்கும் விரோதமாக பாசியர்[1] கூட்டம் ஏற்படுத்தப்பட்டது. முதலில் எடுத்துக்கொண்ட வேலை கடினமாயிருந்தது. 1920-ல் எதிர்காலத் தோதல்களில் கால் பங்கு இடங்கள் பொது உடைமைக்காரர்களுக்காயிற்று. எங்கும் கொடுமை எதிர்நின்றது. நாளடைவில் பாசியர் பக்கம் சனங்கள் சாய்ந்தார்கள். சனங்கள் சமாதானமாக வாழக்கிடைத்தாற் போதுமென்று எண்ணினார்கள். அதிகாரிகள் முசோலினிக்குத் தடையேற்படுத்தவில்லை. பாசியர்களும பொது உடைமைக்காரர்களும் சண்டையிட்டுத் தங்களுக்குள் அழிவு செய்துகொள்வார்கள் என்று அதிகாரிகள் எண்ணினர். அதிகாரிகள் இத்தாலியரின் இகழ்ச்சிக் குள்ளானார்கள். 1922 அக்டோபர் 10-இல் கடைசியாகப் பாசியர்கள் அரசியலைத் தாங்கள் கைப்பற்றக் காலம் வந்துவிட்டது என்று முடிவு செய்தார்கள்; அம் மாதக் கடைசியில் உரோம்மீது சென்றார்கள். அரசர் எமமானுவல என்பவர் பழைய கொள்கைக்காரர் விரும்பினபடி இராணுவச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவில்லை. அதனால் பாசியர் வெற்றி பெற்றனர். பழைய ஏற்பாடு வீழ்ந்தொழிநதது சட்டசபையின் நம்பிக்கைத் தீர்மானம் பெற்று முசோலினி தம் கட்சியாளர் செயலை ஒழுங்குபடுத்திக்கொண்டார்.

---

1. Fascist.

இப்போது அதிகாரத்திற்கு வந்த கட்சியின் அடிப்படைக் கொள்கையைப்பற்றி முசோலினி இத்தாலிய அடக்கப் பெருநூலில் பாசியம் என்பதற்கு இலக்கணங் கூறியவிடத்து விளக்கியுள்ளார். 'எல்லாம் அரசாங்கத்தைப பொறுத்திருக்கிறது. உள்ளமோ உடலோ அரசாங்கத்துக்கு வேருக இருப்பிற் பயனற்றதாகும்,' என்பதே பாசியர் கொள்கை. எல்லாம் அரசாங்கமே என்று ஒரு வார்த்தையில் சொல்லக்கூடிய முறையில் அவர்கள் கொள்கை இருப்பினும், ஒவ்வொரு முயற்சியையும் அரசாங்கம் அடக்கியாள்வதென்பது அவர்கள் கருத்தன்று. ஜோசப் சேம்பர்லேன் சொன்னபடி ஒவ்வொருவரும் தமக்குத் தமக்கென முயலாமல் ஒவ்வொருவரும் எல்லாருக்குமாக முயலவேண்டுமென்பதே அதன் கருத்து. ருஷ்யாவில் உள்ள சோவியத் அரசாங்கம் உடல உழைபபாகிய ஒருவகை வேலையை மதிக்கத்தக்கதென்று சொல்லுகிறது. இததாலியிலுள்ள பாசிய அரசு ஒவ்வொருவனும் சமுதாயத்துக்குப் பயன்படும் தொழில் செய்யவேண்டுமென்று சொல்லுகிறது. சமுதாயத்திலிருக்குஞ சனங்களுக்கு வகுப்புச் சண்டை முக்கிய கருவியாகாது என்று அது கூறுகிறது. ஒரு நாட்டின் நன்மைகள் அஙகுள்ள தனி ஆட்களின் நன்மைகளின் தொகுபபென்ற கொள்கையை முசோலினி அங்கீகரிப்பதில்லை. 19 வது நூற்றுண்டில் ஏற்பட்ட அரசாங்கப் பொருளாதாரக் கொள்கைகள் அளவற்ற அவிழ்க்க முடியாத முடிச்சுக்களை உண்டாக்கி அவற்றைத் துணிப்பதற்கு உலகச்சண்டை என்கிற பலிக் கருவியை ஏற்படுத்திவிட்டது என்று முசோலினி கூறினர்.

முசோலினி இல்லாமல் இத்தாலிய நாகரிகமென்னும் கட்டிடம் அதனை அழிக்கக் கருதிய புரட்சிக்காரர்களின் முயற்சியை எதிர்த்துத் தள்ளுதற்குப் போதுமான பலமுடையதே. ஆனல் ஒரு புதிய சமுதாய அரசியற் பொருளாதாரத் திட்டத்தை வகுத்து அமைத்தற்கு வேண்டிய அளவு இத்தாலியர்களுடைய எண்ணத்தை அவர் தவிர வேறெவரும பிணித்திருக்க முடியாது. தமக்கு

ஏற்பட்ட சமய வாய்ப்புகளில் உன்னத நிலைக்கு ஒருவர் உயரும் வழி அவருடைய உண்மைப் பெருமையைக் காட்டுவதாகும். அவர் தக்க பாசியராக அதிகாரத்திற்கு வந்தார். தம்மைத் தக்க இத்தாலியராகக் காட்டிக் கொண்டார். நாலு வல்லரசு உடன்படிக்கை என்பதை அவர் எடுத்துக் கூறியது, அவர் தக்க ஐரோப்பியர் என்று காட்டும். 1934-ல் உலகத்தின் நன்னகரவாசியாக அவர் முன் வந்தார். பாசியக் கட்சியை அதிகாரத்திற்கு உயர்த்திய ஆத்திர உணர்ச்சியில் ஒருசிறிதும் குறையப் பெறுமல், முசோலினி அவசியம் வரும்போது பொறுமையாய்க் காத்திருக்குந் திறமையுடையவர். சந்தையிலும் தெரு மூலையிலும் அவருக்கு வேலையிருந்த நாட்களில் அவர் எவ்வளவு அமைதியாய்த் தொழில் செய்தாரோ அவ்வளவு அமைதியோடு அரசியல் நிர்வாகத்தைப் பார்ப்பதிலும் சலிப்பற்றவர். அவர் பாசியத்தின் ஸ்தாபகர் மாத்திரமல்லர்; தத்துவ ஆசிரியருமாவா.

இப்பொழுது உயிர் வாழ்கின்ற ஒருவரைப்பற்றிப் பிற்காலத்தார் நினைவுகூரத்தக்க அவருடைய முக்கிய செயல் யாதென்று சொல்வது கடினம். ஆனல் எல்லாரையுந தழுவிய பொதுஅரசு என்பதனேடு அவர் பேரை இணைத்துப பேசுதல் எக்காலத்திலும் நிகழக்கூடியதே. அவர் மாத்திரம் அதற்குப் பொறுப்பானவர் என்று சொல்ல முடியாது சோரல் என்பவரிடமிருந்து ஆர்வம் அவருக்கு வந்தது. ரோசானி, பொட்டை முதலியோர்கள் அது செயல்முறையில் நிகழ்வதற்கு மிகுதியும் வேலை செய்திருக்கிருர்கள். ஆனல் முசோலினி இல்லாமல் அது நிலைபெற்றிருக்காது. பாசியம் முற்றிலும் எடுத்துக் கொண்டால் இத்தாலிக்கே உரியது. அஃது ஏற்றுமதி செய்தற்குத் தக்கதன்று. அதன் கொள்கைகளிற் பல எங்கும் தழுவப்படலாம். பொது அரசு என்பது எங்குமே ஆராயப்பட்டு வருகிறது. முதலாளிக்கும், தொழிலாளிக்கும் உள்ள தொடர்புக் கேள்வியை முடிவு செய்வதற்கு அது நன்கு பயன்படலாம். முதலுக்கும், தொழி

ளுக்குமுள்ள பழைய சண்டை இருவருக்கும் நன்மை செய்யாது பொதுவாக அது சமுதாயத்துக்குத் தீங்கு விளைக்குமென்பது முசோலினி கொள்கை. இதனை அடிப் படையாகக்கொண்டு அவர் ஏற்படுத்திய திட்டத்தில் வேலைக்கு வைப்பவர்களும், வேலை பார்ப்பவர்களும் சம பாகம் உடையவர்களாயும் இருவருடைய கடமைகளும் உரிமைகளும் தெளிவாக வகுக்கப்பட்டும் இருப்பதைப் பார்க்கலாம். வேலை நிறுத்தங்களும், வேலை மறுப்புக் களும் பொருத்தமானவை யல்ல அவைகள் பழைய மற்போர்போல இந்நாட்களில் தள்ளத்தக்கன: தொழில் வழக்குகள் ஏற்பட்டபோது நீதி மன்றத்திற்குப் போதல் அவற்றைப் பார்க்கிலும் நல்லது. எல்லாவகையான தொழில்களும் ஒழுங்கு படுத்துவதில் மேற்பார்வைக் கழகங்கள், மகாநாடுகள் கூட்டப்படவேண்டும். மத்திய காலங்களில் தொழிற் பட்டறைகள் இருந்ததுபோலவே இப்போதும் வெவ்வேறு வகைத் தொழிலாளர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஒரு புது உடன்படிக்கை யாவது புதுச் சட்டமாவது ஏற்படுவதற்கு முன் அதற்கு உரியவர்களைக் கலந்துகொள்ளவேண்டும். இந்த யந்திரங் களெல்லாம் இன்னும் முற்றுப் பெறுவிட்டாலும் அவை ஏற்படுவதற்கும், நடைபெறுவதற்கும் காரணம் முசோலினியே.

எதிர்காலத்தில் அவர் கீர்த்திக்கு இது முக்கிய அடிப் படையாகும் பாசியத்துக்கும் சமுதாயக்கொள்கைக்குள் தத்துவத்திலும், செயலளவிலும் வேறுபாடுண்டு எல் லாத் தொழிலையும் அரசாங்கமே நடத்த வேண்டுமென்பது முசோலினி கொள்கை யன்று. முந்திய அரசாங்கங்கள் அரசு நடத்துவதாக வைத்திருந்த சில முயற்சிகளைத் தனி யாட்கள் முயற்சிக்கு விட அவர் இணங்கியுள்ளார். குடிகளின் எல்லாத் தொழில்களையும் அரசு தழுவ வேண்டு மென்பது அவா கொள்கையானாலும், அஃது ஒதுங்கி யிருந்து வேறு வழிகளை தவறிப்போகுங் காலத்திலேதான் அவற்றை அடக்கியாள வேண்டும் என்று அவா கருது

கிறார். முடிவு சொல்வதற்கு அரசுக்கு உரிமை இருப்பது மாத்திரமன்று; அவசியம் வந்தபோதுதான் அது முடிவு சொல்லவேண்டும்.

பொது அரசு ஏற்படுத்தியதற்கு இரண்டாவதாக, கத்தோலிக்க மதத் தலைவரோடு 1929-ல் உடன்படிக்கை செய்து அவர் சமாதானம் பண்ணிக்கொண்டது போற்றத் தக்கது. 1870-ல் மதத் தலைவரின் உலகியல் அதிகாரத்தை ஒழித்தது முதல் இத்தாலிய அரசியலுக்கும் மத நிலையத்துக்கும் சண்டைகள் ஏற்பட்டு அரசாங்கம் பலவீனமடைந்து இரண்டின் எதிரிகளுக்கும் ஏராளமான இலாபம் கிடைத்தது. பொருளாதாரச் சமுதாய சீர்திருத்தங்களிற்போலவே முசோலினி முதல் ஒன்றுஞ் செய்யாதிருந்து தாம் அதிகாரத்திற்கு வந்த மூன்று ஆண்டுகளை கழித்து அந்த விவகாரத்தைப்பற்றிப் பரிசீலனை செய்யத் தொடங்கி, ஆறு ஆண்டுகள் கழித்து உடன்படிக்கைகள் செய்துகொண்டார். எதிர்பட்ட பல கொள்கையுடையவர்கள் தம்மைப் பின்பற்றியதனால் தம்முடைய இடத்தைப் பலப்படுத்திச் சமய விவகாரத்தை முடிவு செய்வதற்கு நாடு ஒற்றுமைப்படும் வரை காத்திருந்தார். இதுசம்பந்தமாக இத்தாலிய அரசராகிய மூன்றாவது விக்டர் எம்மானுவல் என்பவர் ஒத்துழைத்தார். அவரை எப்போதும் முசோலினி கலந்துகொள்வதுண்டு. இத்தாலிய அரசர் கீர்த்தியற்றவர் என்று வெளியே பேசிக் கொண்டாலும் அவ்வரசரின் பரம்பரைத் திறமை பயன் பட்டு வருகிறது. சுயாதீன அரசாங்கமுடைய பாசிய இத்தாலி, கத்தோலிக்க சமய நிலையத்தை விசுவாசமாய ஒப்புக்கொண்டு சில உரிமைகளை அதற்கு விருப்பத் தோடே கொடுத்திருக்கிறது. அதே காலத்திற் பிற சமயங்களும் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று முசோலினி கூறினார். நடுநிலைமையாய்ப் பார்க்கும்போது இவ்வுடன்படிக்கையால் அரசாங்கத்திற்கே அதிக ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் பள்ளிக்கூடங்களில் சமயக் கல்வி, பாதிரிகளல்லாத பிறரால் போதிக்கப்படுகிறது.

கத்தோலிக்கச் சங்கங்கள் விளையாட்டு முயற்சிகளில் ஈடு படுவதில்லை என்று அம் மதத்தலைவர் ஒப்புக்கொண்டிருக் கிறார். கல்வி, விளையாட்டு என்பவற்றின் ஆட்சி இருப தாவது நூற்றாண்டில் இளைஞர்கள்மீது செய்யும் ஆட்சி யாக இருக்கின்றது சமய நிலையத்தார் விரும்பும் குடும்பக் கல்வி தற்காலப் போக்குக்கு ஒத்துவராது. இளைஞர் கல்வி அரசாங்கத்தார் கையிலேதான் தற்காலத்தில் இருக்கவேண்டும் பலமும் மன ஊக்கமும் அளித்து இந் தச் சமயக் கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு இத்தாலிய பாசிய அரசாங்கம் உறுதியாகத் தீர்மானித்திருக்கிறது என்று முசோலினி பேசியுள்ளார்.

அந்நிய அரசு சம்பந்தமான கொள்கை காரண மாகவே முசோலினி இத்தாலிக்கு வெளியே நன்கு அறி யப்படுகிறார் நான்கு வல்லரசின் உடன்படிக்கையிற் கூறிய முடிவுகள் அவருடைய கொள்கையைத் தெரிவிப் பன. சில ஆண்டுகளாக அவைகள் முசோலினியின் மனத் தில் இருந்தன பெரும்போருக்குப் பின் சமாதானத்துக் காக ஏற்பட்ட யந்திரம் அதன் நோக்கத்தை நிறைவேற்றப் போதுமானதாய் இல்லை. பெரிய வல்லரசுகள் அதிகக் காரி யங்களில் ஈடுபட்டிருப்பதால் அவைகளுக்கு அதிக சுயா தீனம் வேண்டும். பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர் மன் என்ற நான்கு அரசுகள் கூடி ஒரு தீர்மானம் செய் தால், அஃது எல்லாராலும் ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருக்கவேண்டும் அவைகளின் பிரதிநிதிகள் கலந்து பேசும் கூட்டத்தில் சிற்றரசுகளுக்கு இடமிருத்தல் கூடாது. இதை அனுபவத்தில் அவர் சொந்தமாக நடத்திக்கொண் டிருந்தார் அகில தேச சங்கம் ஒரு நோயாளிபோலவும் வலிமையற்றதாகவும் அவருக்குத் தோன்றியது. தன் கருத்துக்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், சமாதான உடன்படிக்கைகளை எப்போதும் வற்புறுத்து வதும், அவற்றிற் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பொருத்த மான மாறுதல் செய்யப் பின்வாங்குதலும், எல்லா அரசு களுக்கும் உரிமை கொடுத்தலும் செயல் முறைக்கு

இடைஞ்சலாககூடியன ஆதலால் அவற்றை விடுவிக்க வேண்டுமென்பது அவர் கொள்கை.

முசோலினி திடீரென்று இறந்தால் என்ன நிகழும் என்று கேட்பதுண்டு. ஒன்றிரண்டு ஆண்டுக்கு முன் வரை அவருடைய வேலையின் மிகுதிப்பாகம அவரோடு போயிருக்கு மென்று சொல்லலாம் இப்போது அப்படிச் சொல்வதற்கு இடமில்லை தமக்கு வாரிசாக ஒரு மனிதனைவிடக் கருதாமல் எல்லாவற்றையுந் தழுவும் பொது அரசுத்திட்டத்தை அவர் வகுத்துச் செல்லக் கருதுகின்றார் அவர் சுமக்கின்ற சுமையைத் தமக்குப்பின் வருகின்றவர் சுமக்க முடியாது என்பது அவர் அறிந்ததே அவரைப் போன்ற திறமையுள்ள அரசியல் தலைவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு ஒருவர்தான் தோன்றக்கூடும். ஒரு சரியான திட்டத்தை ஏற்படுத்திவிட்டால் அதை நடத்த அசாததியமான மனிதன் வரவேண்டு மென்பதில்லை. தேசநன்மையைப் பாதுகாக்க ஒரு பலமான நிருவாக சபையே வேண்டியது அஃது அவருடைய அரசியலமைபபில் தானே இடம்பெற்றுள்ளது. சரித்திரப் போக்கில் அளவற்ற திறமைசாலிகள் அரசியல அமைப்புகளை ஏற்படுததக கருதி வகுத்த திட்டங்கள், அவர்களுக்குப பிறகாலத்தில் நடவாமைக்குக் காரணம், அவர்களைபபோன்ற தக்கவர்கள் இல்லாமல் அவை நடைபெறுவாறு அமைக்கப் பட்டமையே யாகும். முசோலினி அதை உணாநது அத் தவறு நேராதபடி அரசியலமைப்பை வகுத்திருப்பது அவருடைய பெருமையை உணர்த்துவதாகும்.

முசோலினி செய்த பல நன்மைகளுள் தக்கபடி உணரப்படாதது ஒன்றுளது அஃதாவது தம் நாட்டு மக்கள் உள்ளததில் நமபிக்கையும் உற்சாகமுங் கலந்த புது உணர்ச்சியைக் கிளப்பியதே யாகும. அவர் அதிகாரத்துக்கு வருவதற்குமுன் இத்தாலி பேர்மாததிரத்திலே தான பெரிய வல்லரசாக இருந்தது. வெளி உலகத்துக்கு அது காட்சிச்சாலையாகவும் சரித்திரக் களஞ்சியமாகவும்

இருந்தது. இத்தாலியர்களே தங்கள் குறைகளை நன்கு அறிந்திருந்தார்கள். சில ஆண்டுகளுக்குள் இவையெல்லாம் மாறிப்போய் அரசியலிலும் தொழிலிலும் மிக முற்போக்கான கொள்கைகள் பரிசீலனை செய்யப்படும் இடம் இத்தாலி என்று எல்லாரும் அதன் துணையை எதிர்பார்க்கும் நிலைக்கு அது வந்துவிட்டது. இத்தாலியர்கள் இப்பொழுது பிற எந்தத்தேசத்து மக்களுக்கும் சமமாகவே தங்களைக் கருதுகின்றார்கள். ஏகாதிபத்தியம் நடத்திய உரோமாபுரியின் தக்க வாரிசாகவே தங்களை அவர்கள் கருதுகின்றனர். மற்ற நாடுகளில் எதேச்சதிகாரங்கள் செலுத்தியவர்கள், அந்நாடுகளின் பொருளாதார வாழ்க்கைச் சாதனங்களை விருத்தி செய்திருக்கின்றார்கள். முசோலினி இத்தாலியர்களுடைய உள்ள நோக்கத்தைச் சீர்திருத்தி அவர்கள் மனப்பான்மையை மாற்றியது போலப் பிறர் எவரும் செய்யவில்லை. இதனாலேயே சரித்திரத்தில் மிகப் பெரிய தலைவர்களுள் ஒருவராக அவர் இருத்தற்குரியவர் என்பது தெளியப்படும்.